Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 15/00

දිනමුරසු වාරමලර් ஜூலை 20-26, 2003

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 520

## இடைக்கால நிர்வாகம் முஸ்லிம்களின்



அரசின் புதிய யோசனை ஏற்பார்களா புலிகள்....?



கதி என்ன?

தமிழ் சினிமாவின் 'செக்ஸ் மாத்திரை'

கூட்டுக் குழம்பினால்...!

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

## இறைவனின் மேலான தன்மை

தேகத்தின் நிலையாத் தன்மை

நமது உடலை விட்டு உயிர் பிரிந்ததும், அது கண்டு அயலவர் எல்லாரும் ஒன்றாகக் கூடி அழுவார்கள். உயிர் விட்டகன்ற அவ்வுடலுக்கு முன்பு சூட்டிய நாமத்தை நீக்கி, அதற்குப் பிணம் என்று பெயரிடுவார்கள். பின்பு அடர்ந்த காட்டினிடையே அவ்வுடலை எடுத்துச் சென்று எரித்து தகனம் செய்துவிடுவார்கள். இக் கருமங்கள் முடிந்து நீராடி தம்மைச் சுத்தம் செய்துகொண்ட பின் சில நாட்கள் செல்ல இறந்தவர் பற்றிய நினைப்பும் அவர்களிடத்தில் இருந்து அகன்றுவிடும்.

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டு
போய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே.

திருமூலர் 'திருமந்திரம்' (145ம் பாடல்)

## ஆன்மீகம்

**கர்த்தரை துதியுங்கள் அவர் நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது. (சங் 136 : 1)**



கர்த்தரை துதியுங்கள். அவர் நல்லவர். அவர் கிருபை என்றுமுள்ளது. இந்த சங்கீதத்தில் ஒரு விசேடம் உள்ளது. இந்த சங்கீதத்தில் உள்ள இருபத்தாறு வசனங்களின் முடிவில் மீண்டும், மீண்டுமாக "அவர் கிருபை என்றுமுள்ளது" எனக் கூறப்படுகின்றது. கர்த்தரின் அற்புதங்களையும், அதிசயங்களையும் தேவனுடைய மகிமையையும் விவரித்த தாவீது ராஜா அதனுடன் கர்த்தரின் கிருபையையும் சேர்த்து "அவர் கிருபை என்றுமுள்ளது" என ஸ்தோத்தரித்து மகிமையின் பிதாவை மேலும் மகிமைப்படுத்துகிறார். மகா உன்னத மான தேவன் களிமண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட மனிதர்கள் மேல் ஆட்கொண்ட அளவில்லாத அன்பே கிருபை என அழைக்கப்படுகிறது.

இந்தக் கிருபையைக் குறித்து தாவீது தியானித்துவிட்டு அந்தக் கிருபை என்றுமுள்ளது எனச் சொல்லுகிறார். "என்றுமுள்ளது" என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன? என்றும் என்ற வார்த்தையானது கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் குறிக்கும் என்பதே அர்த்தமாகும். தேவன் நேற்றும் இன்றும் என்றும் கிருபையுள்ளவர். "நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார். உமது கிருபை பெரியது ஆண்டவரே." (எபி : 13:8)

புஸ்பராஜு, சிலாபம்.

## அனாதைகளை ஆதரிப்போம்!

"அநாதைகளை சீர் பெறச் செய்வது மிகவும் நல்லது என்று (நபியே) நீர் கூறுவீராக?" (திருமறை - 2 : 220)

எவர் அனாதைகளின் உடைமைகளை அநியாயமாக விழுங்குகின்றனரோ அவர்கள் நெருப்பையே கொட்டிக்கொள்கின்றனர். (திருமறை - 4 :10)

ஒரு அனாதை நொந்து அழும்போது, அவன் கண்ணீர்த் துளிகள் அருள் மிக்க அல்லாஹ்வின் திருக் கரத்திலே, விழுகின்றன.

"அனாதைகளைப் பராமரிப்பவன் என்னோடு சுவர்க்கத்தில் இவ்வாறு இருப்பான்" என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் கூறி தங்கள் இரு விரல்களையும் ஒன்றோடொன்று சேர்த்துக் காட்டினார்கள்.

ஒரு மனிதர், இதயம் கடினமாக இரக்கம் காட்டாது இருக்கிறதென்று இறை தூதரவர்களிடம் குறைப்பட்டார். "ஓர் அனாதையின் தலையை அன்போடு தடவிக் கொடும், ஏழைக்கு உணவளியும்" என்று எம்பெருமானார் போதித்தார்கள்.

அனாதை அழகாக அன்புடன் நடத்தப்படும் வீடே முஸ்லிம் இல்லங்களில் மிகச் சிறந்தது. அனாதையைத் துன்புறுத்தும் வீடே முஸ்லிம் வீடுகளில் மிகக் கெட்டதாகும்.

எம்.பாஹிம் ஷேஹ்கு முஹம்மத், மாவனல்லை.

---

### கவிதைப் போட்டி இல. 517

பரிசுக்குரிய கவிதை

#### மூழ்குவது அனைத்தும்

மூழ்குவது கப்பல் மட்டுமா?
புரிந்துணர்வு உடன்படிக்கை –
சமாதான ஒப்பந்தம்
எதிர்கால இலங்கை – எங்கள்
நம்பிக்கை!
அனைத்தும்
மூழ்கடிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

வ.சந்திரபிரசாத், மாமாங்கம்.

**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**



#### மீதி.....?
#### பாதி.....?

நீரினுள்ளே பாதி
வெளியே மீதி!!!
மீதி பாதியாகுதென்பேனா...?
-இல்லை-
பாதி மீதியாகுமென்பேனா...?
சமாதானப் பேச்சு
போலல்லவா இருக்கிறது.

புனிதசீலன் பிரதீபன், மட்டக்களப்பு.

#### சரிவது ஏன்?

அரசியல் சந்தர்ப்பவாத
அலைகளின் மேல்
ஆரவாரமாய்ப் பயணம்
தொடங்கும் ஒப்பந்தங்கள்
போல்
நீ சரிவது
உறுதியற்ற உன் பலவீனத்தாலா
உக்கிரமாய்ப் பனிப்பாறைகள்
மோதுவதாலா?

செல்வி.கௌசிகா மகேந்திரன், சுன்னாகம்.

#### தமிழன் கேட்கிறான்

எதிர்பார்ப்புக்கள்
சுமந்து வந்த
சமாதான கப்பலா?
மூழ்கிறது...?

எஸ்.பி.பாலமுருகன், பதுளை.

#### ஆயுதம் கடத்த...

அன்று கப்பலோட்டிய தமிழன்
இன்றும் கப்பலோட்டுகின்றான்
வெவ்வேறு தேவைக்காக
அன்று ஆட்களை ஏற்ற
இன்று ஆயுதம் கடத்த.

சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.

#### நன் (தீ) மையும்

மூழ்குவது
உணவுக் கப்பலாக இருந்தால்
பல மக்கள் பாதிப்படைவர்
யுத்தக் கப்பலாக இருந்தால்
பல மக்கள் காப்பாற்றப்படுவர்.


சிவப்பிரகாசம் முரளிதரன், தெல்ப்பட்டன்

#### ஏக்கம்!

கடலில் மூழ்கியது கப்பல்
கரையில் அமிழ்கிறது சமாதானம்
இடையில் இழுபடுகிறது
பேச்சுவார்த்தை
மக்கள் நம்பிக்கை
கடலில் மூழ்கும்
கப்பல் போன்றதே!

எஸ்.ஐ.சிதாரா 'கலைமேகம்', மூதூர்–07.

### கவிதைப் போட்டி இல.520




என்னத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 26.07.2003

கவிதைப் போட்டி இல.520
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

#### மிதந்து மரணிக்கிறாய்!

எதற்காக எங்கிருந்து வந்தாய்?
வணிகம் செய்ய வந்தாயா?
மானிடர் தம் வாழ்வை
வழிமறிக்க வந்தாயா?
மிதக்க விட்டோர் யார்?
உன்னை வழிமறித்து
வழியனுப்பி வைத்தோர்தான் யார்?
மானிடர் மரணித்து பின் மிதப்பர்
நீ மட்டும்தான் மிதந்து மரணிக்கிறாய்
நீ மட்டுமா மூழ்கிறாய்?
எங்கள் நம்பிக்கைகளும் தான்!

த.நிதர்ஷன், வவுனியா.

#### கனவு

மூழ்கிக் கொண்டிருப்பது
கப்பல் மட்டுமல்ல
எமது சமாதானக்
கனவுகளும் தான்

தனு, யாழ்ப்பாணம்.

#### எச்சரிக்கை....

கப்பல்கள் உடைந்தால்
அவை மட்டும்தான்
கடலில் அமிழும்.
நிலவும் சமாதானம் உடைந்தால்
இந்த நாடே
தீப்பற்றி எரியும்!

அ.சந்தியாகோ, கண்டி

## உங்கள் பக்கம்

### சமுர்த்திக் கொடுப்பனவில் ஊழல்கள்...

அம்பாறை மாவட்டத்தில் கல்முனைக்கு வடக்கேயுள்ள ஒரு ஊரில், வறிய மக்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். ஏழை மக்களுக்கென்று ஒதுக்கப்பட்ட சமுர்த்தி முத்திரையை சமுர்த்தி ஊழியர்களின் விருப்பப்படி, அவர்களுக்குத் தெரிந்தவர்களுக்குக் கொடுப்பதும், தெரியாதவர்களைப் பார்த்து வெட்டுவதும் நடைபெறுகிறது. பணம் படைத்தவர்கள், வெளிநாட்டுக்குச் சென்றவர்கள் போன்ற உயர்தர வர்க்கத்தினருக்கு முத்திரை கொடுக்கின்றார்கள். அன்றாடம் கூலி வேலை செய்து வாழ்க்கை நடத்தும் வறிய மக்களிடம் சமுர்த்தி ஊழியர்கள் பணம் பெற்றுவிட்டுத்தான் முத்திரை கொடுக்கிறார்கள். இந்த ஊரில் சமுர்த்தி ஊழியர்களின் திருவிளையாடல் அளவுக்கதிகமாகிக்கொண்டே போகிறது.

சேமிப்புப் பணம் செலுத்தாத ஒரு காரணத்தைக் கொண்டு ஏழைகளின் முத்திரைகளை சமுர்த்தி உத்தியோகத்தர்களும், சமுர்த்தி வங்கி முகாமையாளர், சக ஊழியர்களும் சேர்ந்து பதுக்குகின்றனர். சேமிப்புப் பணம் செலுத்தினால்தான் முத்திரை என்று இரண்டாவது அடியையும் ஏழை மக்கள் மீது திணிக்கிறார்கள். மக்களை அங்கும் இங்குமாக அலையவிட்டு வேடிக்கை பார்க்கும் காட்சியோ வேதனையளிக்கிறது. அவர்கள் கொளுத்தும் வெயிலில் அலைந்து, களைத்து கண்ணீருடன் வீடு செல்கிறார்கள். இந்த ஊரில் பணம் படைத்தவர்களுக்கு முதல் மரியாதை; ஏழைகளுக்கோ தகாத வார்த்தைகளால் பதில் அளிக்கிறார்கள்.

இங்கு கிராமசேவகரின் கருத்துப் புறக்கணிக்கப்படுகிறது. அது மட்டுமா? ஊரில் இல்லாதவர்களையும் தேடிப்பிடித்து அவர்களிடம் லஞ்சம் வாங்கிவிட்டு முத்திரை கொடுக்கின்றார்கள். அங்குள்ள சமுர்த்தி வங்கி முகாமையாளர் கேட்கும் கேள்வியோ காதைப் பிளக்கின்றது. வாட்டசாட்டமான இளம் பெண்களைக் கண்டால் நாக்கைத் தொங்க விட்டுக் கொண்டு ஒரு மாதிரியான பார்வையும், சேட்டையும், நையாண்டியும் பண்ணுகிறார்கள். இவர்களின் அட்டகாசம் தலை விரித்துத் தாண்டவமாடுகிறது.

இந்த வங்கியில் சேமிக்கும் பணத்திற்கு வட்டியில்லை. இது படிப்பறிவற்ற ஏழை மக்களை ஏமாற்றும் தந்திரோபாயம். இதற்கு முதற் காரணமே அரைகுறையாக அம்பலத்தில் ஏறிய சமுர்த்தி ஊழியர்களின் நாடகம். இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற் கொள்ள வேண்டும்.

பாதிக்கப்பட்ட பொதுமக்களில் ஒருவன்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -074-514282
தொலை நகல் (Fax):–074-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

## வாசக[ர்] சாலை

என் அன்பு முரசே!
உன் அன்பு வாசகி
ஏடெடுத்து – எழுத்தாணி
கைப்பிடித்து
சீரிய வாழ்த்துப்பாவொன்று
வரைய முனைந்தேன்!
முடியவில்லை – என்னிடம்
வார்த்தைகளில்லை – உனை
வாழ்த்த! – இருந்தும்
என் மனப்பூர்வமான வாழ்த்துக்கள்
என்றென்றும் உனக்காக!
இறைவனின் கடாட்சத்தில்
மேலும் வளர்வாய்!
இது உறுதி.

தோப்பூர் சபா, நல்லூர்.

என் இதயம் கவர்ந்த முரசே!
நீ சுமந்து வரும்
ஆக்கங்கள் அனைத்தும்
சிறப்பானவை. அதிலும்
குறிப்பாக, சிறுகதை,
தேன்கிண்ணம், சிந்தியா பதில்
கவிதைப் போட்டி அனைத்தும்
என்னை மிகவும் கவர்ந்தன.
இனி, உன் சேவை
மேன் மேலும் வளர
என் இதயம் கனிந்த
நல் வாழ்த்துக்கள்.

மா.கலாநிதி, அனலைதீவு.

என் இதயத்தைக் கொள்ளை கொண்ட அபிமான நண்பன் தினமுரசு. உன்னை ஒவ்வொரு வாரமும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடை கிறேன். இன்னும் பல சுவாரஸ்யமான செய்திகள் வரும் என்று எதிர்பார்க்கிறேன்.

எப்.மோசஸ், பொகவந்தலாவ.

தமிழ் பேசும் மக்களின் இதய ஒலியாகிய முரசே! உனது அம்சங்கள் எல்லாம் சிறப்பாக உள்ளன. நீ மேலும் பல அம்சங்களைச் சுமந்து வர எனது வாழ்த்துக்கள்.

த.பிரசாத், ஆவரங்கால்.


**எல்லோர் மனங்களிலும் நீங்கா இடம் பிடித்த தினமுரசே!**

தினமும் என் வாழ்த்துக்கள். சுடச்சுட செய்திகளை அள்ளி வழங்கி சுவை என்ற சுவாரசியத்தை ஊட்டி விடுகின்றாய். அதில் என்னைப் பிரமிக்கவும் வைக்கின்றாய். குறிப்பாக அதிரடி அய்யாத்துரை, காதிலை பூ கந்தசாமி, தேனீர்க் கோப்பைக்குள் இரத்தம் மற்றும் அரசியல் பகுதி போன்றன என்னைப் பிரமிக்க வைக்கின்றன. இதனைத் தொகுத்துப் படைக்கும் முரசின் தூய பணி தொடர என் இனிய வாழ்த்துக்கள்!

இந்திரநாதன் வாசவன், யாழ்ப்பாணம்.

ஆசிரியர்கட்கு,

பல இன்னல்களுக்கு மத்தியில் தினமுரசு வாரமலரை மிகத் திறம்பட தாங்கள் கொண்டு செல்வது தமிழ் கூறும் நல்லுலகத்திற்கும், தமிழை வளர்ப்பதற்கும் பேருதவியாக இருக்கின்றது.



உங்கள் சேவை என்றென்றும் தேவை. அதற்கு எல்லாம் வல்ல இறைவன் துணை நிற்பான். மீண்டும் மீண்டும் உங்களுக்கு எனது நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். நன்றியுடன் விடைபெறுகின்றேன்.

சண்முகம் சிவகுமார், கொட்டகலை.

திரம்பட தொகுத்திடும்
அரசியல் செய்தியும்
அம்பலப் படுத்திடும்
அரசியல் தலைப்பும்
அதிரவைக்கும்
புதிய சமாச்சாரங்கள்.
புதிர்களின், புரிந்தும்
புரியாத புறப்பாடுகள்
இதயங்களை கவர்ந்திட
பக்கம் பக்கமாய்
சொர்க்கங்கள் நிறைந்ததும்
நிறைவைத் தருவதும் – என்றும்
தரமாய் இருப்பதும்....
அதுதான் தினமுரசு.

பெ.விக்னேஸ்வரன், ஹட்டன்.

திக்கெட்டும் மணம் பரப்பி
தித்திக்கும் முரசே!
நீ தாங்கி
வரும் அத்தனை அம்சங்களும்
அருமை, அட்டைப்
படம் முதல் இறுதிப் பக்கம்
வரை அனைத்தும் பிரமாதம்.
அதிலும் கவிதைகளும், கதை
களும், இலக்கிய நயமும்,
இலங்கை நிலைவரமும், பாப்பா
முரசும் பாரத நிலைவரமும்
சரித்திரத் தொடர்களும்,
சர்வதேச
நிகழ்வுகளும், சினிசிட்டி வந்து
உங்கள் பக்கங்களில் தகவல்
சொல்லும் திறனும் அற்புதம்.
முரசே! நீ திசை எட்டும்
தமிழ் பரப்பி இசையோடு
திகழ என்றும்
வாழ்த்துகின்றேன்.

வெற்றிச்சுடர், பசறை.

# மனித உரிமைகளை மதித்து நடக்க வேண்டும்—கனடா புலிகளுக்கு எச்சரிக்கை!

# ஆறு மாதங்களுக்குள் முன்னேற்றம் இல்லையேல் தடை!

**பு**லிகள் மனித உரிமைகளை மதித்து தமது பயங்கரவாத நடவடிக்கைகளை நிறுத்தாவிட்டால் அடுத்து வரும் ஆறு மாதங்களுக்குள் அந்த இயக்கத்தைத் தடை செய்யப் போவதாக கனடா அறிவித்திருக்கும் அதே வேளை ஸ்கன்டினேவிய நாடுகள் பலவும் புலிகளைத் தடை செய்வது குறித்துப் பரிசீலிக்கலாம் என்று இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

புலிகள் மனித உரிமைகளை மதித்து பேச்சுவார்த்தையின் மூலம் சமாதானத் தீர்வைக் காண்பதற்கு முழு அளவிலான அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என எச்சரிக்கை கலந்த தொனியில் வலியுறுத்தியிருக்கும் கனேடிய அரசாங்கம் தற்போதைய சமாதான முயற்சிகளுக்குப் பங்கம் விளையக் கூடாது என்பதற்காக, புலிகளைத் தடை செய்வதை ஆறு மாதங்கள் பிற்போடுவதாகக் கூறியுள்ளது. இந்த கால அளவுக்குள் கனடா எதிர்பார்க்கும் முன்னேற்றங்கள் புலிகள் இயக்கத்திடம் தென்படாதவிடத்து அவ்வியக்கம் கனடாவில் தடை செய்யப்படும் வாய்ப்பிருக்கிறது. லண்டனிலும் அமெரிக்காவிலும் புலிகள் தடை செய்யப்பட்டிருக்கும் நிலையில் அவ்வியக்கத்தின் செயற்பாடுகள் விரிவாக நடக்கும் ஒரே மேற்குலக நாடு கனடா என்பது குறிப்பிடத் தக்கது. கனேடிய நகரங்களில் இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களில் புலிகளின் பின்னணி இருப்பதை அந்த நாட்டு பாதுகாப்புத் தரப்பினர் கண்டறிந்துள்ளதை அடுத்து அங்கே புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதற்கான சாத்தியக்கூறுகள் மேலும் அதிகரித்திருப்பதாக அறிய முடிகிறது.

தற்போதைய போர் நிறுத்த ஒப்பந்தம் யுத்தமாக மாறுமானால் கனடா மட்டுமன்றி வேறு சில ஸ்கன்டினேவிய நாடுகளும் புலிகளைத் தடை செய்வது குறித்து ஆராயலாம் என கொழும்பில் உள்ள இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## தமிழ்க் கூட்டமைப்பினரைத் தெரிவு செய்தது பொது மக்களின் தவறு—புலிகள்

**க**டந்த பொதுத் தேர்தலில் தமிழர்களது பிரச்சினையைத் தென் பகுதி அரசியல் அரங்கில் முழங்கச் செய்து தீர்வு பெற்றுத் தருவோம் என்றும் எமது மக்களின் விடுதலையை இலக்காகக் கொண்டு செயற்படுவோம் என்றும் கூறி தேர்தல் மேடையில் கூட்டமைப்பினர் ஒன்றாக நின்றதனாலேயே நாமும் அவர்களது வெற்றியை உறுதிப்படுத்தி ஆதரித்தோம். ஆனால் இவர்களை எமது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யுங்கள் என்று நாம் ஒரு போதும் மக்களிடம் கூறியது இல்லை எனப் புலிகளின் அரசியல் பிரமுகர் செம்மணன் தெரிவித்துள்ளார்.

கடந்த 12ந் திகதி இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் உரையாற்றும் போது தமிழ்க் கூட்டமைப்பினரைப் புலிகள் குறை கூறி வருவது தொடர்பாக பொதுமகன் ஒருவரின் கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே செம்மணன் இவ்வாறு கூறினார்.

"இந்தக் கூட்டமைப்பை ஆதரிக்கச் சொல்லி எமக்குச் சொன்னது நீங்கள் தானே" எனப் புலிகளிடம் கேட்டபோது ஆத்திரம் அடைந்த புலிப் பிரமுகர், "நாம் எந்தச் சந்தர்ப்பத்திலாவது கூட்டமைப்பிலுள்ள இவர்களைத்தான் ஆதரியுங்கள் என்று கூறவில்லை. இவர்களைத் தெரிவு செய்தது பொதுமக்களாகிய நீங்கள் செய்த பெரும் தவறு" என்று கூறினார்.

இக் கூட்டத்தில் மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன் உட்படப் புலிகளின் அரசியல் பிரிவு உறுப்பினர்கள் பலரும் 100 பேர் வரையிலான பொது மக்களும் கலந்துகொண்டனர். ■

## உளவுப் பிரிவினரின் குடும்பத்தினர் மீது குறி

**இ**ராணுவ புலனாய்வுப் பிரிவினரின் குடும்ப உறுப்பினர்களைக் கடத்திச் செல்லும் திட்டம் ஒன்று குறித்து பாதுகாப்பு வட்டாரங்களில் தகவல் கசிந்துள்ளது.

கொழும்பு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் முக்கியஸ்தரான நிலாப்தீன் என்ற பொலிஸ் அதிகாரியின் பிள்ளைகள் இருவரை அவர்கள் கல்வி கற்கும் பாடசாலையிலிருந்து கடத்திச் செல்ல எடுக்கப்பட்ட முயற்சி ஒன்று கடந்த வாரம் முறியடிக்கப்பட்டது.

பம்பலப்பிட்டி முன்னணிப் பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் இந்த மாணவிகள் குறித்த தகவல்களை அந்தப் பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் மூலமாகப் புலிகள் பெற்றுக் கொண்டுள்ளனர் என விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

கிறிஸ்தவ பாதிரியாரான இந்த ஆசிரியர் வடபகுதிக்குச் சென்றிருந்த சமயம் அவர் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு இந்தத் தகவல்கள் பெறப்பட்டதாகக் கூறப்படுகிறது.

எவ்வாறெனினும் இத்தகையதொரு முயற்சி குறித்துத் தகவல் கசிந்ததோடு தமது இருப்பிடங்களையும் பிள்ளைகளின் பாடசாலைகளையும் உளவுப் பிரிவு அதிகாரிகள் மாற்றி வருவதாகப் பாதுகாப்பு வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. ■

## ஒருமித்துக் குரல்கொடுக்க முஸ்லிம் எம்.பி.கள் இணக்கம்

புலிகளுக்கு அனுப்பி வைப்பதற்கென இடைக்கால நிர்வாக யோசனை ஒன்றை அரசாங்கம் தயாரித்து வரும் அதே வேளை இந்த யோசனையில் முஸ்லிம்களின் கருத்துக்கள் புறக்கணிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒருமித்துச் செயற்படத் தீர்மானித்துள்ளனர்.

உத்தேச நிர்வாகக் கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கான தீர்வு புறந்தள்ளி வைக்கப்படக் கூடாது என்ற கோரிக்கையுடன் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து செயற்படவுள்ளதாக வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்தின் மன்சூர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசியின் வீட்டில் செய்வாய்க் கிழமை முக்கிய கலந்துரையாடல் ஒன்று நடக்கவிருந்தது.

இதில் அமைச்சர் ரவூப் ஹக்கீம், பேரியல் அஷ்ரப், எம்.எச்.மொஹமட், அலவி மௌலானா உட்பட சகல கட்சிகளையும் உள்ளடக்கியதாக முஸ்லிம் எம்.பி.க்கள் கலந்துகொள்வார்கள் என அறிவிக்கப்பட்டிருந்தது. ■

## யாழ் வளாகத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் இரகசியம் பேணுமாறு மாணவர்களிடம் புலிகள் வலியுறுத்தல்

**யா**ழ் பல்கலைக்கழகத்துக்குள் நடைபெறும் முக்கிய நிகழ்வுகள் குறித்து செய்திகள் எவ்வாறு வெளியில் கசிகின்றன. குறிப்பாக 'தினமுரசு' பத்திரிகைக்கு இச் செய்திகள் எவ்வாறு கிடைக்கின்றன என தங்களுக்குத் தகவல் அறிந்து கூறுமாறு புலிகள் யாழ் பல்கலைக்கழகத்தில் உள்ள தமது ஆதரவாளர்களைக் கேட்டுள்ளனர்.

அண்மைக் காலமாகப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் நிகழ்வுகளைக் கண்டறிந்தும் அவற்றைப் பிரசுரித்தும் வருகிறது ஒரு தமிழ்ப் பத்திரிகை. இது பத்திரிகைத் துறையின் வேலைதான். இருந்தாலும் எமது மாணவர்கள்தான் இத் தகவல்களை வெளியிட்டு வருகிறார்கள் என்பது தெரிகிறது. அதுவும் மாணவர் ஒன்றியத்தினருடன் அடிக்கடி நடைபெறும் புலிகளின் சந்திப்புகள் பற்றிய செய்திகளையெல்லாம் அறிந்து கொள்வது மட்டுமல்லாமல், அக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள் தொடர்பான தகவல்களும் வெளியே செல்கின்றன. இது ஒன்றியத்தின் ஓட்டை, கட்டுக்கோப்பற்ற தன்மையையே காட்டுகிறது என்று புலிகள் பல்கலைக்கழக சமூகத்தைச் சாடியுள்ளனர்.

மாணவர்கள் சிலர் வேண்டும் என்றோ அல்லது திட்டமிட்ட செயற்பாடுகளின் மூலமாகவோ இத்தகைய தகவல்களை வெளிப்படுத்தி வருவதனால் பல மாணவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. இதனால் பலர் செயற்பாடுகளில் இறங்க மறுத்து வருகின்றனர். இதைக் கட்டுப்படுத்தி இரகசியங்களைப் பேணிப் பாதுகாக்குமாறு புலிகள் பல்கலைக்கழக மாணவர்களை வலியுறுத்தியுள்ளனர். ■

## புலி உறுப்பினரின் கொலை

## 'இயக்கத்தின் மரண தண்டனை'

**ம**ட்டக்களப்பில் கடந்த வாரம் சுட்டுக் கொல்லப்பட்ட வேலுப்பிள்ளை பரணிதரன் என்ற வாலிபரின் கொலை புலிகளாலேயே மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிய வருகிறது. இவர் புலிகளின் அண்மைக்கால மாற்றுக் கட்சி உறுப்பினர்களின் கொலைகள் தொடர்பாகப் பல தகவல்களை அறிந்து வைத்திருந்தவர் என்றும் இதனாலேயே பரணிதரன் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

மே மாதம் 19ம் திகதி புதூர் பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட தேசிய துணைப்படை உறுப்பினர் நவசூரியம் என்பவரின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட பரணிதரன் பிணையில் விடுதலையாகி இருந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது. பொலிஸ் பாதுகாப்பில் இருந்து விடுவிக்கப்பட்டதை அடுத்து இவரது நடவடிக்கைகளில் புலிகள் சந்தேகம் கொண்டதாகத் தெரியவருகிறது. அத்துடன் சில பெண் புலி உறுப்பினர்களோடு இவர் கொண்டிருந்த தொடர்புகளும் இவரது கொலைக்குக் காரணம் எனப் புலிகளின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ■

## கண்காணிப்புக் குழு உப தலைவரின் கருத்தில் புலிகள் அதிருப்தி

**தா**ம் வழங்கும் தீர்ப்புகளுடன் புலிகள் ஒத்துழைத்துச் செயற்படுகிறார்கள் இல்லை என்று இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டுத் தொடர்பாக புலிகள் கடும் அதிருப்தி அடைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் முதல் முறையாக ஸ்கன்டினேவிய கண்காணிப்பாளர்கள் புலிகளை இவ்வாறு நேரடியாகக் குற்றஞ் சொல்லியிருக்கிறார்கள்.

திங்களன்று ராய்ட்டர் செய்திச் சேவைக்குக் கருத்து வெளியிட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உப தலைவர் ஹப்றுக் ஹோக்லன்ட் புலிகள் தங்களுடன் ஒத்துழைக்கவில்லை என்றும் அரசாங்கம் எப்பொழுதும் தாங்கள் வழங்கும் தீர்ப்புகளுடன் ஒருமித்துச் செயற்படுவதாகவும் கூறியிருந்தார். புலிகள் எமது தீர்ப்புகளை ஏற்று நடக்க வேண்டும் அன்றேல் அது குறித்து நாம் மீள் பரிசீலனை செய்ய வேண்டி வரும் என்று அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

கிண்ணியா மணிராசகுளம் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகள் அமைத்திருக்கும் முகாமை அகற்றுமாறு பல தடவைகள் கண்காணிப்புக் குழுவினால் விடுக்கப்பட்ட வேண்டுகோள்களைப் புலிகள் நிராகரித்துவிட்டனர். இந்தப் பின்னணியிலேயே கண்காணிப்புக் குழுவின் உப தலைவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

சர்வதேச கண்காணிப்பாளர்கள் ராய்ட்டர் போன்ற சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றிற்கு இவ்வாறு கூறியிருப்பது புலிகளுக்கு உலக அரங்கில் மோசமான அவப் பெயரைப் பெற்றுக் கொடுக்கும் என்பதால் இது தொடர்பாகப் புலிகள் தரப்பு கடும் அதிருப்தி கொண்டுள்ளதாக அறியக் கிடைக்கிறது.

அடுத்த தடவை நோர்வே அதிகாரிகள் புலிகளின் அரசியல் பிரிவு முக்கியஸ்தர்களைச் சந்திக்கும்போது இது குறித்து அதிருப்தி தெரிவிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ■

# மோதல், கருத்து முரண்பாடுகளின் உறைவிடமாக ஐ.தே.க. அமைச்சரவை

## ஒரே விருந்துபசாரத்தில் அமைச்சர்களை ஒன்று சேர்க்க முடியாத நிலையில் பிரதமர்

**ஐ**க்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கிடையிலான முறுகல் நிலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் பெருமளவில் மோதிக்கொள்ளும் அதே வேளை அமைச்சுப் பொறுப்புக்களுக்காகவும் திணைக்கள, கூட்டுத்ததாபன நிருவாகங்களுக்காகவும் பனிப்போர்கள் பல அரசாங்கத்துக்குள் நடக்கின்றன.

கடந்த வாரம் தனது பதவியை இராஜினாமாச் செய்யுமளவு விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்ட அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்காவுக்கும் நிதி அமைச்சின் அதிகாரிகளுக்குமிடையிலான முறுகல் இன்னும் முடிந்தபாடில்லை.

கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கும் எஸ்.பி.திஸாநாயக்காவுக்கும் இடையில் கருத்து முரண்பாடு வலுப்பெற்றுள்ளது. கெமி திரிய என்ற கிராமிய பொருளாதார அபிவிருத்தி செயற்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதில் இந்த இருவரும் மோதி வருகின்றனர். இறுதியில் இந்தத் திட்டத்தை அமைச்சர் திஸாநாயக்காவின் சமுர்த்தி அமைச்சின் கீழ் ஒப்படைத்துள்ள பந்துல குணவர்த்தன எஸ்.பி.ற்கு வேண்டுமாயின் எனது அமைச்சு முழுவதையும் பொறுப்பேற்கச் சொல்லுங்கள் என்று கூறிவிட்டு வெளிநாடு சென்றிருக்கிறார்.

அமைச்சர் மஹிந்த விஜேயசேகர தென்னிலங்கையின் மீனவர் தொழிற்துறையில் மேற்கொண்டு வருவதாகக் கூறப்படும் பாரிய ஊழல் மோசடிகள் குறித்து விசாரணை நடத்த முடியாத சங்கடத்தில் பிரதமர் இருப்பதாக பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சீநோர் நிறுவனத்தின் அதிகாரம் குறித்து புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவும், இந்து கலாசார அமைச்சர் ரி.மகேஸ்வரனும் தங்களுக்குள் கடும் வாக்குவாதங்களோடு முரண்பட்டு நிற்கின்றனர். இது தவிர மேலும் அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் மோசமான கருத்து முரண்பாடுகளும் மனத்தாங்கல்களும் இருந்து வருகின்றன.

இவற்றைக் களையும் நோக்குடன் தனது அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்குமாகச் சேர்த்து விருந்துபசாரம் ஒன்றை அலரிமாளிகையில் ஒழுங்கு செய்ய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்தார். ஆனால் அப்படி ஓரிடத்தில் எல்லோரையும் ஒன்றுகூட வைப்பது அத்தனை இலகுவான காரியம் அல்ல என்பது அவருக்கு ஏற்பாடுகளின் போதுதான் தெரிய வந்தது.

அமைச்சர்கள் குறித்து பிரதமரிடம் கூறுவதற்கு தங்களுக்கு நிறையப் புகார்கள் இருப்பதாகக் கூறும் பிரதி அமைச்சர்கள் தனியான விருந்துபசாரத்தை பிரதி அமைச்சர்களுக்கென நடத்துமாறு கேட்டிருக்கிறார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர்களோ பிரதி அமைச்சர்களுடன் இணைந்து விருந்தில் கலந்து கொள்ளத் தங்களுக்கு விருப்பமில்லை, ஆதலால் எம்.பி.க்களுக்கெனத் தனியாக ஒழுங்கு செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்கள். ■

# முரசம்

## அதிகரிக்கும் பிணக்குகளும் அதிருப்திகளின் எதிரொலிப்புகளும்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையிலான நம்பிக்கைகள் மங்கிச் செல்லும் போக்கே நிலவுகிறது. முன்னரெல்லாம் பிரதமர் ரணிலை சமாதானத்துக்காக இதயசுத்தியுடன் செயற்படும் தலைவரென வர்ணித்து, அவர் மீது மீண்டும் மீண்டும் நம்பிக்கை தெரிவித்து வந்த புலிகளின் தலைமை, இப்போது அத்தகைய புகழாரங்களைச் சொல்வதை நிறுத்திக்கொண்டது. அதையும் தாண்டி, தம்மை சர்வதேச பாதுகாப்பு வலை என்ற பொறிக்குள் மாட்டிவிடவே கபடத்தனமாக ரணில் தலைமையால் முயற்சிக்கப்படுவதாக புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் பிரதமருக்கான தனது கடிதத்தில் குற்றம் சாட்டியிருந்தார்.

தற்போது அரசாங்கம் வடக்குக் கிழக்கு அபிவிருத்தித் திட்டங்களைப் புறக்கணித்திருப்பதாகக் குற்றம் சாட்டி, அரசியல் யாப்பினால் கட்டுப்படுத்தப்படாத இடைக்கால நிர்வாக சபையைக் கோரி பேச்சுவார்த்தையைப் புலிகள் பகிஷ்கரித்து வருகின்றனர்.

இதேவேளை, இச் சூழ்நிலையை மோசமாக்கும் வகையிலான சம்பவங்கள் தொடர்ந்து நிகழ்ந்தபடியிருக்கின்றன. இவற்றில் கண்காணிப்புக் குழு ஒன்றும் செய்ய முடியாததாகத் தடுமாறியபடியிருக்கிறது. சில நாட்களுக்கு முன்னர் கண்காணிப்புக் குழு ராய்ட்டர் செய்தி நிறுவனத்திடம் புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையை முழுமையாகக் கடைப்பிடிக்கிறார்களில்லையெனக் குறைகூறியுள்ளது. அதே சமயம் அரசாங்கம் ஒத்துழைப்பதாகவும் அது தெரிவித்துள்ளது.

அண்மையில் குரங்குபாஞ்சானில் புலிகள் அமைத்த முகாமை வாபஸ் பெறும்படி கண்காணிப்புக் குழு கூறியும் புலிகள் மறுத்தமை, கடற்படை வீரர் ஒருவரை விடுவிக்கும்படி கூறியதற்கும் புலிகள் இணங்காமை போன்ற விடயங்களையே புலிகள் ஒத்துழையாமைக்குச் சான்றாகக் கண்காணிப்புக் குழு முன்வைத்தாலும் இவை விட, அரசியல் படுகொலைகள் தொடர்பாகவும் நிதி அறவீடுகள் தொடர்பாகவும் பாரிய அதிருப்திகளும் எதிர்ப்புக்களும் வெளியே தோன்றியுள்ளன. இது கண்காணிப்புக் குழுவின் இயலாமைக்கு எதிராகவும் எதிரொலித்துள்ளன.

இவை தொடர்பாக உன்னிப்பாகக் கவனம் செலுத்தியுள்ள கனடா, புலிகளைத் தம் நாட்டில் தடை செய்ய உத்தேசித்து, அதைத் தற்காலிகமாக ஆறு மாதங்களுக்குத் தள்ளிப் போட்டுள்ளதென்பதையும் இங்கு எடுத்து நோக்க வேண்டியுள்ளது. எனவே, இவ்வாறு பிணக்குகள் அதிகரித்துச் செல்வதும், அதிருப்திகள் தோன்றுவதும், ஜனநாயக செயற்பாடுகளுக்கும் சமாதான சூழ்நிலைக்கும் அச்சுறுத்தல்கள் எழுந்து வருவதுமான நிலைமையானது ஆரோக்கியமான ஒன்றல்ல.

இம்முறையாவது இனப் பிரச்சினைக்கான ஒரு அரசியல் தீர்வு கிட்டுமென்ற தமிழ்பேசும் மக்களின் எதிர்பார்ப்புகள் மீது மண்ணள்ளிப் போட்டுவிடும் ஆபத்தையே இங்கு காணக் கூடியதாக உள்ளது. இதை எப்படி மாற்றியமைக்கப் போகிறோம் என்பதே இன்றுள்ள கேள்வி.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# அரசின் புதிய யோசனை ஏற்பார்களா புலிகள்....?

இடைக்கால நிர்வாக சபை என்பது இப்போது சமாதானப் பேச்சுவார்த்தையை இடைமறித்து நிற்கிறது. இந்த இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கை எத்தகைய சந்தர்ப்பத்தில் விழைந்ததென்பது, யாவருக்கும் தெரிந்த ஒன்று.

அமெரிக்க மாநாட்டுக்குப் புலிகள் புறக்கணிக்கப்பட்டதையடுத்து அவர்கள் மேற்கொண்ட பகிஷ்கரிப்பின்போது, அடுத்த பேச்சுவார்த்தைக்கான முன் நிபந்தனையாக முன்வைக்கப்பட்ட ஒன்றுதான் இவ் இடைக்கால நிர்வாக சபை.

இச் சபையை, அரசியல் யாப்பின் பிரகாரம் தற்போது வழங்க முடியாத நிலையில் அரசாங்கம் உள்ளது. இதை அரசாங்கத்தால் வழங்க முடியாதென்பது முன்னரும் புலிகளுக்கு நன்கு தெரியும். அதனால்தான் பேச்சுவார்த்தைகளின் ஆரம்பத்தில் இவ் இடைக்கால நிர்வாக சபை பற்றிப் பிரஸ்தாபித்த புலிகள், அதனை வழங்குவதில் உள்ள சட்டச் சிக்கல்களையும் அசாத்தியங்களையும் அரசாங்கத் தரப்புப் பேச்சுவார்த்தைக் குழுத் தலைவர் பேராசிரியர் பீரிஸ் விளக்கியதையடுத்துக் கைவிட்டு, மாற்று யோசனைகளையிட்டு ஆராய உடன்பட்டார்கள். இதன் பிரகாரமே உபகுழுக்கள் உருவாக்கப்பட்டதும், பேச்சுவார்த்தையில் அரசியல் தீர்வு குறித்து ஒரு சில கருத்துக்களாவது பிரஸ்தாபிக்கப்பட்டதுமாக, தொடர்ந்து பேச்சுக்கள் இடம்பெற்றன.

ஆனால், இப் பேச்சுக்கள், அரசியல் தீர்வு மற்றும் அத்தியாவசிய விடயங்களை விட நிதி மூலங்களை மையப்படுத்தியதாகத் திசை திரும்பிச் சென்று, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளை எவ்வாறு கவர்வது, அவர்கள் வழங்கும் நிதியை எவ்வாறு பகிர்வது என்ற விடயங்களில் தாவியது. இவ் விவகாரத்தில் ஏற்பட்ட பிணக்காகவே, புலிகளின் தற்போதைய பகிஷ்கரிப்பு நிலை தோன்றியது.

இப்போதுள்ள கேள்வி, அரசாங்கம் முன்வைக்கவுள்ள இடைக்கால நிர்வாக சபை வரைபு எத்தகையதாக இருக்கும், அதைப் புலிகள் ஏற்றுக்கொள்வார்களா என்பதே.

அரசாங்கம் இவ் வரைபை இப்போதுதான் முதன் முதலாக வரைகின்றதென்றில்லை. புலிகள் பேச்சுக்களை முறித்து, ஜப்பான் மாநாட்டைப் பகிஷ்கரித்து, இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கைகளை வெளியிட்ட ஆரம்பத்திலிருந்து பல வரைபுகளைப் புலிகளிடம் அனுப்பி அவை யாவும் புலிகளால் நிராகரிக்கப்பட்டுவிட்டது. இந் நிலையில்தான், புலிகள் ஏற்கக் கூடிய வரை பொன்றை வர்ரவதாகக் கூறி தற்போதைய வரைபை அது வரைந்து, திருத்தி, மீண்டும் வரைந்துகொண்டிருக்கிறது.

உண்மையில் அரசாங்கம் இவ் வரைபின் உள்ளடக்கங்களைப் புலிகளுக்கு ஏற்கெனவே தெரிவித்துள்ளது. நோர்வே பிரதிநிதி வெஸ்பேர்க், புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுடன் நடத்திய சந்திப்பில் இவ் விபரங்கள் புலிகளிடம் எடுத்துரைக்கப்பட்டிருந்தன.

ஆனால் புலிகள் அவை ஏற்றுக்கொள்ள முடியாதவையெனத் திட்டவட்டமாக நிராகரித்திருந்தனர். இதையடுத்தே நோர்வே, அரசின் தற்போதைய வரைபைப் புலிகளிடம் எடுத்துச் செல்லத் தயக்கம் காட்டுவதாகச் செய்திகள் வெளிவந்தன. அவை நிராகரிக்கப்படும் என்று முன்னரே தெரிந்த நிலையிலேயே இத்தகைய தயக்கத்தை அவர்கள் காட்டியுள்ளார்கள்.

இதையடுத்தே, இவ் வரைபில் புலிகளுக்கு இசைவான மாற்றங்கள் சிலதை எவ்வாறு செய்யலாமென மேலும் ஆராயும் பொருட்டு, அவ் வரைபைப் புலிகளிடம் சமர்ப்பிப்பதை அரசாங்கம் பின் தள்ளிப் போட்டுள்ளது.

இவ் வரைபு குறித்த விடயத்தில் அரசாங்கத்துக்கு உள்ள சிக்கல் பல தரப்பட்டது.

ஒருபுறம் இவ் வரைபையும் புலிகள் நிராகரித்துவிட்டால் அடுத்த அரசியல் நகர்வுகள் ஸ்தம்பிதமடைந்துவிடும் என்பது மட்டுமல்ல, அரசாங்கத்தின் கையாலாகாத நிலைமை வெளிப்பட்டு மக்களிடம் அதிருப்தி தோன்றலாம்.

இவ்வாறு புலிகள் இதனை நிராகரிப்பதுடன் மட்டும் நின்றுவிடுவார்களா, அல்லது தமது அதிருப்தியை வெளிப்படுத்தும் நடவடிக்கைகளில் இறங்குவார்களா என்பது அடுத்த விடயம்.

புலிகள் அரசாங்கத்தில் தற்போது நம்பிக்கையீனங்களைத் தமது அறிக்கைகள் கருத்துக்கள் மூலம் வெளிப்படுத்த ஆரம்பித்துவிட்டார்கள். இவற்றை இன்னும் கடுமையான விமர்சனங்களாக அவர்கள் மேற்கொள்ளக் கூடிய சாத்தியக்கூறுகள் எழலாம். இந் நிலையில் அரசாங்கத்துக்கு எல்லாப் புறங்களிலும் எதிர்ப்பு என்ற நிலை தோன்றிவிடலாம். ஏற்கெனவே ஜனாதிபதி, அரசாங்கத்தின் சமாதானத் திட்டங்கள் மிகுந்த பலயீனமுடையவையென்றும், அரசாங்கம் ஏமாற்றப்பட்டுக்கொண்டிருக்கிறதென்றும், இலங்கையின் இறைமை, பாதுகாப்பு ஆகியவற்றுடன் விஷப்பரீட்சை செய்துகொண்டிருக்கிறதென்றும் குற்றம் சாட்டியபடி இருக்கிறார்.

அவருக்கு மேலதிகமாக ஜே.வி.பி. அரசாங்கம் புலிகளுக்கு அடிபணிந்து நாட்டைப் பலி கொடுக்கிறதென்றும், பிரிவினைக்கு வழி வகுப்பதாகவும் கடுமையாகப் பிரசாரப்படுத்தி வருகிறது.

இம் முயற்சியில் அரசாங்கத்துக்கு ஏற்படும் தோல்வியையே தமது அடுத்த தேர்தல் வெற்றிக்கான மூலதனமாக்க இவர்கள் தருணம்



பார்த்துக் காத்திருக்கிறார்கள்.

இந் நிலையில் அரசாங்கம் புலிகளுக்கு வழங்கும் எவ்வித எல்லை மீறிய சலுகையையும் இவர்கள் சிங்கள அரசியற் களத்தில் அம்பலப்படுத்தி அபாயச்சங்கு ஊதுவார்களென்பதால் அரசாங்கம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டியுள்ளது. அதனால் புலிகளின் கோரிக்கைகளுக்கு எவ்வளவுதூரம் செவிமடுக்க முடியும், அவ் விபரங்களைச் சிங்கள மக்கள் மத்தியில் எப்படி வெளியிட முடியும் என்ற சிக்கல் அரசாங்கத்துக்கு உண்டு. அதனால்தான் கடந்த கட்சித் தலைவர்கள் மாநாட்டில் கூட அரசாங்கம், குழப்பத்துக்கு வழி வகுக்கலாமெனக் காரணம் காட்டி தனது இடைக்கால நிர்வாக சபைக்கான வரைபில் என்ன உள்ளதென்பதை வெளியிட முடியாதெனத் தெரிவித்திருந்தது.

சாதாரண நிலையை விட இப்போது அரசாங்கத்துக்கு இது மிகவும் ஆபத்தான கட்டமாகும். ஏனெனில் எந்தவொரு காரணத்தை முன்னிட்டும் அரசாங்கத்தை ஜனாதிபதி கலைத்துவிடக் கூடிய நிலையில் இருக்கிறார். அத்துடன் எந்தவொரு முக்கிய அமைச்சையும் பொறுப்பேற்க அவரால் முடியும். நாட்டின் பாதுகாப்பு என்ற எச்சரிக்கை மணியை ஒலித்தபடி அவர் அதிரடியான அமைச்சுப் பொறுப்பேற்பு எதையும் மேற்கொண்டால் அரசாங்கம் அதை முகம்கொடுக்கக் கூடிய நிலைமையைப் பேண வேண்டியும் உள்ளது.

ஜனாதிபதி, அரசாங்கத்தின் இவ் வரைபைப் புலிகளிடம் கையளிக்குமுன் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்றும், தன்னிடம் காண்பிக்க வேண்டுமென்றும் கோரியுள்ளார். இவ்விதம் அரசாங்கம் செய்தால் அது அதைப் பகிரங்கப்படுத்துவதற்குச் சமன். ஆனால் செய்யாதுவிட்டால் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான காரணப் பட்டியலில் இவையும் உள்ளடங்கிவிடும்.


இது ஒருபுறமிருக்க, மறுபுறத்தில் முஸ்லிம்களின் எதிர்ப்பு இப்போது வலுத்துக்கொண்டு வருகிறது. வடக்குக் கிழக்கைச் சார்ந்த முஸ்லிம் பிரதிநிதிகளில் ஓரளவு மிதவாதமாக நடந்துகொள்ளும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் இம்முறை இடைக்கால நிர்வாக சபை விடயத்தில் கடுமையாக உள்ளார். இந் நிர்வாக சபையில் ஐம்பதுக்கு ஐம்பது பங்கு முஸ்லிம்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று அவர் கூறியிருப்பது, கட்சிக்குள் உள்ள அழுத்தத்தின் நிலைமையை வெளிப்படுத்துகிறது. அரசாங்கம் முன்வைக்கும் இடைக்கால நிர்வாக சபை வரைபுக்கு, முஸ்லிம் தரப்பினர் தமது நிலைப்பாடுகள் அடங்கிய வரைபினை முன்வைக்கப் போவதாகவும், தெரிவித்துள்ளனர். இதில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் தலைவர்கள் கட்சி பேதமின்றி ஒருமித்த குரலை வெளிப்படுத்தப் போவதாகக் கூறி அதற்கான கமிட்டியொன்றையும் அமைத்து விவாதித்து வருகின்றனர்.

ஆனால் புலிகள் தரப்பில் தமிழ்ச்செல்வன் இது குறித்துக் கூறியிருப்பது தற்போதைய விடயத்தில் முஸ்லிம் தரப்புகள் பங்குபற்றுவதை மறுப்பதாகவே உள்ளது. அவர்கள் இது இரு தரப்பு விவகாரமென்றே கூறி வருகின்றனர்.

இந் நிலையில் முஸ்லிம் விவகாரம் இங்கு ஒரு முட்டுக்கட்டையாக எழும் வாய்ப்பு அதிகரித்து வருகிறது. அரசாங்கத்தைப் பொறுத்தவரை, மாற்றுத் தமிழ்க் கட்சிகளைத் தவிர்த்தது போல், முஸ்லிம் தரப்பினைரையும் தவிர்க்கக் கூடிய அரசியல் நிலைமை இல்லை. முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்தில் கூட்டுச் சேர்ந்துள்ள ஒரு கட்சியாகும். தம்மை உதாசீனம் செய்தால் மத்திய அரசியலில் மாற்றங்களைச் சந்திக்க நேரிடும் என அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

இந்தப் பக்கத்தில் சாணேற முழம் சறுக்கும் நிலைமையே காணக் கூடியதாக உள்ளது. அரசாங்கம் பிந்திச் செல்கின்ற ஒவ்வொரு நாளும் புதுப் புதுப் பிரச்சினைகள் முளைவிட்டபடியுள்ளன. அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் படுகொலைகள் நிகழ்வதும், புலிகள் ஆயுதங்களுடன் கைதுசெய்யப்படுவதும், சுற்றிவளைப்புத் தேடுதல்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதும், புலிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புதிய முகாம்களை அமைத்து அப் பகுதிகளைத் தமக்கு உரிமை கோருவதும், கடற்பரப்பில் அடிக்கடி அசம்பாவிதங்கள் நிகழ்வதுமாக சம்பவங்களால் நிறைந்த நாட்களாகவே கடந்து செல்கின்றன. எந்தச் சம்பவம் பாரதூரமாக வெடிக்குமெனச் சொல்லிக்கொள்ள இயலாத நிலைமை உள்ளது.

இதற்கு மத்தியில் அரசாங்கம் தயாரிக்கும் வரைபுக்கு பலத்த வரையறைகளும் உள்ளன. இன்றைய அரசியல் யாப்பை அரசாங்கம் மீற முடியாது. அவ் அரசியல் யாப்பினுள் ஒரு இடைக்கால நிர்வாக சபையை அது வழங்க



முடியாது. வழங்குவதானால் அதை ஜனாதிபதிதான் வழங்க முடியும். அதுவும் ஆளுநருக்கான ஆலோசனைச் சபையாகவே வழங்க முடியும். முன்னர் ஜே.ஆர். வழங்க முன்வந்த இடைக்கால நிர்வாக சபை கூட இப்போதைய யாப்பின் கீழ் ஜனாதிபதியால் கூட வழங்க முடியாது. அரசியல் தீர்வொன்று ஏற்பட்டு, மாகாண சபைச் சட்டமூலம் நிறைவேற்றப்பட முன்னரே அவ்வாறு இடைக்கால நிர்வாக சபையை வழங்க ஜே.ஆருக்கும் அதிகாரம் இருந்தது. தற்போது அவ் அதிகாரம் நாட்டில் ஜனாதிபதியுட்பட யாருக்கும் இல்லை. அவ்வாறானால் அதற்கு அரசியல் தீர்வொன்று ஈட்டப்பெற்று அங்கீகரிக்கப்பட வேண்டும்.

அரசாங்கத்தால் அதி கூடியது ஒரு அதிகார சபையையே வழங்க முடியும். அவ் அதிகார சபைக்கு இடைக்கால நிர்வாக சபையெனப் பெயரை மட்டும் சூட்டி வழங்கினால் புலிகள் ஏமாறப்போவதில்லை. புலிகளைப் பொறுத்தவரை அரசாங்கம் முகம்கொடுக்கும் அரசியல், சட்டப் பிரச்சினைகள் குறித்த கவலை கிடையாது. தமக்கு வேண்டியதைத் தர முடியுமா இல்லையா என்பதே கேள்வி. தர்மசங்கடத்தில் இருக்கிறது அரசாங்கம். எப்படிச் சமளிக்கப் போகிறதென்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். ■

# இடைக்கால நிர்வாகம்
# முஸ்லிம்களின் கதி என்ன?

புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருவதற்காக அவர்களது நிபந்தனைக்கு அமைய அரசாங்கம் வழங்கப் போவதாகக் கூறப்படும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பாக முஸ்லிம் அரசியல் அரங்கில் சூடான விவாதங்கள் நடக்கின்றன.

ஒரு புறம் இந்த விடயத்தை எப்படிக் கையாளுவது என்று முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலேயே ஒருமித்த கருத்து நிலவாத அதே வேளை இதனை எப்படி அரசியலாக்கலாம் என்ற இரண்டாம் கட்ட முயற்சியும் நடக்கிறது.

அரசாங்கம் புலிகளுக்கு வழங்க உத்தேசித்திருக்கும் நிருவாகக் கட்டமைப்பின் பெயர் எதுவாக இருந்தாலும் அது முஸ்லிம்களுடன் பங்கு போட்டுக்கொள்ளும் ஒன்றாக இருக்கக் கூடாது என்பதில் புலிகள் தெளிவாக இருக்கிறார்கள்.

அரசாங்கம், 'முஸ்லிம்களைத் தனியாகப் பார்க்க வேண்டியதில்லை; அவர்களை

**முஸ்லிம்களுக்குச் சம பங்கு வேண்டும்; 50க்கு 50 என்று பொன்னம்பலம் பாணியில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இது படிப்படியாக இறங்கி வந்து பின்னர் ஒன்றுமே இல்லாத நிலையில் காட்டமான ஒரு அறிக்கையோடு 'செப்டரை குளோஸ்' பண்ண முஸ்லிம் காங்கிரஸாலும் அதன் தலைமையாலும் முடியும்.**

அரசின் ஒரு பகுதியாகவே கருத முடியும்' என்று கூறி வருகின்றது.


முஸ்லிம்களை அரசின் ஒரு பகுதியாகக் கருதுதல் என்ற மாயை ஏற்கனவே யதார்த்தத்தில் தோற்றுப் போன ஒன்று. முறையான பகிர்வுகள் இன்றி அதிகாரம் கட்டவிழ்த்து விடப்பட்ட நிலையில் வடக்கு-கிழக்கு பகுதிகளில் முஸ்லிம்கள் நேரடியாகப் பாதிப்புகளை எதிர்கொள்ளும்போது அரசாங்கத்தால் என்ன செய்ய முடியும் என்பதற்கு கடந்த காலங்களில் நிறைய உதாரணங்கள் உண்டு. அரசாங்கத்தின் கையாலாகாத்தனம்தான் ஒவ்வொரு முறையும் நிரூபிக்கப்பட்டது.

தற்போதைய உத்தேச நிர்வாகக் கட்டமைப்பிலும் வழமை போலவே முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டு சந்தர்ப்பத்தைச் சமாளித்து ஒரு தீர்வு முன்வைக்கப்படுமானால் அதற்கு எப்படி ஈடுகொடுக்கப் போகிறோம் என்ற கேள்வி முஸ்லிம்கள் மத்தியில் எழுந்துள்ளது.

முஸ்லிம்கள் சார்பாக அந்தச் சமூகத்தின் அரசியல் தலைவர்களால் விடுக்கப்படும் ஆரம்பக் கோரிக்கைகள் இப்போதைக்கு ரொம்பவும் 'ஸ்ட்ரோங்காக' இருக்கிறது. முஸ்லிம்களுக்குச் சம பங்கு வேண்டும்; 50க்கு 50 என்று ஜி.ஜி.பொன்னம்பலம் பாணியில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இது படிப்படியாக இறங்கி வந்து பின்னர் ஒன்றுமே இல்லாத நிலையில் காட்டமான ஒரு அறிக்கையோடு 'செப்டரை குளோஸ்' பண்ண முஸ்லிம் காங்கிரஸாலும் அதன் தலைமையாலும் முடியும்.

முஸ்லிம்களின் வேறு அரசியல் தலைமை குறித்து இந்த அளவு நம்பிக்கையும் இல்லை.

முஸ்லிம்கள் பொறுமையாக இருக்க வேண்டும். இராஜதந்திரமாக நடந்துகொள்ள வேண்டும் என்று முதலில் ரவூப் ஹக்கீம் உபதேசிப்பார். பின்னர் இடைக்கால நிர்வாகமோ ஏதோ ஒன்றைப் புலிகளுக்கு வழங்கும் ஒப்பந்தத்தில் அரசாங்கம் கைச்சாத்திட்டதன் பின்னர்



காட்டமான அறிக்கை ஒன்று வெளிவரும். அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்யப் போவதாகவும் அரசுக்கு வழங்கும் ஆதரவை மீள் பரிசீலனை செய்யப் போவதாகவும் அந்த அறிக்கையில் கூறப்படும். அத்தோடு மெதுமெதுவாக மறக்கப்பட்டு பின்னர் முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டு சொத்துக்கள் அழிக்கப்பட்டால் அரசாங்கத்திடம் இருந்து நட்டஈடு பெற்றுக் கொடுப்பார்கள். இது தவிர வேறென்ன செய்ய முடியும்.

காலம் முழுதும் இதே தவறை முஸ்லிம் அரசியல் தலைமை நிகழ்த்திக்கொண்டிருக்கிறது. இப்போது இந்தப் புதிய சூழ்நிலையிலும் அதுவேதான் நடக்கும் போல் தெரிகிறது. ஏனெனில் முதலில் பெரிய கோரிக்கையை முன்வைப்பதும் பின்னர் படிப்படியாகக் குறைத்துக்கொண்டு வந்து ஒன்றுமேயில்லாமல் செய்துவிடுவதும்தான் இவர்களது 'இராஜதந்திரம்'.

புலிகளுக்கு வடக்கு-கிழக்கின் இடைக்கால நிர்வாகத்தை ஒப்படைப்பது தொடர்பில் கடந்த வாரம் மிகுந்த எச்சரிக்கை கலந்த கருத்துக்களை அமைச்சர் ரவூப் ஹக்கீம் வெளியிட்டிருந்தார்.

"புலிகள் மக்கள் ஆணையைப் பெற்ற இயக்கம் அல்ல. அவ்வாறு மக்கள் ஆணை கிடைக்காத ஒரு இயக்கத்துக்கு வடக்கு-கிழக்கின் பூரண அதிகாரத்தை எப்படி வழங்குவது. அவர்கள் இன்னமும் எந்தவொரு தேர்தலுக்கும் முகம் கொடுக்கவில்லை. குறிப்பாக அவர்கள் தமிழ் மக்களின் ஆணையையேனும் பெறவில்லை. எதனை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு வடக்கு - கிழக்கின் முழு அதிகாரத்தை வழங்குவது. தமிழ் மக்களுக்காகப் போரிட்டார்கள் என்ற அடிப்படையில் இருந்து ஜனநாயக நாடு ஒன்றின் ஒரு பகுதியின் அதிகாரத்தை வழங்க முடியுமா?"

"அவர்கள் மக்களை வெட்டிக் கொன்று சிற்சில விடயங்களைப் பெற முயற்சித்த இயக்கம். இப்படியான ஒரு இயக்கத்துக்கு இவ்வாறான அதிகாரங்களை வழங்கும்போது புத்திசாலித்தனமான நடந்து கொள்ள வேண்டும்." இப்படிக் கூறி இருப்பவர் ரவூப் ஹக்கீம். ஆம். ரவூப் ஹக்கீம்தான். ஆனால் வழமை போலவே கொடுக்க வேண்டாம் என்று கூறுவதைத் தவிர; கொடுத்தால் என்ன செய்வீர்கள்; வடக்கு-கிழக்கில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களை பாதுகாக்க என்ன செய்வீர்கள் என்ற கேள்விக்கு முஸ்லிம் காங்கிரஸிடமோ வேறெந்த முஸ்லிம் அரசியல் கட்சிகளிடமோ தெளிவான பதிலில்லை.

முஸ்லிம் அரசியல் கட்சிகள் இணைந்து அவற்றின் கோரிக்கைகள் அடங்கிய உத்தேச திட்டம் ஒன்றை அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்திருப்பதாகத் தெரியவருகிறது. அரசாங்கம் இதனை மிகக் கவனமாகப் பரிசீலித்துக் குப்பைக் கூடைக்குள் போட இடமுண்டு. ஏனெனில் இப்போதைக்கு அரசாங்கத்தின் ஒரே தேவை (முஸ்லிம்களைப் பாதுகாப்பதையும் ரவூப் ஹக்கீமை மகிழ்ச்சிப்படுத்துவதையும் விட) புலிகள் சண்டையைத் தொடங்கிவிடாமல் பாதுகாப்பதுதான்.

அரசு முஸ்லிம்களின் கருத்துக்களைப் பெரிதாகக் கவனத்தில் கொள்ளாது, புலிகளின் விருப்பப்படி அவர்களுக்கு ஒரு நிர்வாக அமைப்பை வழங்க உடன்படுமானால் முஸ்லிம் அரசியல் தலைமைகள் என்ன செய்ய முடியும்? அதன் பின்னர் மீண்டும் ரவூப் ஹக்கீம் புலிகளின் தலைவருடன் மற்றொரு ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளலாம். அல்லது நாம் முன்னர் கூறியது போல் அரசுக்கான ஆதரவை மீள் பரிசீலனை செய்யப் போவதாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுவிட்டு மௌனமாக இருக்கலாம். பின்னர் சிறிது காலத்தில் தேவை ஏற்படும்பொழுது நட்டஈடு பெற்றுக் கொடுக்கலாம். அப்படியானால் இவ்வாறான ஒரு நிர்வாக அமைப்பின்போது முஸ்லிம்களின் கதி என்ன? என்ற கேள்விக்கு என்ன பதில்? ஆரம்பத்திலேயே ஏதேனும் பெற்றுக்கொள்ளாதவிடத்து அதோ கதிதான்! ■

## அதிரடி அய்யாத்துரை



**சமாதானப்** பேச்சுக்கள் தொடங்குதோ இல்லையோ, சமாதானப் பேச்சுக்கு நடுவராகிறதுக்கு நான் முந்தி நீ முந்தியெண்டு வெளிநாடுகள் ஆளாளுக்குப் போட்டி போடினம். ஒருத்தரை மேவி ஒருத்தர் ஓடுற ஓட்டங்கள் எங்க போய் முடியப் போகுதோ தெரியாது. முந்தி வந்த நோர்வே பிந்திப் பிந்திப் போகுது. ஜப்பான் சுழிச்சுக்கொண்டு, காசாசை காட்டி டோக்கியோ மாநாட்டில தலைமைக் கதிரையில தான் குந்திக்கொண்டு பக்கத்துக் கதிரையில அமெரிக்காவை இருத்தி, நோர்வேயக் கதவுக்கு வெளியால விட்டுப் போட்டுது. இப்ப புலிகளச் சரிக்கட்டுறது யார் எண்ட போட்டி. தலைமை, அரசியல்துறை எல்லாம் தாண்டி, வாசலில சென்றிக்கு நிக்கிறவையோடதன்னும் பேச ரெடியெண்ட கணக்குக்குப் போவிட்டினம். என்னதான் லாபம் கிடக்குதோ உந்த நடுவர் உத்தியோகத்தில. எல்லாத்தையும் ஒரு கண் பக்கத்திலயிருந்து பாத்துக்கொண்டுதான் இருக்கு. என்னாகுமோ, ஏதாகுமோ?

**நயினை** அம்மன் திருவிழா நல்ல் விசேஷமாக் கொண்டாடி அமர்க்களப்பட்டது அறிஞ்ச விஷயம். அறியாத விஷயமொண்டும் கிடக்கு. கடவுளே கப்பம் கட்டின கதைதான் அது. அம்மன் சபையிலயிருந்து 16 லகரம் ரெண்டெழுத்தாரிட்டக் கைமாறியிருக்கிறதாக் கேள்வி. 12 அறங்காவலரில யாருக்கும் தெரியாமல் ஒரு சில பேரோட பேசி நடத்தின விஷயம், மெல்ல வெளியால கசிஞ்சு அறங்காவலர்களுக்குள்ள இசகுபிசகாயிருக்காம். என்னவோ, எனக்கெங்கட பொப் பாட்டொண்டுதான் ஞாபகம் வருகுது. 'ஆண்டவனும் அடிமைப்பட்டான். ஆபத்திலே மாட்டிக்கிட்டான்...'

**பாராளுமன்றத்தில,** கட்சித் தலைவர்களுக்கு விஷேட கூட்டமொண்டு நடந்ததெல்லே. சொன்னதெல்லாம், இடைக்கால சபை யோசனைகளை வெளியிட்டால் குழம்பிவிடுமெண்டதால அதை சஸ்பென்ஸா வைச்சிருக்கிறமெண்ட விஷயத்தத்தானாம். இதுக்கு ஒரு கூட்டம் தேவையோ? அதுக்கிடையில, பீரிஸையா பேசி முடிய மிலிந்த அண்ணை எழும்பி, "இனி இந்திய விஜயப் பெறுபேறுகள் பற்றி டக்ளஸ் விளக்குவார்" எண்டு ஒரு குண்டைத் தூக்கிப் போட்டாராம். அப்ப, இந்தியாவுக்கு டக்ளஸ் போனது அரசாங்கத்தின்ர ஏற்பாட்டிலயோ எண்டு கொஞ்ச நேரம் திகைச்சுப் போட்டுதாம் சபை. டக்ளஸ் முகத்தில அசடு வழிஞ்சுதாம். பிறகுதான் இது பகிடிக்கெண்டு சொல்லிச் சிரிக்க வைக்கப் பாத்தாராம் மிலிந்த. புண்ணில புளிகரைச்சு ஊத்திப்போட்டுச் சிரியெண்டால் சிரிப்பு வருமோ, எங்கட கூட்டமைப்பாருக்கு? இட் இஸ் ட்டு மச், நோ?

**எப்பயோ கேட்ட** கோஷமொண்டு இப்பவும் திரும்பக் கேட்டுது. ஐம்பதுக்கு ஐம்பது எண்டு. யாற்றாப்பா, ஒருவேளை ஜீ.ஜீ. பொன்னம்பலத்தார்தான் உயிர்த்தெழுந்து திரும்ப வந்திட்டாரோவெண்டு திகைச்சுப் போட்டன். பிறகு பார்த்தால் சொன்னது எங்கட ஹக்கீம் நானா. இடைக்கால சபை யோசனையையே ரெண்டெழுத்தாரிட்டக் குடுக்க அரசாங்கமும் நோர்வேக்காறரும் தொடை நடுங்கிக் கொண்டிருக்கேக்க, ஹக்கீம் எப்பிடி துணிச்சலாய் இடைக்கால நிர்வாகத்தில ஐம்பதுக்கு ஐம்பது கேக்கிறாரெண்டு கொஞ்சம் திகைப்பாய்த்தான் இருந்துது. ஆனால் கட்சித் தலைவர்கள் கூட்டம் கூடி அரசாங்கம் இடைக்கால நிர்வாகத்தைப் பற்றிப் பேச்செடுக்கேக்க, ஹக்கீமைப் பாத்தால் ஆள் கப்சிப்! ஓகோ, இந்த ஜம்பமெல்லாம் பேப்பருக்குத்தானா! குட் குட். பொலிடிக்ஸ் இஸ் பொலி ட்ரிக்ஸ் நோ?

**ஒரு சின்னப் பகிடி..** வெளிநாடொண்டுக்குப் போன எங்கட அமைச்சரொருவர் அங்கத்தைய அமைச்சரின்ர வீட்டைக் கண்டு திகைச்சு, "எப்பிடி இதைக் கட்டினீங்கள்" எண்டு கேட்டாராம். அவர் தூரத்தில ஓடுற ஆறொண்டக் காட்டி, "அதுக்கு மேலை ஒரு பாலம் தெரியுதோ" எண்டு கேட்டாராம். இவர் ஓமெண்ட, "அந்தப் பாலத்தின்ர பாதிக் காசுதான் இந்த வீடு" எண்டாராம். பிறகொருநாள் அந்த அமைச்சர் எங்கட நாட்டுக்கு வந்து பார்த்தால் எங்கட அமைச்சர் பெரியதொரு மாளிகை கட்டி வைச்சிருக்கிறதக் கண்டு திகைக்க, இவர் "அந்தா ஓடுதே ஒரு ஆறு, அதுக்கு மேல ஒரு பாலம் தெரியுதோ பாரும்" எணடாராம். அவர் "தெரியேல்லையே" எண்ட, எங்கட அமைச்சர் சொன்னாராம், "தெரியாது, ஏனெண்டால் அந்தப் பாலம்தான் இந்த வீடு" எண்டு. எங்கட அமைச்சர் எஸ்.பி. திசநாயக்காவும் ஒரு மாளிகை கட்டியிருக்கிறதா முன்னாள் அரசாங்கம் படமெடுத்துப் பேப்பரில போட்டுது. இப்ப, உரத்தை இறக்கிட்டு, திறைசேரியைக் காசுகட்டச் சொல்லிப் பிரச்சினைப்பட்டு, தான் ராஜினாமாச் செய்திட்டு ஒஸ்ரேலியா போகப்போறதா மிரட்டிறாராம். இங்கயும் பாலக் கதைதான் போல கிடக்கு! ■

# கூட்டணித் தலைமை யார் கையில்?



கடந்த சில மாதங்களாக தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் நிலவிய பெரும் பதற்றம் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரியைப் பதவி விலக்குவதற்கான முயற்சியே.

ஆனந்தசங்கரியே, அமிர்தலிங்கம் கொலைக்குப் பின்னர் மூச்சிழந்து ஒடுங்கிப்போயிருந்த கூட்டணிக்கு மீண்டும் புத்துயிர் கொடுத்து முனைப்புற வைத்தவர்.

அக் கால அரசியல் கள நிலைமையில் தாம் செயற்பட முடியாதெனக் கூட்டணி முக்கிய உறுப்பினர்கள் பலர் பின்னடித்தபோதும் தான் முன்னின்று செயற்படவைத்தவர்.

தொடர்ச்சியாக கூட்டணித் தலைவர்கள் கொல்லப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில், இவர்களின் பின்னடிப்பு, கட்சியைக் கலைத்துவிடுவோம் என்று கூறும்வரை சென்றிருந்தது. அவ்வாறு கூறியவர்களே இப்போது சங்கரியை விலத்துவதற்கு முனைந்ததுதான் வேடிக்கையானது.

கடந்த யாழ். உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டபோது, அதனைப் புலிகள் நிராகரித்ததையடுத்து, கூட்டணிக்குள்ளும் இத் தேர்தல்களில் இருந்து விலகிக்கொள்ளும்படியான அழுத்தம் அதிகரித்தது.

ஆனாலும் தாம் இவ்வாறு போட்டியிடாது விட்டுவிட்டால் தம்மை மக்கள் பின்னாளில் மறந்துவிடுவார்களென வலியுறுத்தி குறைந்தது ஓரிரு உள்ளூராட்சி சபைகளிலாவது போட்டியிட வேண்டுமெனக் கூறி, இரு சபைகளில் போட்டியிட வைத்தவரும் சங்கரியே.

புலிகளின் நிலைப்பாடு குறித்து, ஏனையவர்கள் காட்டிய தயக்கத்தால் இத் தேர்தலுக்கான வேட்பாளர்களை ஏற்பாடு செய்வது முதல் அனைத்து வேலைகளும் சங்கரியின் தலையிலேயே விழுந்தும், அயராது செயற்பட்டு இத் தேர்தல்களில் வெற்றிகாண வைத்தவர் சங்கரியே. இதன் மூலம்தான் யாழ். மேயர் பதவி கூட்டணிக்குக் கிட்டியது. அதுதான் கூட்டணிக்கு யாழ்ப்பாணத்தில் இன்னும் செல்வாக்கு உள்ளதென அக் காலப்பகுதியில் எடுத்துக் காட்டக் கூடியதாக இருந்த ஒரே அடையாளமாக இருந்தது.

புலிகளின் நிராகரிப்பையும் மீறி இதை ஈட்டிக்கொண்டமை அவர்களுக்கு ஒரு சவாலாக அமைந்தது. இதன் விளைவாக, கூட்டணியின் யாழ். மேயர் சரோஜினி யோகேஸ்வரன் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதனையடுத்து அடுத்த மேயர் பதவிக்கு முன்வர யாவரும் தயக்கம் காட்டவே, சங்கரி கடும் பிரயத்தனத்தின் மத்தியில் சபை உறுப்பினராக இல்லாத சட்டத்தரணி சிவபாலனை அழைத்துவந்து மேயராக்கினார்.

ஆனால் சிவபாலனும் கொல்லப்பட்டார். அதனையடுத்து என்ன செய்வதென்று தெரியாத நிலை கூட்டணி வட்டாரத்துள் எழுந்தது. ஆனாலும் மனந்தளராத சங்கரி, யாரும் மேயராக முன்வராவிட்டால் தானாவது மேயராவேன் எனச் சூளுரைத்தார். ஆனாலும் நீண்ட காலமாக மேயர் ஒருவர் இல்லாமலே மாநகர சபை இயங்க நேர்ந்தது. எவ்வாறாயினும் இறுதியில் கொழும்பில் சட்டத்தரணியாகத் தொழில் புரிந்துவந்த ரவிராஜை இணங்க வைத்து மேயராக்கினார்.

ஆனாலும் சங்கரிக்குச் சோதனை முடியவில்லை. 2000ம் ஆண்டு நிகழ்ந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட ரவிராஜ் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதால் மேயர் பதவி வெற்றிடமாகவே, அதற்கு செல்லன் கந்தையனை மேயராக்கிச் செயற்படுத்தினார்.

இறுதியில் மேயர் செல்லன் கந்தையன் யாழ். நூல்நிலையத்தைத் திறக்க முனைந்தபோது, அதைப் புலிகளும், அவர்கள் சார்ந்த அமைப்புக்களும் கடுமையாய் எதிர்த்ததையடுத்து அவரும் ஏனைய மாநகர சபை உறுப்பினர்களும் இராஜினாமாச் செய்தனர்.

சங்கரி மீதான நெருக்கடிகள் இவ்விதத்தில் மட்டுமன்றி பல முனைகளிலுமிருந்து ஏற்பட்டன. கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கத்தின் நினைவு தினத்தை யாழ். நகரில் கொண்டாட விடாமை, பாராளுமன்றத்தால் ஐ.நா. சபைக்குச் செல்லத் தெரிவு செய்யப்பட்ட குழுவில் இடம்பெற்றிருந்தும் ஐ.நா. செல்ல அனுமதிக்காமை போன்றவை அவரது தன்மானத்துக்குச் சவாலாக அமைந்தன. இதேவேளை புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம், கூட்டணி உட்பட்ட தமிழ்க் கூட்டமைப்புக் கட்சிகளை, தாம் இட்ட பணியைச் செய்துகொண்டிருப்பதன்றி வேறெந்தப் பெறுமதியுமற்றவர்களென்றவாறு சிறுமைப்படுத்தியபோது, எவருமே வாய் திறவாதிருக்க, சங்கரி மட்டும்தான், அதை மறுத்துரைத்து தமது சுயகௌரவத்தை நிலைநாட்டியிருந்தார்.

சங்கரி குறித்த சர்ச்சையில் பிரதானமாக இடம்பெற்ற விடயம்தான், புலிகள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளென்பதை ஏற்க மறுத்தமை.

இதுகுறித்து சங்கரி தெளிவான விளக்கமளித்திருந்தார். "கூட்டமைப்பு ஒருபோதும் புலிகள் ஏகப்பிரதிநிதிகள் என்று தீர்மானம் நிறைவேற்றவில்லை. ஏனைய கட்சிகளும் மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கும்போது தான் அவ்வாறு சொன்னால் உண்மைக்குப் புறம்பானதாகும். ஆனால், புலிகளுடன்தான் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமெனக் கூட்டமைப்பில் தீர்மானித்ததற்கு தான் மாறுபட்டு நிற்கவில்லை" எனக் கூறிவருகிறார்.

அதேவேளை இக் கூட்மைப்பை அமைத்ததில் தனக்கு உடன்பாடில்லையென்றும், அக் கூட்டில் இருக்கும் சில கட்சிகள் பாரதூரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவை என்றும் தனது அதிருப்தியைத் தெரிவித்து வருகிறார்.- கூட்டணியின் முன்னாள் பா.உ.க்களான தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் ஆகியோரைக் கொலைசெய்த அமைப்புடன், அது இன்னும் அதற்கு மன்னிப்புக் கோராத நிலையில், எப்படி வெறும் தேர்தலுக்காகக் கூட்டுச் சேரலாம் என்ற கேள்வி அவர் மனதில் உண்டு.

இந் நிலையில், சில காலங்களுக்கு முன்னர் நிகழ்ந்த சந்திப்பொன்றில் சங்கரியைத் தலைமைப் பதவியிலிருந்து நீக்கும்படியான அறிவுறுத்தலொன்றைக் கூட்டணிப் பிரமுகர்களுக்குப் புலிகள் வழங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது.

இதற்கு கூட்டணிக்குள் உள்ள சில முக்கியஸ்தர்களே வழிவகுத்தனரெனக் கூறப்படுகிறது.

இதற்கு ஏதுவாக, சங்கரியின் செல்வாக்கை விழுத்தும் நோக்கில், அவர் வெளிநாடு சென்றிருந்த சமயம், புலிகளுடன் இணைந்து கூட்டமைப்பினர் யாழ். நகரில் ஏற்பாடு செய்த மேதினம் மிகத் தோல்விகரமானதாக முடிந்தது.

இந் நிலையில், புலிகளின் அழுத்தத்தால் உந்தப்பட்டு, கூட்டணிச் செயலாளர் நாயகம் சம்பந்தன் உட்படச் சிலர் சங்கரியிடம் நேரடியாகச் சென்று பதவி விலகும்படி கோரியும் அவர் மறுத்துவிட்டார்.

எனவே வேறு வழியற்ற நிலையில் பொதுச்சபையில் சங்கரியை விலத்தும் பிரேரணையை முன்வைக்கலாமென அவர்கள் சமாதானம் கூறியிருந்தனர். பொதுச் சபை நிகழ்ச்சி நிரலில் இல்லாவிட்டாலும் இவ் விடயத்தை அங்கு எழுப்ப முடியுமெனவும் தெரிவித்திருந்தனர்.

ஆனால், அண்மையில் நிகழ்ந்த பொதுச்சபைக் கூட்டத்தில் சங்கரிக்கு இருந்த செல்வாக்கைக் கண்டு, இம் முயற்சி பலிக்காதென உணர்ந்து பின்வாங்கிக் கொண்டனர்.

பொதுச்சபையில் பெரும்பான்மையானோர் சங்கரிக்கு ஆதரவாக இருந்ததுடன் சங்கரியைப் பதவி நீக்கும் தீர்மானம் முன்வைப்பவர்கள் மிகுந்த கண்டனத்துக்கு உள்ளாகும் நிலைமையே நிலவியது.

இதனால் அவரைப் பதவி நீக்கம் செய்யும்படி கோரிக்கை முன்வைக்க முனைந்தவர்கள் பின்வாங்கியதையடுத்து மீண்டும் சங்கரியின் தலைமைத்துவம் கூட்டணிக்குள் உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது.

புலிகளுக்குப் பதில் சொல்ல முடியாத நிலையில் அவர்களைச் சமாளிக்கும் விதத்தில், இடைக்கால நிர்வாக சபையை வழங்க வேண்டுமென்று தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளனர்.

ஆனால், புலிகள் இத்துடன் திருப்திகொள்ள மாட்டார்களென்று நன்கு தெரிந்த கூட்டணிப் பிரமுகர் ஜோசப் பரராசசிங்கம், ஆனந்தசங்கரி மீது நம்பிக்கை உண்டெனப் பிரேரணையொன்று நிறைவேற்றப்படவில்லையென்றும், ஏனைய விடயங்கள் பேசியதில் நேரம் கழிந்துவிட்டதால் சங்கரி தொடர்பான விடயம் எடுத்துக்கொள்ளப்படவில்லையென்றும், பத்திரிகைகளுக்குத் தெரிவித்துள்ளார்.

இது விழுந்தாலும் மீசையில் மண் படவில்லை என்று கூறுவது போலன்றி வேறில்லை.

இதேவேளை கடந்த சனிக்கிழமை பத்திரிகையாளர் சந்திப்பில் கேட்கப்பட்ட சங்கரி தொடர்பான கேள்வியொன்றுக்குப் பதிலளித்த புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், அதிருப்தி கலந்த பதிலொன்றையே தெரிவித்திருந்தார்.

அது கூட்டணியின் உட்கட்சி விவகாரமென்றாலும், ஆனந்தசங்கரியின் சில செயற்பாடுகள் தமிழ் மக்களால் அருவருக்கத் தக்க வகையில் பார்க்கப்படுகின்றன எனக் குற்றம் சாட்டி, அதற்கு மக்கள் எதிர்காலத்தில் தமது தீர்ப்பை வழங்குவர் எனத் தெரிவித்திருந்தார்.

சங்கரியைப் பொறுத்தவரை இது, மழை ஓய்ந்தாலும் தூவானம் நிற்கவில்லை என்ற நிலைமையெனக் குறைத்து மதிப்பிட்டு விட முடியாதென்பதையே புலப்படுத்துகிறது.


# NAVEEN CERAMIC

தரமான
☛ Wall Tiles, ☛ Floor Tiles
மற்றும் குளியலறை உபகரணங்களை
*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்




Naveen Ceramic No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

எமது புதிய காட்சியறை
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ன, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.

## சித்தர் மாந்திரீகம்

சர்வதேச ஸ்திரி புருஷ வசியம் மூலம் மனம் கவர்ந்த வாழ்க்கை அமைந்திடவும், திருமணத் தடை, புத்திர பாக்கியமின்மை, கணவர் மனைவி விவகாரம் ஜோதிடம் கைரேகை மூலம் நிவர்த்தி பெற்றிடலாம்.

சித்தர் மாந்திரீகம்
328/A, Aluthmawatha Road, Colombo-15
Tel :- 0722-601108

## மலையாள மாந்திரீகம்



பரம்பரை பரம்பரையாக 39 வருட கால தன்னிகரற்ற சேவை யாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறியவாருங்கள்!



**சுவிஸ் அன்பரின் கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்**
"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாப்பின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"**
"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

**ஜெர்மன் அன்பரின் மடல், "மகளின் திக்குவாய் குணமாகியது"**
"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

**லண்டன் அன்பரின் மடல், எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்.**
"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

**கொழும்பு அன்பரின் மடல், 39 வயதில் அதிசயத் திருமணம்**
"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

**குருணாகல் அன்பரின் மடல், "நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி"**
"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்தால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டேம்."

**பிரான்ஸ் அன்பரின் மடல், குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி**
"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்த என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**ஹட்டன் அன்பரின் மடல், "தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது"**
"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**இத்தாலி அன்பரின் மடல், "சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"**
"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**பதுளை அன்பரின் மடல், "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"**
"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கனவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

**கனடா அன்பரின் மடல், "ஜாதகத்தில் கூறியது பலிதம்"**
"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல், "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"**
"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது எளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

**யாழ்ப்பாண அன்பரின் மடல், அதிசய அக்னி குண்டல பூஜை**
"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா."

**கொழும்பு அன்பரின் மடல், அச்சொட்டான கைரேகை பலன்**
"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல், "அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"**
"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்குஎன்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?
வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?
இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.

உலக மாந்திரீக சக்கரவர்த்தி
பேராசிரியர் டாக்டர். பி.கே.சாமி (J.D.G.AN) J.P.

PRO. DR. P.K SAMY (J.D.G.AN) J.P.
SRI. DURGADEVI. MANTHARIKA UTCHADA PEEDAM,
162. KOTAHENA STREET. COLOMBO-13.
T.P. 342464, 342463, 431137.
FAX: 0094-1-344831.
E.MAIL: drpk samy . @ sttnet.lk.
HOT LINE: 344832, 470615

## பணிப்பெண்கள் - Housemaids

### மலேசியா

*மலேசியாவில் தமிழ் பேசும் / ஏனைய பணிப்பெண்களுக்கான ஏராளமான வேலைவாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. தமிழ் பணிப்பெண்களுக்கு பாதுகாப்பான தமிழ் இல்லங்களிலேயே வேலை வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்படும்.*

சம்பளம் RM - 500
ரூபா. - 13,000

நிபந்தனைகளும் விதிமுறைகளும்
- வயது - 25 - 40 வரை
- உணவு, தங்குமிட வசதி, வைத்திய வசதி இலவசம்
- சேவைக்காலம் இரண்டு வருடங்கள்
- இரு வழி விமான டிக்கட் இலவசம்

தமிழ் பணிப்பெண்களுக்கு முன்னுரிமை

உங்களது பாஸ்போட், பாஸ்போட் அளவிலான 4 கருப்பு வெள்ளை புகைப்படங்கள், 6 வர்ண புகைப்படங்கள், போஸ்காட் அளவிலான 2 வர்ண புகைப்படங்கள் சகிதம் நேரில் வரவும்.

TRANS GULF TGL GROUP
Since 1990

ட்ரான்ஸ் கல்ப் பிரைவேட் லிமிட்டட்
இலக்கம் 47, இரண்டாம் மாடி, ஹொஸ்பிடல் வீதி, கொழும்பு 01.
(ஹில்டன் ஹோட்டலுக்கு அருகாமையில்)
தொலைபேசி இல: 321132, 329258

## இன்னொருவர் பார்வையில்

# சமாதானத்தின் விலை

இலங்கை அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து ஏ-9 வீதி என்றழைக்கப்படும் வவுனியா - யாழ்ப்பாணம் வீதி போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்டுள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட இதே வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆங்காங்கே நடைபெறுகின்றன. எனினும் போரினால் பெரும் பாதிப்புக்களைச் சந்தித்த யாழ்ப்பாணக் குடாநாட்டின் பொருளாதார முன்னேற்றம் வெகு தொலைவில்தான் இருக்கின்றது.

பதினெட்டு மாதங்கள் கடந்துவிட்ட பேச்சுவார்த்தைகளின் மூலமாக எட்டப்பட்ட சிறிதளவு முன்னேற்றம், நம்பிக்கை என்பன விரைவான பின்னடைவுகளைக் கண்டுள்ளது. யாழ்ப்பாண நகரப் பகுதியில் கடைகளிலும், நடைபாதையோரங்களிலும் ஆடம்பரப் பொருள்கள் பெருமளவில் குவிக்கப்பட்டு அதிக விலையில் விற்கப்படுகிறது. எனினும் நீண்ட தூர நோக்கிலான பொருளாதார அபிவிருத்தி என்பது பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. புதிய தொழில் துறைகள் முனைப்புடன் உருவாக்கப்படாமை, வழமைக்கு மாறான விலையுயர்வுகள், சர்வதேச தொண்டர் அமைப்புகளின் வெளியேற்றம் என்பன போன்றவை வடபகுதியின் பொருளாதாரத்தில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

சண்டே லீடர் இதழின் சார்பாக யாழ்ப்பாண வர்த்தக சம்மேளனத்தைச் சேர்ந்த வசந்தகுமார் என்பவருடன் பேசினேன். போர் நிறுத்த உடன்பாட்டின் மூலம் வாய்ப்புகள் பெருகும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் குடாநாடு பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மையைப் பேண எவ்வளவுக்கு போராட வேண்டியுள்ளது என்பதனை அவர் தெளிவுபடுத்தினார். புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் அடிமட்டத்தில் இருந்துதான் சகல வேலைகளையும் ஆரம்பிக்க வேண்டியிருந்தது. ஆனால் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதையும் அடையவில்லை. யாழ்ப்பாணத்திற்கு வெளியிலிருந்து புதிய முதலீட்டாளர்கள் எவரும் இதுவரை வரவில்லை.

விவசாயம், மீன்பிடி மற்றும் உணவுப் பொருட்கள் பதனிடல் போன்ற துறைகளில் முதலீடு செய்யக் கூடிய முதலீட்டாளர்கள் வருவார்கள் என்றுதான் இன்னமும் எதிர்பார்க்கிறோம். இது கால வரையில் முதலீட்டாளர்களைக் கவரக் கூடிய உத்தியோகபூர்வ செயற்பாடுகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. இருந்தும் முதலீட்டாளர்களைக் கவரக் கூடிய வகையில் இங்குள்ள வளங்கள் குறித்து விபரிக்கும் சாத்திய வள அறிக்கைகளைத் தயார் செய்வதற்கான ஆய்வுகளில் நாம் இப்போது ஈடுபட்டு இருக்கிறோம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட முதலீடுகளில் ஈடுபட முன்வருமாறு யாழ்ப்பாண வர்த்தக சமூகம் இவ் வருட ஆரம்பத்தில் இலங்கை வர்த்தக சம்மேளனத்தைக் கோரியிருந்தது. ஒரு சில தனிப்பட்ட வர்த்தக நிறுவனங்கள் தமது கிளைகளை ஆரம்பிக்கவும், உற்பத்திகளைச் சந்தைப்படுத்தவும் முற்பட்டனவே தவிர குறிப்பிடத் தக்க முதலீட்டுத் திட்டம் எதுவும் வரவில்லை. தகவல் தொழில் நுட்பம், மோட்டார் வாகனம் மற்றும் சர்வதேச கல்வி நிறுவனங்கள் போன்ற துறைகளிலாவது நீண்டகால நோக்கிலான முதலீடுகள் கிட்டும் என்ற எதிர்பார்ப்பு இன்னமும் நடைமுறைக்குச் சாத்தியமாகவில்லை. தொழில் வாய்ப்புக்களை உருவாக்கக் கூடிய தொழிற்சாலைகளும், உற்பத்தியை மேற்கொள்ளும் அலகுகளும் இப்போதும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து தூர விலகியே இருக்கின்றன.

### நீண்ட கால நோக்கிலான முதலீடுகள்!

எப்படியிருந்தபோதும் யாழ்ப்பாண நகரம் நுகர் பொருட்களால் நிறைந்து போயிருக்கிறது. தொலைக்காட்சிப் பெட்டிகளிலிருந்து, விளையாட்டுப் பொருட்கள் மற்றும் மின்சார வீட்டுப் பாவனைப் பொருட்கள் வரை அனைத்தும் சன சந்தடி மிகுந்த யாழ்ப்பாண வீதிகளிலும், கடைகளிலும் தாராளமாகக் காணப்படுகிறது. விரைவான விற்பனையை நோக்கமாகக் கொண்ட செயற்பாடுகள் காணப்படுகிறதேயன்றி போரினால் பாதிக்கப்பட்ட நகரத்தை மீளக் கட்டியெழுப்பும் நோக்குடன் கூடிய உற்பத்தியை இலக்காகக் கொண்ட பொருளாதார செயற்பாடுகளைக் காண முடியவில்லை.

"கொழும்பில் நான் விற்பனை செய்யக் கூடிய விலையிலும் பார்க்க இரு மடங்கு விலைக்கு இங்கு பொருட்களை விற்பனை செய்ய முடிகிறது. அதனால் இங்கு வந்தேன்." இவ்வாறு நகரப் பகுதியில் வீட்டுப் பாவனைக்கான அலுமினியப் பொருட்களை விற்பனை செய்துகொண்டிருந்த வியாபாரி ஒருவர் கூறினார். அவர் மேலும் கூறுகையில் "நான் இங்கே சுற்றித்திரிய விரும்பவில்லை. எனது பொருட்களின் விற்பனை பூர்த்தியானதும் நான் மீண்டும் திரும்பிவிடுவேன். இங்குள்ள எதுவும் நான் இங்கேயே தொடர்ந்து தங்கியிருக்க வேண்டும் என்னும் ஆர்வத்தை எனக்கு ஊட்டவில்லை" என்கிறார்.

'புலிகள் மேற்கொள்ளும் வரி விதிப்புக்கள் காரணமாகப் பொருட்களின் விலையில் ஒரு உறுதித்தன்மையைப் பேண முடியாமலும் இருக்கிறது. தொலைநோக்குடன் கூடிய முதலீடுகளில் வர்த்தகர்கள் ஈடுபடவும் தயங்குகின்றனர். இந்த நிலையில் மாற்றம் ஏற்படாத வரை யாழ்ப்பாணம் முதலீடுகளுக்குப் பாதுகாப்பற்ற பிரதேசமாகவே இருக்கும்' என்கிறார் குமார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஊடாகப் பயணம் செய்யும் எவரும் போரினால் ஏற்பட்ட பாதிப்புக்களையும், அழிவுகளையும் இப்போதும் துல்லியமாகக் கண்டுகொள்ள முடியும். உடைந்த - குண்டுகள் துளைத்த கட்டடங்கள், கண்ணிவெடி புதைக்கப்பட்ட நிலங்கள் என்பன அவற்றில் சிலவாகும். கட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்படுகின்றபோதும், கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றபோதும் கூட பொருளாதாரத் துறையில் பதினெட்டு மாதங்களுக்கு முன்பிருந்த அதே நிலையில்தான் யாழ்ப்பாணம் இப்போதும் இருக்கிறது. அதுவும் புலிகளின் முறையற்ற நிதி அறவீடுகளால் மேலும் மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகிறது.

"தற்போது முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கை நிறைவேறி புலிகளிடம் அதிகாரம் கிடைக்குமானால் அவர்களின் நிதி அறவீடுகள் குறையும் என்று எதிர்பார்க்கிறோம். அதற்காக அதனை நோக்கிச் செயற்படுகின்றோம்" எனக் கூறுகிறார் வசந்தகுமார். "ஏ-9 வீதி ஊடாகப் பயணம் செய்யும் வர்த்தக வாகனங்கள் புலிகளின் நிதி அறவீடுகளால் பெரும் பாதிப்புக்களைச் சந்திக்கின்றன. பல சோதனைச் சாவடிகள் நிறைந்த இந்த வீதியின் ஊடான பயணம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரும் முதலீடுகள் செய்வதற்கு வர்த்தகர்கள் தயக்கம் கொள்ளப் பிரதான காரணமாகும். வர்த்தகப் பொருட்களைச் சுமந்து செல்லும் பல ஊர்திகள் நீண்ட நேரம் காத்திருப்பதும், கடுமையான சோதனைகளுக்கு இலக்காகுவதும், பெரும் தொகைப் பணம் செலுத்தப் புலிகளால் நிர்ப்பந்திக்கப்படுவதும், வர்த்தகர்கள் யாழ்ப்பாணம் நோக்கித் திரும்புவதைக் கட்டுப்படுத்துகின்றன. நீண்ட தூரம் பயணம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருவதை விடவும் சிறிய தொகை இலாபத்துடன் தென்னிலங்கையில் சந்தைப்படுத்துவது பற்றி வர்த்தகர்களைச் சிந்திக்க வைக்கிறது."

"புலிகள் மேற்கொள்ளும் வரி விதிப்புக்கள் காரணமாகப் பொருட்களின் விலையில் ஒரு உறுதித்தன்மையைப் பேண முடியாமலும் இருக்கிறது. தொலை நோக்குடன் கூடிய முதலீடுகளில் வர்த்தகர்கள் ஈடுபடவும் தயங்குகின்றனர் என்கிறார் குமார். இந்த நிலையில் மாற்றம் ஏற்படாத வரை யாழ்ப்பாணம் முதலீடுகளுக்குப் பாதுகாப்பற்ற பிரதேசமாகவே இருக்கும்."

"சுற்றுலாத் துறை யாழ்ப்பாணத்தில் வளர்ச்சியடையும் என்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியதைத் தொடர்ந்து எதிர்பார்க்கப்பட்டது. எனினும் அதுவும் நடைபெறவில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தம் தனது இறுதி மூச்சுக்களை இழந்துவிடுகிறதோ சந்தேகம் காணப்படுவதும் இதற்கு ஒரு காரணமாகும். யாழ்ப்பாணத்துடனான வர்த்தகத்துறையைப் பாதிக்கும் மற்றுமொரு விடயம் புலிகள் பேச்சுவார்த்தை மேசையிலிருந்து பின் வாங்கியுள்ளதாகும்."

ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தை நோக்கி தென்னிலங்கையிலிருந்து பல பயணிகள் பேரூந்துகள் வந்தன என்கிறார் கண்டி வீதியில் தங்கு விடுதியை நடத்திவரும் ஒருவர். எனினும் காலப் போக்கில் தென்னிலங்கைப் பயணிகளின் வருகை படிப்படியாகக் குறைவடைந்து தற்போது ஏறத்தாழ நின்றுபோயுள்ளது. யாழ்ப்பாணம் நோக்கி வருபவர்கள் பலரும் விரைவாக அங்கிருந்து வெளியேறி வருவதையே காண முடிகிறது. யாழ்ப்பாணம் நோக்கிப் பலர் வர வேண்டும் என்பதைத் தூண்டக் கூடிய செயற்பாடுகள் எதுவும் இன்னமும் ஆரம்பிக்கப்பட்டதாக இல்லை. பிரதேச அபிவிருத்தியை ஊக்குவிக்கவும், வர்த்தகம் மற்றும் சுற்றுலாத் துறையை ஊக்குவிக்கவும் இன்னும் எத்தனையோ விடயங்கள் செய்யப்பட வேண்டியுள்ளது. வெளியிலிருந்து கிடைக்கும் பண உதவிகள் மூலமாகவே வாழ்ந்து வருகின்றோம். எனினும் சொந்த முயற்சியில் வருமானம் பெறக்கூடிய நிலைமையை நாம் தோற்றுவிக்க வேண்டும் என்றார் ஒரு சாதாரண கடைக்காரர்.

எனினும் வெறுமையாகக் கிடக்கும் தங்கும் விடுதிகள், இப்போது நகரப் பகுதியில் சாதாரணமாகவுள்ளது. மூன்று விருந்தினர் விடுதிகளை 'சண்டே லீடர்' சார்பாகச் சுற்றிப் பார்த்தோம். ஒன்றில் மட்டுமே சில விருந்தினர்களைக் காணக் கூடியதாகவுள்ளது. பல உணவுச்சாலைகளில் நாங்கள் மட்டுமே விருந்தினர்களாக இருந்தோம்.

சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் எனப்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பலவும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தமது செயற்பாடுகளைச் சுருக்கி வருகின்றமை உள்ளூர் பொருளாதார சுற்றோட்டத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள மற்றுமொரு அம்சமாகும்.

"உல்லாசப் பயணிகளாக வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளே அவர்களின் வெளிநாட்டுப் பணத்துடன் வந்து செல்பவர்களாக இருந்தனர்" என்று விருந்தினர் விடுதி உரிமையாளர் ஒருவர் கூறினார். போர் நிறுத்த உடன்பாடு எங்களுக்குச் சமாதானத்தைக் கொண்டு வந்திருக்கிறது. எனினும் அதனுடன் பொருள் ஈட்டும் பிரதான வழியொன்றையும் எடுத்துச் சென்று விட்டது என்கிறார் அவர்.

### அரச சார்பற்ற நிறுவனங்களின் வெளியேற்றம்

யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளில் சுமார் 20 பேர் அங்கிருந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் வெளியேறி உள்ளனர். இதனை உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினது இணைப்பாளரான சோதிநாதன் என்பவர் உறுதிப்படுத்தினார். போர் நடைபெற்ற காலப் பகுதியில் ஆர்வமுடன் செயற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் பலவும் இப்போது செயற்பாடுகளைச் சுருக்கி வருகின்றன. போர் நடைபெற்றபோது இந் நிறுவனங்களின் தேவையும் அதிகமாக இருந்தது. இந் நிறுவனங்களில் பலவும் அவசியம் தேவையான நல்ல பணிகளைச் செய்துள்ளன. எனினும் இப்போது இவற்றின் தேவைகள் அருகிப் போயுள்ளன.



பிரான்ஸைத் தளமாகக் கொண்டியங்கும் எல்லை கடந்த மருத்துவ சேவை அமைப்பு அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து முற்றாக வெளியேறியுள்ளது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் தனது உத்தியோகத்தர் தொகையை வெகுவாகக் குறைத்துள்ளது. சமாதானத்தை நோக்கிய பயணத்தில் நாடு சென்றுகொண்டிருக்கிறது. இதனால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டு வந்த அவசரப் பணிகளில் பல குறைக்கப்பட்டுள்ளன. சில முற்றாக நிறுத்தப்பட்டுள்ளன.

சமாதானப் பாதையின் காரணமாக ஆரோக்கியமான முதலீடுகள் கிடைத்து உள்ளூர் மக்களின் ஒத்துழைப்புடன் அமைதியான ஒளிமயமான வாழ்க்கை முறை கிடைக்கும் என்றே ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் உள்ளூரின் அரசியல் உறுதிப்பாடின்மை காரணமாக முதலீட்டாளர்கள் பலரும் தூர விலகித் தயங்கி நிற்பதையே காண முடிகிறது. அதே வேளை யாழ்ப்பாணத்திலிருந்து பலர் வெளியேறி வருவதையும், பொருளாதாரம் மற்றும் வேலை வாய்ப்பு வசதிகளை இழந்து வருதையும் அவதானிக்க முடிகிறது.

சமாதானத்திற்காக யாழ்ப்பாணம் கொடுக்கும் விலை மிகப் பெரியது. தற்போது அங்குள்ள அரச சார்பற்ற நிறுவனங்களில் பலவும் யாழ்ப்பாணத்தில் தகுதிவாய்ந்த தொழில்நுட்பவியலாளர்களை உருவாக்குவதிலேயே கவனம் காட்டுகின்றன. உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் கூட சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தல், தொழில் பயிற்சி வழங்கல், கணனிக் கல்வி ஊட்டல் போன்ற செயற்பாடுகளில்தான் ஈடுபட்டுள்ளன. "மனிதாபிமான மற்றும் நிவாரணப் பணிகளில்தான் இப்போது ஈடுபட்டு வருகிறோம். அத்துடன் பல்வேறு மட்டங்களில் தொழிற் பயிற்சிகளை வழங்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்" என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாண வதிவிடப் பிரதிநிதி அஹன்ஸ் பீட்டர் கூறுகிறார். ஆனால் தொழிற் துறைகள் விருத்தியடையாதவிடத்து ஆற்றல் மிக்க தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் வேலை வாய்ப்புக் கிடைப்பது அரிதாகவே இருக்கும். யாழ்ப்பாணத்தில். முதலீட்டுக் கான வாய்ப்புக்கள் பிரகாசமாகவே இருக்கிறது. ஆனால் அது நாட்டின் இதர பகுதிகளில் அதனுடன் பேண விரும்புகின்ற வர்த்தக வியாபாரத் தொடர்புகளில்தான் தங்கியுள்ளது. அதுவரையில் அந்தப் பிராந்தியத்தின் வளமான எதிர்காலம் என்பது கேள்விக்குரியதாகவே இருக்கும்.

நன்றி 'சண்டே லீடர்'
ஆக்கம் :
யாழ்ப்பாணத்திலிருந்து
Trudy Fraser.

# கனடாவில் தமிழ் வானொலி


திகதி.22 சித்திரை 2003
இடம் - டொரண்டோ பெருநகரின் நிலப்பரப்பை விட்டு விலத்திய மார்க்கம் பட்டணம்.

அவ்விடத்தே எம்மவரின் கௌரவத்தை தூக்கி நிறுத்தும்படியான ஒரு பெரிய மாளிகை.

அம் மாளிகையின் மறுக்கப்பட்ட இருட்டு அறையொன்றில் வானொலிப் பெட்டி ஒன்று உண்டு. இவ் வானொலி நான்கு அலைவரிசைகளில் தமிழ் பேசக் கூடியது. தமிழ் மட்டுமே பேசக் கூடியது.


இவ் வானொலியில் தினமும் நடைபெறும் உரையாடல்கள் பிரசித்தமானவை. அதன் ஒரு பகுதியையும், அதனைக் கேட்கும் ஒருவரின் மனோ நிலையையும் பங்குபற்றுபவர்களின் கருத்துக்களையும் நீங்களும் கேட்டுப் பாருங்கள்...

"வானலையில் யாரோ?"
"உது நான் வேலாயுதம்"
"ம்... சொல்லுங்க ஐயா! உங்கள் கருத்தை மற்ற நேயர்களும் கேட்கட்டும்."
"திடீரென ஊருக்குப் போறதெண்டா லேசான காரியமோ, அதுவுமில்லாம எங்கட முக்கிய சொந்த பந்தமெல்லாம் அநேகமான பேர் சுவிசிலையும் ஜேர்மனியிலும்தான் இருக்கினம். யுரோப்புக்குத்தான் ஒரு பயணம் போய்விட்டு வரவேணும்."
"நன்றிகள் ஐயா," நன்றிகள்,
"இன்றைய கருத்து உரையாடலில் நம் உரையாடிக் கொண்டிருக்கும் விடயத்தின் தலைப்பு இருபத்தைந்து வருட கால யுத்தத்தின் முடிவாய் எமது தாயகத்தில் சமாதானம் மலர்ந்துள்ளது. பாதை திறக்கப்பட்டு விட்டது. பஸ் ஓடுகிறது. பாண் கிடைக்கிறது. பருப்புக் கூட சங்கக் கடைக்கு வந்துவிட்டது."
"இப்படி ஒரு நாளுக்கா எத்தனை வருடங்களாக நாம் அகதிகளாக அலைந்தோம். எத்தனை ஆயிரம் உயிர்களைப் பலி கொடுத்தோம். நாம் ஊர் செல்லும் நேரம் வந்துவிட்டது. யாழ் சென்று, நாம் விட்டு வந்த வாழ்வை எப்படி எங்கெ இருந்து ஆரம்பிப்பது, வானலைக்கு வந்து நேயர்கள், கருத்துக்களைச் சொல்லலாம். அடுத்த நேயரைச் சந்திப்போம்! வானலையில் யாரோ"
"நான் மொன்றியல்ல இருந்து திருமதி நித்தியா ஜெயரூபன்."
"ம் நித்தியா.... நீண்ட இடைவெளிக்குப்பின் சொல்லுங்கள். உங்கள் எண்ணத்தை."
"நீங்கள் எடுத்திருக்கிறது நல்லதொரு விடயம், நாங்கள் எல்லோரும் அன்பாக இருக்க வேண்டும். எங்கட சைவ சமயத்திலை...."
"நித்தியா! நீங்கள் தலைப்புத் தாண்டி எங்கோ செல்கிறீர்கள். தாயகத்தில் இன்று சமாதானப் பூ மலர்ந்துள்ளது. யாழ் மண்ணிலே நாம் விட்டு வந்த பழைய வாழ்க்கையைத் தொடர வேண்டிய நேரம் வந்துவிட்டது. சொல்லுங்கள் நித்யா ஜெயரூபன் உங்கள் கருத்தை....."
"கீக், கீக், கீக், கீக்......"
"நித்யா ஜெயரூபன் தொடர்பைத் துண்டித்து விட்டார் போலும். நித்யா ஜெயரூபன் அழைப்புக்கு வாருங்கள், ஹலோ ஹலோ.... அடுத்த நேயரைச் சந்திப்போம். வானலையில் யாரோ"
"ஸ்காபுரத்திலிருந்து வரதன் சத்தியசீலன்"
"வணக்கம் வரதன்."
"யாழ்ப்பாணத்திற்கு ஒருக்கா போகத்தான் வேண்டும். அங்கே போய் திரும்ப இருக்கிற தெண்டால்... தெரியாதே.... இஞ்ச பழகீட்டம். நாங்கள் ஓக்கே. பிள்ளைகள் தெரியாதே பீட்ஸா, ஹம்பேக்கர் என்று சாப்பிட்டு பழகீட்டுதுகள். யாழ்ப்பாணத்திற்கு ஒருக்கா பிள்ளைகளைக் கூட்டிக்கிட்டுபோய் எங்கட கல்ச்சரை காட்ட வேண்டும். தெரியாதே.
"நன்றிகள் வரதன். நன்றிகள். நாம் இப்போது கனேடிய நீரோட்டத்துடன் ஐக்கியமாகிக் கொண்டிருக்கும் நேரத்தில் தாயகத்தில் தீர்வு மலர்ந்துள்ளது. நாம் யாழ் சென்று எமது பழைய வாழ்க்கையை எப்படி எங்கே இருந்து ஆரம்பிப்பது? அடுத்த நேயரைச் சந்திப்போம்! வானலையில் யாரோ...."
"கலோ"
"ம் செல்வமணி அம்மா"
"கண்டு பிடிச்சிட்டியள்"
"ம் சொல்லுங்க அம்மா, உங்கள் கருத்தை எப்போது தாயகம் செல்லப் போகிறீர்கள்?"
"போக விருப்பமில்லாமலே... உடனடியாக



போகத்தான் முடியவில்ல, இங்கு பல சோலிகள் கிடக்கு, கட்டாயம் போகத்தான் வேணும். ஏன் தெரியுமே? எனக்கொரு நேத்திக்கடன் கிடக்கிறது! மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலுக்கு என்ர கடசிப் பொடிக்கு கேஸ் கொஞ்சம் பிரச்சினையாய்ப் போய் சிட்டியன் தரமாட்டன் என்று சொல்லிட்டாங்கள், இந்த அறுவான் இமிக்கிரேசன் காரன்கள் விட்டேனா நான், உடன மாவிட்டபுரம் கந்தசாமிக்கு ஒரு நேர்த்தி வச்சன், நேத்தி வச்ச அடுத்த வருசமே சிட்டியன் தந்திட்டாங்கள், நேத்திக் கடன் முடிக்க எண்டாலும் போகவெல்ல வேணும். நீங்க

## நீங்களும் படிக்கலாம்! மாற்றுக் குரல்கள்



தருவது - ஆச்சர்சா

உங்கட ரேடியோவில எங்கள மாதிரி வயசானதுகள யாழ்ப்பாணத்திற்கு கூட்டிக் கொண்டு காட்டி....."
"நன்றி அம்மா, நேரம் சென்று கொண்டிருக்கிறது. அடுத்த நேயரைச் சந்திப்போம்..."
"உது நான் ஐயாத்துரை டென்னிஸ்ஸிலிருந்து"
"ம்... சொல்லுங்கோ ஐயா, எங்க உங்கள நெடு நாளாகக் காணோம். நீங்கள் வந்து கருத்துச் சொல்லாது போனால் எங்கள் கலந்துரையாடல் யுத்தம் இல்லாத ஈழம் போல் அல்லவா இருக்கிறது.... சொல்லுங்கள் ஐயா!"
"நீங்கள் எங்கள் தமிழ் சமூகத்திற்கு செய்யிற சேவையை முதலில் நான் பாராட்ட வேணும்.
இந்த சமாதானம் சரியா வரும் தம்பி.
ஒற்றுமையைப் பாருங்க. ரணிலுக்கும் மீசையில்ல, எங்கட தலைவருக்கும் மீசை இல்ல.
இது ஒண்டே போதுமே. ரெண்டு பேருட்ட சாதகத்தையும் பாருங்கோ. ரணிலுக்கு ஏழாம் இடத்தில சுக்கிரன். எங்கட தலைவருக்கும் ஒன்பதில் சுக்கிரன். எட்டாம் இடத்திலயும் ஒன்பதாம் இடத்திலயும் சுக்கிரன் நிண்டா ஜெயம்தான். இவன் புஷ் இருக்கானே, இவன் அழிஞ்சான். குரு பார்வை அவன விட்டு விலகித்திது. பதினோராம். லக்கினத்தில சனி... மங்கு சனி...."
"டமார்"
உடைந்து நொருங்கிற்று வானொலிப் பெட்டி.
"மனிசனுக்கு இருக்கிற விசரில.... உவங்களுக்கென்ன, வம்புக்கு இருந்து கொண்டு வெட்டியா அளக்கிறாங்கள்...."
கோபத்தின் உச்சமாய் உடைந்து கிடக்கும் வானொலிப் பெட்டியின் உதிரிப்பாகமொன்றை வேகமாய் உதைத்தான்.
"யாருமே சொல்லவில்லை. வெறும் வார்த்தையளவிலாவது சந்தோசமாய் யாழ்ப்பாணம் போய் வாழப் போகிறோம் என்று...."
"இவன்கள் என்ன செய்கிறானுகள்? 2000மாம் ஆண்டு ஊருக்குத் திரும்பி போவது பற்றி கேட்டவுடன் எப்படி பேசினான்கள், அப்போது எண்டால் போகத் தயார் மாதிரி.... இப்ப என்னண்டா.... ஏதேதோ, பேசுகிறானுகள்..."
அப்போது இதே வானலையில் நடந்த உரையாடலை நீங்கள் கேட்க விரும்புகிறீர்களா?

**அடுத்த வாரம் சந்திப்போம்!**

## விபசாரம் பெருகி வருகிறதாம்!



நமது நாட்டில் சட்ட ரீதியற்ற வகையில் விபசாரம் பெருகி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் விபசாரத்தைச் சட்ட ரீதியாக மாற்றும் வழிவகை குறித்து ஆராயப்பட்டு வருவதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

பாராளுமன்றத்தில் விபசாரத்தை சட்ட ரீதியாக்குவதற்கு ஒரு சட்ட மூலத்தைக் கொண்டுவர சிபார்சு செய்யப்பட்டபோது அதனைச் சட்டத்துறை அமைச்சு வன்மையாக எதிர்த்துள்ளது. அதற்குப் பிரதான காரணம், மத நிறுவனங்கள் இச் சட்ட மூலத்திற்குப் பலத்த எதிர்ப்பை தெரிவிக்கும் என்ற காரணம்தானாம்.

உள்ளூர் விபசாரம் இப்போது வெளிநாடுகளிலிருந்து பெண்களைக் கொண்டுவந்து நடாத்தும் அளவிற்கு விரிவடைந்துள்ளது. ரஷ்யா, தாய்லாந்து போன்ற நாடுகளிலிருந்து இலங்கைக்கு பெரும் விபசாரப்படையே இறக்குமதி செய்யப்படுகிறதாம்.

ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள், கஷினோ கிளப்புகள், தனியார் வீடுகளில் இவ் விபசாரம் ஒஹோவெனக் கொடிகட்டிப் பறக்கிறதாம்... விபசாரத்தை சட்ட ரீதியாக மாற்றுவதா இல்லையா என்பதும் இலங்கையின் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக இப்போது மாறிவிட்டது.

## உலகம் சூடாகி வருகிறது!

இன்று உலகம் வெப்பம் மிகுந்து வருவதை எல்லோரும் காண்கிறோம்! வெயிலின் அகோரம் தாங்க முடியவில்லை. இரவில் ஒரே புழுக்கம். நேற்று உலகம் இப்படி இல்லையே என்ற கவலை நம்மை பிடித்தலைக்கிறது. எப்படி இந்த உலகம் முன்னதை விட அதிக வெப்பமாகியது?



இவற்றிற்கெல்லாம் மனித நடவடிக்கைகள்தான் பிரதான காரணம். உலகில் தொழிற்சாலைகள் பெருகின. கரிய அமில வாயு, மித்தேன் வாயுக்கள் அதிகம் இத் தொழிற்சாலைகளில் இருந்து வெளியிடப்படுகிறது. இது உலகின் வெப்ப நிலையை அதிகரித்துவிட்டது. காடுகள், நீர் நிலைகள், நீர் வீழ்ச்சிகள் அழிக்கப்படுகின்றன. வாகனங்கள், இயந்திரங்களின் பாவனைகள் அதிகரித்துவிட்டன.

இவையெல்லாம் எதற்காகச் செய்யப்படுகின்றன என்று கேட்டால், மனிதனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகச் செய்யப்படும் மேம்பாடுகள் என்கிறார்கள். ஆனால் இப்படியே போனால் உலகில் மனித உயிர்களின் ஆரோக்கியமான வாழ்வு கேள்விக்குறியாகிவிடும் என்கிறார்கள் மனிதவியலாளர்கள்.

இன்றைய உலகம் திரிசங்கு நிலையில் உள்ளது.

மனிதனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதா?

அல்லது மனிதனைப் பாதுகாத்து அவனை ஆரோக்கியமாக வாழ விடுவதா என்பதே உலகின் முன் உள்ள கேள்வியாகும்.

# கொழும்பில் இடைக்கால நிர்வாக யோசனை தயாராகிறது

## இஸ்ரேலில் ஆயுத பேரம் நடக்கிறது

சுமார் ஒன்றரை வருட கால சமாதான முயற்சிகளில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நாட்டின் பாதுகாப்பு நிலைவரங்களை முற்றிலுமாகப் புறக்கணித்துச் செயற்படுகிறது என்ற எதிரணிகளின் குற்றச்சாட்டுக்கு விடையளிக்கும் விதத்திலும் தூக்கத்திலிருந்து திடீரென விழித்துக்கொண்டது போலவும் அரசாங்கம் ஆயுதக் கொள்வனவு விடயங்களில் ஆர்வம் காட்டத் தொடங்கியிருக்கிறது.

கடற்படைக் கலங்களுக்குத் தேவையான சக்திவாய்ந்த 30 மில்லி மீட்டர் கெனோன் புஷ் மாஸ்டர் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் நோக்கில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் கடற்படைத் தளபதி தயா சந்தகிரி ஆகியோர் இஸ்ரேலுக்கு விஜயம் செய்துள்ளார்கள். இந்த இருவரது விஜயமும் தனித்தனியாக இடம்பெற்றது எனப் பாதுகாப்பு அமைச்சு முன்னதாக அறிக்கை ஒன்றில் கூறியிருந்தபோதிலும் அவர்களது நோக்கம் ஒன்றுதான் என்பதில் ஐயமில்லை.

கடற்புலிகளுக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையில் கடற்படையினரின் தாக்குதல் திறனை மேலும் விருத்தி செய்ய வேண்டிய தேவை பற்றி அரசாங்கத்திற்கு பாதுகாப்பு உயர் மட்டங்களினால் வலியுறுத்தப்பட்டதை அடுத்து இந்த ஆயுதக் கொள்வனவு முயற்சியில் அரசாங்கம் இறங்கி இருப்பதாகத் தெரியவருகிறது.

புலிகள் வெளிப்படையாகவே போர் ஒன்றுக்குத் தயாராகி வரும் நிலையில் அரசாங்கம் சமாதானம் சமாதானம் என்று கூறிக்கொண்டு தேசிய பாதுகாப்பை மிகுந்த அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கிவிட்டதாகக் கடந்த நாட்களில் தொடர்ச்சியான குற்றச்சாட்டுகள் எழுந்தன. ஆனால் அரசு எதையும் கண்டுகொள்ளவில்லை. ஆனால் நிலைமை போகிற போக்கில் எதிர்காலத்தில் ஆயதங்களின் தேவை நிச்சயம் என்பதை உணர்ந்ததனால் இப்படி சமாதானத்தின் மறுபக்கம் பற்றியும் அரசாங்கம் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறது.

கடந்த காலங்களில் ஒரு கட்டத்தில் இராணுவத்தினரின் வெடிமருந்துக் கையிருப்பு போர் ஒன்று ஏற்பட்டால் ஒரு சில நாட்களுக்கு மாத்திரமே தாக்குப் பிடிக்கக் கூடிய நிலையில் இருந்தது. ஆனால் சமாதான முயற்சிகள் தடைப்பட்டதோடு இராணுவம் தனது வெடி பொருள் கையிருப்பை மூன்று மாதத்திற்குத் தேவையான அளவுக்கு உயர்த்திக்கொண்டது. இப்போது கடற்படையை நவீன மயப்படுத்தும் செயற்பாடுகள் தொடங்கியுள்ளன.

இலங்கைக் கடற்படைக்கு அதி நவீன தாக்குதல் இயந்திரங்களை வழமையாகவே சலுகை விலையில் கொடுத்து வரும் இஸ்ரேலிடமே இம்முறையும் அரசாங்கம் உதவி நாடியிருக்கிறது.

கடந்த மாத இறுதியில் இஸ்ரேலிய பாதுகாப்புத் துறையுடன் தொடர்புடைய உயர் மட்டக் குழுவொன்று கொழும்பு வந்து அரசாங்க அதிகாரிகளையும் முக்கியஸ்தர்களையும் சந்தித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் பின்னரே பாதுகாப்பு அமைச்சரின் இஸ்ரேல் விஜயம் இடம் பெற்றுள்ளது. இந்த விஜயத்தின்போது திலக் மாரப்பனவும், தயா சந்தகிரியும் இஸ்ரேலின் பலதரப்பட்ட ஆயுத உற்பத்தி முகவர் நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடுவார்கள் எனத் தெரிய வருகிறது.

இதே வகையான ஆயுதங்களை அமெரிக்காவிடம் இருந்து கொள்வனவு செய்யும் திட்டங்களையும் அரசாங்கம் கொண்டிருந்தது. எவ்வாறெனினும் கடற்படையின் அதிக அளவு கலங்கள் இஸ்ரேல் உற்பத்தியாகையாலும் இலாபம் கருதியும் இவற்றை இஸ்ரேலிடம் இருந்து வாங்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.



முன்னதாக கடற்படையின் சிரேஷ்ட அதிகாரிகள் இருவர் அமெரிக்கா சென்று அங்குள்ள ஆயுத தளபாடக் கொள்வனவு வசதிகள் குறித்து ஆராய்ந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எவ்வாறெனினும் சமாதான முயற்சிகளுக்கு மத்தியில் இவ்வாறான ஒரு புதிய நிலையை அரசாங்கம் எடுத்திருப்பது முக்கியமான நிகழ்வாக நோக்கப்படுகிறது. ஒரு புறம் புலிகளுக்கு அனுப்பவென இடைக்கால நிர்வாக யோசனைகளைத் தயாரித்துக்கொண்டிருக்கும் அதே வேளை மறுபுறம் நவீன ஆயுதங்களைச் சேகரிப்பதிலும் ஈடுபட்டுள்ளது. இது முரண்பாடாக இருப்பினும் இந்த முரண்பாட்டைப் புலிகள் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டனர். சமாதானத்தின் மீது அர்ப்பணிப்புடன் இருப்பதாகக் கூறிக்கொண்டு கப்பல்களில் ஆயுதம் கொண்டு வந்து குவிக்கிறார்கள் என்று மூத்த படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் காலங்களில் ஆயுதப் படைகளை மேலும் பலப்படுத்த அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது. இப்போது, அதி தீவிரமாக யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தைப் போன்று படைகளுக்கான ஆட்சேர்ப்பு இடம்பெற்று வருகிறது. இந்த ஆட்சேர்ப்பில் அரசாங்கம் இம்முறை சற்று வித்தியாசமான ஒரு உத்தியைக் கையாள்கிறது. அதாவது படைகளுக்கு ஆள் தேவை என்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்து சமாதானத்தின் மீது தான் வைத்திருக்கும் நம்பிக்கை குறைந்துவிட்டதாக சர்வதேச சமூகத்துக்கு உணர்த்திவிடாமல், வாகனங்களில் ஒலிபெருக்கிகளைப் பொருத்திக்கொண்டு சிங்களக் கிராமங்களுக்கு நேராகச் சென்று 'கென்வசிங்' முறையில் ஆட்களைத் திரட்டும் செயற்பாடுகள் நடந்து வருகின்றன.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பலாத்காரமாகப் புலிகளினால் முகாம்கள் அமைக்கப்படுவது குறித்த சர்ச்சை, இராணுவ ஒத்திகை, ஆயுதக் கடத்தல் செய்திகள், அரசாங்கத்தின் ஆயுதக் கொள்வனவு முயற்சிகள் எல்லாவற்றையும் வைத்துப் பார்க்கும்போது இரு தரப்பினரும் சமாதானம் குறித்து கிட்டத்தட்ட ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டார்கள் போல் தெரிகிறதா....?

**படைகளுக்கான ஆட்சேர்ப்பு இடம்பெற்று வருகிறது. இந்த ஆட்சேர்ப்பில் அரசாங்கம் இம்முறை சற்று வித்தியாசமான ஒரு உத்தியைக் கையாள்கிறது.**

# பொ.ஐ.மு – ஜே.வி.பி. கூட்டு சாத்தியமா?

பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பி.யும் தங்களுக்குள் கூட்டமைப்பொன்றை உருவாக்கிக் கொள்ள பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தபோதே இது அத்தனை சுலபத்தில் நிகழக் கூடிய ஒன்றல்ல என்ற ஊகங்கள் பரவலாக வெளியிடப்பட்டன.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை வீழ்த்த வேண்டும் என்ற ஒரு பொதுவான குறிக்கோள் தவிர இந்த இரண்டு தரப்பினருக்கும் இடையில் மிக அதிகமான முரண்பாடுகள் இருந்தன. ஜே.வி.பி. தனது பாராளுமன்ற அரசியல் எழுச்சியில் சிங்கள தேசிய வாதத்தையே பெரும் அளவில் நம்பியிருக்கும் ஒரு கட்சி. நேரடியான புலி எதிர்ப்பும் தேசிய வாதமுமே அதன் அடிப்படைக் கோட்பாடுகள். சர்வதேச சமூகம் பற்றியோ அரசு உருவாக்கத்தின் இராஜதந்திர நடைமுறைச் சிக்கல்கள் பற்றியோ ஜே.வி.பி.க்குக் கவலைகள் கிடையாது. அதன் குறி தேசிய வாத உணர்வுடைய இளைஞர் கூட்டத்தின் வாக்கு வங்கிதான்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினதும், பொதுஜன ஐக்கிய முன்னணியினதும் நிலைமை வேறு. இந்த நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றக் கூடிய பலமிக்க தேசிய கட்சி, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி என்ற வகையில் ஜே.வி.பி.யின் சிவப்புக் கோடுகளைத் தொட இவர்களால் முடியாது. எனவே ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை வீழ்த்துவது என்ற ஒரு இலக்கில் இருந்துகொண்டு தங்கள் மத்தியில் உள்ள மற்றெல்லா முரண்பாடுகளையும் சமன் செய்துதான் இந்த இரு தரப்பினரும் ஒரு கூட்டமைப்புக்குள் வர வேண்டும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை வீழ்த்த வேண்டும் என்பதில் ஜே.வி.பி.யும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் கருத்தொருமிப்பில் இருக்கின்றபோதிலும் எதற்காக அரசாங்கத்தை வீழ்த்த வேண்டும் என்பதில் இரண்டு கட்சிகளும் இரு வேறு முனைகளில் சிந்திக்கின்றன. ஜே.வி.பி. இதற்காக மக்கள் முன் சொல்லும் காரணம், மேற்கத்தைய காலனித்துவ வாதிகளின் சதித் திட்டத்திற்குள் நாடு சிக்கியிருக்கிறது. ஐ.தே.மு. அரசு இந்தச் சதியில் பங்குதாரராகி நாட்டைத் துண்டாடிப் புலிகளுக்குக் கொடுக்கப் போகிறது. எனவே அரசாங்கத்தை வீழ்த்த வேண்டும். இதுதான் ஜே.வி.பி.யின் நியாயம்.

பொ.ஐ.மு. இந்தக் கருத்துருவத்தில் அத்தனை ஆழமாகத் தன்னைத் திணித்துக்கொண்ட ஒரு கட்சி அல்ல. அது இன்னமுமே இனப் பிரச்சினைக்கான தீர்வாக பேச்சுவார்த்தை மூலம் எட்டப்படும் சமாதானத்தையே நம்பும் ஒரு தரப்பு. ஜே.வி.பி. கூறுவது போன்ற காலனித்துவவாத சதித்திட்டம் குறித்த கவலை பொ.ஐ.மு.விடம் இல்லை. இந்தக் கட்சிக்கு அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான நோக்கம் வழமையான பிரதான எதிர்க்கட்சிக்குள்ள நோக்கம்தான். அதாவது ஜனநாயக மரபில் ஆளுங்கட்சியை வீழ்த்தி அதிகாரத்தைக் கைப்பற்ற எதிர்க்கட்சி கொண்டிருக்கும் விருப்பம். இதற்குள் தனிப்பட்ட அரசியல் தேவைகள் சில காலத்தைக் கட்டாயப்படுத்துகின்றன. ஜனாதிபதியின் பதவிக் காலம், அவருக்குப் பின்னர் கட்சியின் தலைவராக வேண்டுமென்ற அனுரா பண்டாரநாயக்காவின் கனவு, மஹிந்த ராஜபக்ஷவை ஓரங்கட்டும் பண்டாரநாயக்க குடும்பத்து முயற்சி என்று பல விடயங்கள் இதற்குள் அடங்கியிருக்கின்றன.

இந்தக் கூட்டமைப்பு ஏதோ ஒரு வகையில் தங்களுக்குள் உள்ள கருத்து முரண்பாடுகளைக் களைந்து கொண்டாலும் கூட கூட்டமைப்பின் அதிகாரங்களை அல்லது பதவிகளைப் பகிர்ந்துகொள்வதில் சிக்கல்கள் தோன்றியிருக்கின்றன. சுதந்திரக் கட்சியின் சிக்கல்களை ஜே.வி.பி. நன்கு அறியும். அதனால் அது கூடுதல் கோரிக்கைகளை முன்வைத்து புதிய கூட்டின் கொள்கை வகுக்கும் பலத்தைத் தனது கைக்குப் பெற்றுவிடத் துடிக்கிறது.

அனுரா பண்டாரநாயக்கா ஜே.வி.பி. கூட்டை வெகுவாக ஆதரிப்பவர். அக்காவுக்குப் பின்னர் தன்னை ஜனாதிபதி வேட்பாளராக நிலைநிறுத்திக்கொள்ள ஜே.வி.பி.யை விட்டால் வேறு வழியில்லை என்ற நிலையில் அனுராவின் நோக்கம் தெளிவானது.

புதிய கூட்டின் செயலாளர் பதவியில் குறி வைத்திருக்கும் நிமல் சிறிபால டி சில்வா இப் பதவி ஜே.வி.பி.யைச் சார்ந்த ஒருவருக்கு வழங்கப்படுவதை விரும்பவில்லை. இவர்கள் கூட்டுச் சேர்ந்தால் தன்னை ஓரங்கட்ட முயற்சிக்கலாம் என்ற எச்சரிக்கை உணர்வு மஹிந்த ராஜபக்ஷவிடம். இவ்வாறு பல கொள்கை, தனிநபர் சிக்கல்களுக்குள் மாட்டியிருக்கிறது இந்தக் கூட்டு. ஆனால் கடந்த வாரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் ஜனாதிபதி திட்டவட்டமாகக் கூறியது இதுதான். "யார் என்ன சொன்னாலும் ஜே.வி.பி.யுடன் நாம் ஒப்பந்தம் ஒன்றைச் செய்தே தீருவோம்."




**அரசாங்கத்தை வீழ்த்த வேண்டும் என்பதில் ஜே.வி.பி.யும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் கருத்தொருமிப்பில் இருக்கின்றபோதிலும் எதற்காக அரசாங்கத்தை வீழ்த்த வேண்டும் என்பதில் இரண்டு கட்சிகளும் இரு வேறு முனைகளில் சிந்திக்கின்றன.**



ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி
ஓம் சக்தி என்றுரை செய்திடு வோம்,
ஓம் சக்தி என்பவர் உண்மை கண்டார், சுடர்
ஒண்மை கொண்டார். உயிர் வண்மை கொண்டார்.

சுப்பிரமணிய பாரதியார்–



## சொர்க்கத்துக்கு சுருக்கு வழி!



### பாப்பா முரசு சிறுகதை

ரிஷிகேஷ் என்ற பெரியவர் தீவிர கடவுள் பக்தர். விசேச நாட்களில் கோவில்களில் கதா காலட்சேபம் (பிரசங்கம் அல்லது சொற்பொழிவு) செய்வதில் வல்லவர்.

அவரது கதாகாலட்சேபம் என்றால் கோவிலில் கூட்டம் நிரம்பி வழியும்.

அவரது பேச்சு மக்களை வசப்படுத்தி இருந்ததுக்கு காரணம், அவர் தனது சொற்பொழிவின் இடையிடையே நகைச்சுவை கலந்த உதாரணங்களை சொல்லுவதுதான்.

சிரிக்காதவர் கூட அவரது நகைச்சுவையைக் கேட்டுச் சிரித்துவிடுவர்.

ஒரு நாள் இரவு.....

கோவில் ஒன்றில் அவர் கதாகாலட்சேபம் நடத்திக்கொண்டிருக்க, எள் விழுந்தால் எடுக்க முடியாத அளவுக்குக் கூட்டம் நிரம்பி அவரது காலட்சேபத்தை கேட்டுக்கொண்டிருந்தது.

ஒரு சீரிய கருத்தைச் சொல்லி முடித்தவுடன், சுவர்க்கம், நரகம் பற்றி பேசினார் ரிஷிகேஷ்.

"நம் எல்லாருக்குமே, ஏன்..... மனிதர்களாகப் பிறந்த அனைவருக்குமே, இறந்த பின்னே சொர்க்கத்திற்கு செல்ல வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. ஆனால் நரகத்துக்குபோகும் செயல்களைத்தான் மக்கள் அனைவரும் செய்துகொண்டிருக்கின்றனர்" என்றார்.

இந்த அரிய கருத்தை இரசித்து அனைவரும் கை தட்டினர்.

"போனது போகட்டும்! இனிமேலாவது பாவச் செயல்களை விட்டுவிட்டு, சொர்க்கத்தின் கதவுகளைத் தட்டுவதற்கான வழிகளைத் தேடிக் கண்டுபிடியுங்கள். இப்போது நான், இங்கு கூடியிருக்கும் திருமணமான ஆண்களிடம் மட்டும் ஒரு கேள்வி கேட்கப் போகிறேன்!" என்று கூறிவிட்டுக் கூட்டத்தை ஒரு நோட்டம்விட்டார்.

அவர் என்ன கேட்கப் போகிறாரோ என்று தெரிந்துகொள்ளும் ஆவலில் அனைவரும் இமைக்காமல் அவரையே பார்க்கத் தொடங்கினர்.

"உங்களில் யார் யாருக்குத் தன் மனைவியுடன் சொர்க்கத்துக்குச் செல்ல ஆசையாக இருக்கிறது? அவர்கள் மட்டும் கை தூக்குங்கள்!" என்றார் ரிஷிகேஷ்.

ஒரே ஒரு மனிதனைத் தவிர மற்ற அனைவருமே கையைத் தூக்கினார்கள். ரிஷிகேஷ் உள்பட மற்ற அனைவரும் கையைத் தூக்காத அந்த மனிதனை ஆச்சரியத்தோடு பார்த்தனர்.

ரிஷிகேஷ் அவனைப் பார்த்து, "நீ ஏன் கையைத் தூக்கவில்லை. உனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லையா?" என்று கேட்டார்.

அந்த மனிதன் பயபக்தியுடன் எழுந்து நின்று "ஆகிவிட்டது ஐயா!" என்றான்.

"காலட்சேபம் கேட்க அவளும் உன்னுடன் வந்திருக்கிறாளா?"

"இல்லை ஐயா! வீட்டில் வேலையாக இருக்கிறாள்!"

"நீ ஏன் உன் மனைவியுடன் சொர்க்கத்துக்கு செல்ல விரும்பவில்லை?"

அந்த மனிதன் சுற்றிலுமிருந்த மனிதர்களை ஒரு பார்வை பார்த்துவிட்டு "ஐயா! சொர்க்கத்துக்கு நாங்கள் இருவரும் போகத் தேவையில்லை. அவள் மட்டும் போனால் போதும். இங்கு என் வாழ்க்கை சொர்க்கமாகிவிடும்!" என்றான்.

அதைக் கேட்டு ரிஷிகேஷ் உள்பட, அங்கு கூடியிருந்த அனைவருமே சிரித்து விட்டனர்.

அந்தச் சிரிப்பு அடங்க வெகு நேரமாயிற்று.

ஆம் பிள்ளைகளே! சொர்க்கமும் நரகமும் இவ்வுலகில் நாம் வாழும் வாழ்வில்தான் தங்கியிருக்கிறது! ஆகவே வாழும் நாளில் நாம் மற்றவர்களுக்கு சந்தோசம் கொடுப்பவர்களாகவும் அன்பு செய்பவர்களாகவும் வாழ வேண்டும் மற்றவர்கள் எம்மைப் பார்த்து "இவர்கள் போல் யாருண்டு" என்று சொல்லும் அளவிற்கு மற்றவர்களைச் சந்தோசப்படுத்துபவர்களாக வாழ்வோம். என்ன குட்டீஸ் நீங்கள் ரெடியா?

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 26.07.2003.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 505**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 502**

பரிசுக்குரியவர்:
எஸ். தீனதயாளன்,
50 இராகலை நகர், அல்கரன் ஓய.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **கு. கௌசல்யா,** பு/த. றோ.க.த.வி., நரக்கள்ளி, நுரைச்சோலை. | **சி. சித்தார்த்தன்** 39 1/1, கிளிபட் இடம், கொழும்பு-04. |
| **ம. ஜசாக் லோகராஜ்,** மெ.த.மி.க. பாடசாலை, திருக்கோயில். | **ஆர். நிஸானா** தில்லையடி, புத்தளம். |
| **ஆர். தனுஷன்,** பாலர் பாடசாலை, கலுகல்ல எஸ்டேட், புஸ்ஸல்லாவ. | **வி. ஜஸ்வந்த்குமார்** ஏ.பொபி, வன்னி முந்தல், கல்பிட்டி |
| **ஆர். ரோஸா,** அல் அக்ஸா வீதி, கிண்ணியா - 02. | **ரி. ராஷ்மிகா,** மருதானை வீதி, கொழும்பு - 10. |
| **செல்வி அவிநியா வாலசிங்கம்,** பெயிலி குறுக்கு வீதி, மட்டக்களப்பு. | **வீ. தனோஜனா,** வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. |

## விடுகதைகளும் விடைகளும்

1. உழைப்பவரிடையே தோன்றுவான் அவன் யார்?
2. வேகாத வெயிலில் இவனை வைத்தால் உருகி உருகி ஒன்றுமில்லாதே போய்விடுவான் அவன் யார்?
3. ராஜா ராணி ஆட்டம் கைக்காசு ஓட்டம் அது என்ன?
4. கண்ணீர் விட்டபடி வெளிச்சம் தருகிறான் அவன் யார்?
5. ஒலி கொடுத்து அழைப்பான் ஓராயிரம் விஷயம் தருவான் அவன் யார்?
6. கண்ணெதிரே பிரமாண்டம் காட்டியவனை ஒரு கைக்குள் அடக்கி விடலாம் அவன் யார்?
7. இருட்டில் வெளிச்சம் அது என்ன?
8. மண்டபத்தில் ஆயிரமாயிரம் தொண்டர்கள் காவல். மன்னன் இருந்தும் ராணியே தலைவி, காப்பது இனிப்புப் பொட்டலம் அது என்ன?
9. இது மழைக்கு பிடித்த குடை அது என்ன?
10. சுட முடியாத இரட்டைக் குழல் துப்பாக்கி அது என்ன?

### விடைகள்

1. வியர்வை
2. பனிக்கட்டி
3. சீட்டு விளையாட்டு
4. மெழுகுவர்த்தி
5. பேஜர் கருவி
6. பஞ்சு மிட்டாய்
7. சினிமா
8. தேன்கூடு - ராணித்தேன் - தேன்
9. நாய்க்குடை
10. மூக்கு

## அதிசய உலகம்!



**ஆயி – ஆயி**

படத்தில் இருப்பவர் பெயர் ஆயி - ஆயி. லெமூர் எனப்படும் குரங்கு வகையைச் சேர்ந்த மிருகம். ஆபிரிக்காவில் உள்ள மடகாஸ்கர் பகுதியில் வசிக்கிறார். இவர் தனது உணவான பூச்சி, புழுக்களை எப்படித் தெரியுமா பிடிப்பார். தன்னுடைய நீளமான நடுவிரலால் மரத்தை டொக், டொக் என்று தட்டுவார். அப்போ மரங்களில் உள்ள பொந்துகளில் இருக்கும் பூச்சிகளின் அசைவு சத்தத்தை மிகவும் கவனமாக அவதானிப்பார். பண்ணுவார். பிறகென்ன மரப்பட்டைகளை கடித்துத் துப்பிவிட்டு உள்ளேயிருக்கும் தனது பிரிய உணவை நோண்டி எடுத்துச் சாப்பிடுவார். இவரும் மற்ற லெமூர் வகை மிருகங்களைப் போல ஆபத்தானவரே!

### சிப்பிக்குள் முத்து!




சிப்பி இனத்திலேயே மிகவும் நீளமான சிப்பி ராட்சச சிப்பி. இரண்டு நீளமான ஓடுகளை உடையது. இந்த ஓடுகள் 1.2 மீட்டர் நீளத்திற்கு வளரும். இதன் எடை 230 கி.கி. வரை இருக்கும்! இவ் வகைச் சிப்பி பசுபிக் மற்றும் இந்துமா சமுத்திரத்தில் காணப்படுகிறது!

மிகச் சிறிய இனங்களும் உள்ளன. அவற்றின் பெயர் டர்டான் சிப்பி. இதன் அளவு அரிசியில் பாதி தான் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். மிசிசிபி ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் காணப்படும் இவ் வகைச் சிப்பிகளில் எப்போதாவது முத்துக்கள் காணப்படும்.

## உங்கள் பொது அறிவு எப்படி?

1. தவறு செய்வது மனித குணம், அதை மன்னிப்பது தெய்வீக குணம். இதைச் சொன்னவர் யார்?
அலெக்சாண்டர்போப்
2. ஐ.நா.சபை தினம் எப்போது கடைப்பிடிக்கப்படுகிறது?
அக்டோபர் 24ந் திகதி
3. ரோமானியர்களது புராணங்களில் போர்க் கடவுளாக வர்ணிக்கப்படும் கிரகம் எது?
செவ்வாய்
4. காற்றின் ஒலி அலை வேகம் எவ்வளவு தெரியுமா?
ஒரு வினாடிக்கு 1070 அடிகள்.
5. பிரைட் (Bright)நோய் உடலின் எந்தப் பாகத்தைப் பாதிக்கும்?
சிறுநீரகம்.
6. ரொனால்ட் ரீகன் அமெரிக்க ஜனாதிபதியாக எந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்?
1980ம் ஆண்டு.
7. பிரெஞ்சு நாட்டின் தேவாலயங்கள் பற்றி புத்தகம் எழுதிய பிரபல சிற்பி யார்?
ரோடின்.
8. இஸ்ரேல் நாட்டின் நாணயத்தின் பெயர் என்ன? ஷேகெல்
9. உலகில் பிசியான விமான நிலையம் எது? சிக்காகோ நகரில் ஓ ஹரே
10. கிளியோபாட்ரா எந்த நாட்டின் இளவரசியாக இருந்தார்? எகிப்து.

### இந்த வாரப் புதிர்



இங்குள்ள ஒன்பது கொண்டை ஊசிகளைக் கொண்டு மூன்று சதுரங்களை உருவாக்குங்கள் பார்ப்போம். வேறு கொண்டை ஊசிகள் சேர்க்கக் கூடாது.

### அறிவுத் தேடல்

| | | |
|---|---|---|
| 4 | 3 | 8 |
| 9 | 5 | 1 |
| 2 | 7 | 6 |

சென்ற வாரப் புதிரின் விடை

# மரணத்தின் வரவேற்பு


01


02


03

ஈரானிய சகோதரிகளின் மரணம் கடந்த வாரம் முழு உலகையுமே கவலைக்குள் ஆழ்த்தியது.


இந்தச் சகோதரிகளை வெட்டிப் பிரிப்பது ஆபத்தான சத்திரசிகிக்சை என்பது திரும்பத் திரும்பக் கூறப்பட்டாலும் அவர்களது ஆசை அந்த ஆபத்துக்கு முகங்கொடுக்கத் தூண்டியது. அநுபவித்துவிட்ட கஷ்டம் போதும், இனிமேல் பிரிந்து வாழ்வது அன்றேல் மரணிப்பது என்ற பாரதூரமான முடிவுக்கு இந்தச் சகோதரிகள் வருகிறார்கள் எனும் போது, அவர்கள் பட்ட கஷ்டங்களின் அளவை ஓரளவேனும் நம்மால் புரிந்துகொள்ள முடியும். இந்தளவு தூரம் ஒருவரைச் சார்ந்து மற்றொருவரின் வாழ்க்கை அமைவது கற்பனைக்கு எட்டாத அளவு சிரமம் மிக்கது.

எப்படியோ அவர்களின் 29 வருட கால வாழ்வு அந்த சத்திரசிகிச்சையோடு முடிவடைந்துவிட்டது.

இங்கே படத்தில், ஈரானிய சகோதரிகளின் சத்திரசிகிச்சைக்கு ஒரு சில நிமிடங்களுக்கு முன்பாக, மயக்கப்பட்ட நிலையில், அவர்களுக்கு அவர்களது உறவுப் பெண் ஒருவர் முத்தமிடுவதையும், சத்திரசிகிச்சையில் மருத்துவர்கள் ஈடுபட்டிருப்பதையும் காண்கிறீர்கள்.

மரணித்த சகோதரிகளுக்கு சிங்கப்பூரிலும் ஈரானிலுமாக இரு வேறு இறுதிக் கிரியைகள் நடத்தப்பட்டு, ஈரானில் நல்லடக்கம் செய்யப்பட்டது. சொந்த நாட்டுக்கு உடல்களைக் கொண்டு செல்ல முன்னர் சிங்கப்பூரில் நடத்தப்பட்ட இறுதிக் கிரியை களின்போது எடுக்கப்பட்டது 3வது படம். ■

# இரத்தத்தில் ஊறிய துணிவு



இவரை அறிமுகப்படுத்த என்ன இருக்கிறது. மண்டேலா வைத் தெரியாமல் இருக்க முடியாது. கடந்த வாரம் தனது 85வது பிறந்த தினத்தைக் கொண்டாடினார் நெல்சன் மண்டேலா.

ஆனால் செய்தி அதுவல்ல. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் சாதாரண அதிகாரி ஒருவரையே சந்திப் பதற்கு உலகத் தலைவர்கள் தவம் கிடக்க வேண்டிய இந்தக் காலத்தில், தனது நாட்டுக்கு வந்த அமெரிக்க ஜனதிபதியைச் சந்திக்கக் கூடாது என்பதற்காகவே வெளிநாடு சென்றுவிட்டார் இவர். ஐ.நா.சபையைப் புறக்கணித்து உலகைத் தன் இஷ்டப்படி ஆட்டுவிக்கும் ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷுடன் தனக்கு கொடுக்கல் வாங்கல் இல்லை என்று கூறி அவரைச் சந்திப்பதை நிராகரித்தார் இவர்.

# புயலுக்கு முந்திய..

"என்னதான் 'ரோட் மப்' வரைந்து சமாதானம், சமாதானம் என்று பாடிக் கொண்டிருந்தாலும் இஸ்ரேல்-பலஸ்தீனத் திற்கு இடையிலான உறவில் சொல்லிக் கொள்ளும்படி எந்த முன்னேற்றமும் கிடை யாது. பலஸ்தீனத்தின் புதிய பிரதமர் மஹ் மூத் அப்பாஸை ஊக்குவித்து பாலஸ்தீனர் களிடையே அவருக்கு நற்பெயர் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்தில், இஸ்ரேல் தான் பிடித்து வைத்திருக்கும் ஆயிரக்கணக்கான பலஸ்தீன கைதிகளில் ஒரு சிலரை அண் மையில் விடுதலை செய்தது. விடுதலை யானவர்கள் எவ்விதக் 'குற்றச்' செயல் களிலும் சம்பந்தப்படாதவர்கள். ஆனால் இப்படி ஒப்புக்காக 10-20 பேரை விடுதலை செய்து பலஸ்தீனர்களை ஏமாற்ற முடியாது என்று எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. இதிலும் ஏமாற்று வித்தைதான்! இப்போது மஹ்மூத் அப்பாஸ் பலதரப்பட்ட நெருக்குவாரங்களுக் குள் சிக்கியிருக்கிறார். இஸ்ரேலுடன் மிதமான போக்கைக் கடைபிடிப்பதாக அவரது சொந்த அமைப்பான 'பத்தாஹ்'விற் குள் இருந்தே அவருக்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது.





வழமை போலவே இம்முறையும் சிறிய தோர் அமைதி, பின்னர் மோசமான இரத்தக் களரிதானோ என்று கவலைப்படுபவர்கள் மக்கள்தான்.

இங்கே படத்தில விடுதலையான கைதி களில் சிலரும், இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷெரோன், யசீர்அரபாத் மற்றும் மஹ்மூத் அப்பாஸ். □

## காயத்ரி ரகுராமின் தீராத சோகம்!

சமீப காலமாக யாரிடமும் சரிவரப் பேசாமல், மிதமிஞ்சிய சோகத்துடன் காணப்படுகிறார் காயத்ரி ரகுராம். திரையுலகில் பிரகாசமான கதாநாயகியாக வந்திருக்க வேண்டிய அவர், இன்னமும் மூன்றாம் நிலை கதாநாயகியாகவே இருப்பது ஏன் என்ற காரணத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்கிறார் 'விசில்', 'விகடன்' ஆகிய தமிழ்ப் படங்கள் தன்னைக் காப்பாற்றினால் திரையுலகில் தொடர்ந்து நீடிப்பது. இல்லையெனில், தமிழ்ப் படவுலக்கு நிரந்தரமாக டாட்டா காட்டிவிட்டு, தெலுங்குப் படங்களில் முழுவீச்சில் நடிப்பது என்ற முடிவுக்கு வந்துவிட்டாராம் அவர்! காயத்ரியின் சோகம் தீர நல்ல வழியொன்று சொல்லுங்களேன்.



அஜித்குமார் — சினேகா
படம்: ஜெரா

### அஜித் பற்றி விக்ரம்

"அஜித்தைப் பற்றி எனக்கு நல்லாத் தெரியும். அவருக்கு கார் ரேஸ்னா உயிர். கொஞ்ச நேரம் அவருகிட்ட பேசிட்டு இருந்தாலும் போதும். அதில் கார் ரேஸ் பத்தின டாபிக் வந்துவிடும். அப்படி ஒரு கிரேஸ்.

அப்படிப்பட்டவரைப் போய் நீங்கள் கார் ஓட்டக் கூடாதுன்னா கோபம் வரத்தான் செய்யும். என்னைக் கேட்டால் ஒருத்தரோட தனிப்பட்ட வாழ்க்கையில் அடுத்தவர்கள் மூக்கை நுழைக்கிறதே தப்பு. கார் ஓட்டுவது அவரது தனிப்பட்ட உரிமை" என்று கூறியிருப்பவர் விக்ரம்.

## தமிழ் ...
## 'செக்...

'துள்ளுவதோ இளமை' ...
அவதரித்துவிட்டார் என்று இ...
வெளியான 'ஜெயா' படமும் ...
சறுக்கலை ஏற்படுத்தியதால் ...
திருப்புமுனை தரும் என்று ...
கதாபாத்திரத்தில் நடித்திரு...
வைக்கவில்லை. படத்தை ...
பாராட்டிக் கடிதம் எழு...
செரீனைத் தமிழ் சி...
உயரமான சத்திய நடி...
அந்த இரண்டெழுத்...
பேசப்பட்டது. ஆ...
இடையில் போட்டி ...
கூடாது என்று ...
விடுவதாயில்லை...
வருகின்றனர். ...
'அது' தான் ...
"செரினின் ...
கிறார். தமிழ்...
வர்ணித்து...

## தப்பு...

நம் நாட்டுத் திரையா... போஸ்டர்களைச் சொல்கிறோம்!

ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து வீறு... அந்த வீரலட்சுமியாக சிம்ரன். பன்றி மேய்த்துப்... சாராயம் காய்ச்ச வைக்கிறார் உயர் சாதியைச் சேர்ந்த க... வேறு.

ஆடு திருடிய குற்றத்திற்காக அர்த்தராத்திரியில் சிம்ரனை அழைத்... பதிலாக அவரது தோழி விலாசினி போக, அவர் விலாசமில்லாமல் ஆக்கப்ப... ஆள் மாறாட்டத்தில் 'தப்பு' நடந்துவிட்டது புரிகிறது நம்பிராஜனுக்கு. எனவே தப்பி... செய்ய சிம்ரனை அவர் அணுக, விஸ்வரூபமெடுக்கிறார் வீரலட்சுமி.

நம்பிராஜன் தலையில் ஒரே போடாகப் போட்டுவிட்டு அரிவாள் சகிதம் அவர் குடிசையிலிருந்... வருவது 'லேடி சண்டியர் ரெடி' என்பதை அறிவிக்கிறது.

தொடர்பறுந்த திரைக்கதையும், யதார்த்தம் மீறிய வசனங்களுமாகப் படம் அமைந்திருந்தாலும் அந்த 'வீரலட்சுமியின்' நடிப்பு— சிம்ரன் சிம்ரன்தான்!



அருணன் — பிரியங்கா
படம்: ஜனாதாம்



சி
னி
வி
சி
ட்

# ...னிமாவின் ...மாத்திரை'

...ிரைக்கு வந்தபோது, இதோ ஜூனியர் சிம்ரன் ...னால் வரவேற்கப்பட்டவர் செரீன். அதற்குப் பிறகு ...ண்ட் நம்பர் 1' படமும் அவருக்கு இலேசான ...து போன அவர், 'விசில்' படம் தனக்கு மிகப் பெரிய ...க் கொண்டிருக்கிறார். இதில் ஏறக்குறைய வில்லி ... அவர், கிளுகிளுப்புக் காட்டுவதிலும் குறை ...த இரசிகர்கள் செரீனின் நடிப்பையும், கவர்ச்சியையும் ...விக்கிறார்கள். விஷயம் அதுவல்ல.

...ன் 'செக்ஸ் மாத்திரை' என்று வர்ணித்திருக்கிறார் ...தல்வர்! 'முதல் தர மாணவர்' படத்தில் நடித்தபோது ...ாவுக்கு செரீன் மீது ஒரு 'இது' என்று பரவலாகப் ...இந்த விஷயத்தில் அப்பாவுக்கும் மகனுக்கும் ...ாகக் கதைகள் உலா வந்தன. செரீனை நினைக்கக் ...க்கு உத்தரவிட்டார் அப்பா. ஆனால் மகன் ...க்கடி வெளியூர்களுக்கு இருவரும் சென்று ...் காதல் கீதல் எல்லாம் கிடையாது வெறுமனே.... ...விஷய மறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

...ட வியப்படைய வைக்கிறது" என ஹீரோ கூறியிருக் ...ாவின் 'செக்ஸ் மாத்திரை' என்று செரீனை அவர்

# கிரண் தங்கியிருக்கும் ஹோட்டல் பக்கம் சென்றுவரும் 'ஆட்டக்காரர்'

கிரண் எவ்வளவுதான் தொல்லை தந்தாலும், சம்பளத்தை குண்டக்க மண்டக்க கேட்டாலும் அவருக்கு மட்டும் சான்ஸ்களுக்கு குறைவே இல்லையாம்.

இளைய தலைமுறை ஹீரோக்கள் மட்டுமல்லாமல், டைரக்டர்களையும் அவர் வசியம் செய்துவிடுவதால் தயாரிப்பாளர்கள் வேறு வழியில்லாமல் இவர் தங்கியிருக்கும் ஹோட்டல் வாசலில் போய்க் காத்திருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

"முடிந்த வரை கவர்ச்சி காட்டுகிறார். நன்றாகவும் ஒத்துழைக்கிறார். நன்றாகவும் டான்ஸ் ஆடுகிறார். இதற்கு மேல் என்ன வேண்டும்" என்கிறார் ஒரு டைரக்டர் (நடிப்பைப் பற்றி அவர் பேசவே இல்லை)

ஹீரோயினாக இல்லாவிட்டாலும் படத்தில் ஒரு கிரண் டான்ஸை யாவது வைத்துவிட டைரக்டர்கள் ஆளாய் பறப்பதால் இவருக்கு இப்போது சுக்ரதிசை. ஒரே பாட்டு, 2 நாள் சூட்டிங், ரூ. 8 லட்சம் என கனையாக லவட்டிவிடுகிறார். மேலும் ஒரு நாள் சூட்டிங்கை நீடித்தாலும் தனியே ரூ. 2 லட்சம் கேட்டு வாங்கிவிடுகிறார்.

வாங்கிய காசுக்கு முடிந்த வரை கவர்ச்சியைக் காட்டிய கையோடு, ஹீரோ மற்றும் டைரக்டரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்திவிட்டுத்தான் திரும்புகிறார் கிரண். இது தவிர கிரண் பற்றி இன்னொரு செய்தி. சிம்ரனின் தங்கை மோனலுடன் கிசுகிசுக்கப்பட்ட, அவரது தற்கொலைக்கே காரணமாக இருந்ததாகப் பேசப்பட்ட டான்ஸ் மாஸ்டர் சகோதரிகளின் தம்பி இப்போதெல்லாம் கிரணின் ஹோட்டல் ரூம் பக்கம் அதிகமாகக் காணப்படுகிறாராம்.

என்னவோ... ஏதோ... தெரியவில்லை. இருவருக்கும் நட்பு பூத்து, முற்றி வருகிறதாம்.


சிந்துஜா — சோனா

# ...செய்ய அழைத்தவரின் 'தலை போனது'


... முன்பாக சிம்ரன் அரிவாளோடு நிற்கிறார். 'கோவில்பட்டி வீரலட்சுமி'

...ண்டு எழும் ஒருத்தி ஆயுதமேந்திய கதை இது. ...க்கும் அவரது அப்பா அலெக்ஸுக்குப் பணம் தந்து ...அதிகாரி நம்பிராஜன். அதற்கான உள் நோக்கம்

... சொல்கிறார் அவர். சிம்ரனுக்குப்

... இன்னொரு தப்புச்

...ியே


ஜோதிகா — மாதவன்
படம்: பிரியமான தோழி

# ○ மினி சினி ○

● சினிமாவில் நடித்துக்கொண்டே தபால் மூலம் படித்து எம்.ஏ. பட்டம் பெற்றுள்ள பாண்டியராஜன், அடுத்து சினிமாவைப் பற்றி ஆராய்ச்சி செய்யப்போகிறாராம்! இதற்காக நேரம் கிடைக்கும்போது எல்லாப் பழைய புதிய படங்களைப் பார்த்து வரும் அவர், ஒரு படத்தின் வெற்றிக்கு என்னென்ன காரணம், தோல்விக்கு என்னென்ன காரணம் என்பதைப் பட்டியலிட்டுக் கொண்டிருக்கிறார். அப்படியே தன்னுடைய தோல்விக்கான காரணத்தையும் கண்டுபிடித்து தெளிவு பெற்றால் சரி!

● 'ஸ்ரீ' சூர்யா மூவீஸ் சார்பில் ஏ.எம்.ரத்னம் தயாரிக்கும் படத்தில் சிலம்பரசன் அதிரடி கதாநாயகனாக நடிக்க, ஹரி இயக்குகிறார். கதை, திரைக்கதை, வசனம் ஆகிய பொறுப்புகளையும் அவரே ஏற்றுள்ளார். ஹாரிஸ் ஜெயராஜ் இசை அமைக்கும் இந்தப் படத்துக்குக் 'கோவில்' என்று பெயர் சூட்டப்படும் என்று ஹரி தெரிவித்தார். இந்தப் பெயரின் இடையே கேப் விடுவதற்கு ஒரு முக்கிய காரணம் இருக்கிறது என்றும் அவர் சொன்னார். அது என்னவாக இருக்கும்?

● சரத்குமார் நடித்த 'தென்காசிப்பட்டணம்', 'பாறை' ஆகிய படங்களைத் தயாரித்துள்ள மாஸ் மூவி மேக்கர்ஸ் எஸ்.எஸ். துரைராஜ், மீண்டும் சரத் நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கிறார். இந்தப் படத்தைச் சேரன் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கப் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. உள்ளத்தில் நிலைத்து நிற்கும்படியான கிராமத்துக் கதை கொண்ட இந்தப் படத்தில் அதிரடி ஆக்ஷன் காட்சிகளுக்கும் முக்கியத்துவம் இருக்குமாம்.

● விக்டரி கம்பைன்ஸ் நிறுவனம் அதிக பொருட் செலவில் தயாரிக்கும் படம் 'துரோணா'. இதில் கதாநாயகனாக புதுமுகம் அருண்பாலா, கதாநாயகியாக புதுமுகம் உயிர் எழுத்து ப்ரணதி நடிக்கின்றனர். மற்றும் மலையாள நடிகர் சித்திக், நாசர், கருணாஸ் உள்பட பலர் நடிக்கின்றனர். தவறான வழியில் யாரை யார் கூட்டிச் சென்றாலும், அவர்கள் அனைவரும் இறுதியில் அழிந்தே தீருவார்கள் என்ற கருத்தே இந்தப் படத்தின் கதையாக அமைந்துள்ளது.

# வருமான வரி சோதனை பெருமைக்குரிய விடயம் —அஜித்

அஜித்குமாரின் வீட்டில் வருமான வரி அதிகாரிகள் சோதனை நடத்தியுள்ளனர். அதனைப் பெருமைக்குரிய விடயம் என்று வர்ணித்தார் அஜித்.

"சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்காக இரண்டு அதிகாரிகள் என் வீட்டுக்கு வந்தனர். தகவல் கிடைத்ததும் படப்பிடிப்பில் இருந்து வீட்டுக்குச் சென்று அவர்களின் கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் சுமார் ஒரு மணி நேரம் பதில் அளித்தேன். பிறகு மீண்டும் படப்பிடிப்பில் கலந்துகொண்டேன். சோதனை எதுவும் நடக்கவில்லை. வருமான ...வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்துவதற்காகவோ, விசாரணை நடத்துவதற்காவோ நான் ...கப்பட வேண்டியதில்லை. ஏனென்றால் இது நான் உழைத்துச் சம்பாதித்த பணம். யாரிடமும் கொள்ளை ...து அல்ல. முன்னணி நடிகனாக இருந்து சம்பாதிப்பதால்தான் என்னிடம் விசாரிக்கிறார்கள். இது நான் ...ப்பட வேண்டிய விஷயம்தான்." என்று கூறியுள்ளார்.




## காதல் தோ(ழி)ல்வி

அழகியவளே!
அன்று தான் உன்னை
முதன் முதலாய் பார்த்தேன்.
அப்போதிருந்தே - என்
அடிவயிற்றில் - ஓர்
ஆப்கானிஸ்தானிய யுத்தம்!

ஒரு பெண்ணின்
பார்வையில்
இத்தனை வெப்பமா?
மார்கழி பனியில்
என்னுடல் வியர்த்தபோது
என்மனம் வியந்தது.



காதலே!
என்னை நீ
மறுத்த போது
கண்ணீர் விட்டது
நான் மட்டுமல்ல
வானமும் தான்!

தோழியே!
எனக்கு தோல்விகள் புதிதல்ல
எப்போதிருந்தோ
என் தோள்கள்
வெற்றி மாலைகளை விட
தோல்வி மலர் வளையங்களைத்தான்
அதிகம் சுமந்திருக்கிறது.

அன்பே!
இறுதியாய் ஒரு விண்ணப்பம்
நான் சார்ஸ்
வந்து இறந்தாலும்
அது பரவ வேண்டும்
உன் மூச்சுக்காற்றால்
எனக்கு.....!!


திவ்யப்ரியன், மஸ்கெலியா.

## இழந்த பின்னே.....

ஆசைகள்
உரம் பெற்று
கற்பனையில்
மெருகேறிய போது
தவறுகளுக்கு
தலை கால் புரியவில்லை.

அகம் அலைபாய
ஆசைகள் தீர்ந்து
கனவுகள் கலைந்த போது
பொய்மை மீதமானது.
அண்மையெல்லாம்
அருவருப்பானது.

மடை திறந்த வெள்ளமாய்
கரைபுரண்ட கண்ணீரில்
காயங்களெல்லாம்
வடுக்களானது.



சாவு தேடவும்
சந்தர்ப்பம் கொடாத
சலித்த வாழ்வு
விடியாப் பொழுதுடன்
தொடர்கிறது
விடியலுக்கான
போராட்டத்தை

இருந்ததை இழந்து
இல்லாமலான வாழ்வு
எதைத் தேடி இன்புறும்
எதிர்பார்ப்புக்கள்
ஏமாற்றங்களாய் தொடர
இருப்புக் கொண்டதெல்லாம்
ஏகாந்தம் மாத்திரமே.

எம்.ஐ.எம்.அஷ்ரப்,
சாய்ந்தமருது –07

## விதி

மதி தாமதித்து விட்டது
விதி முந்தி விட்டது
நான் தாமதித்து விட்டேன்
அவள் முந்தி விட்டாள்
யாரையோ நோக்கி
அதுதான் விதி

எம்.ஜீவா, உரும்பிராய்.


## சமாதானத்துக்கு எதிரியில்லை

மானுட தத்துவத்தில்
மனிதன் மனிதனுக்கெதிரியாதல்
காணுதலானாலும் கன
நாட்களே நீண்டிடாது
எதிர்த்திட எண்ணுவானா?
எதிரிகள் எனநினைத்து
எவரெவர் எதிர்க்கின்றாரோ
அவரிவர் கூட்டையேற்கா
அவசரம் காட்டுவதால்
எதிரிதானிங்கு எவர்
என்னுடன் துணிதல் நன்று!

எதிர்ப்பவர் சமாதானத்தை
எதிர்ப்பவர் எனமுடியா
புதிர் அதனுள் சேர்க்கும்
புரிந்துணர் காரியங்கள்
இனுமுண்டு என்பதாலே
எதிர்க்கிறார் அதையும் சேர்த்து
எதிர்ப்புகள் ஏதுமில்லா
ஏற்றிடும் பண்பு சேரின்
எதிரிகள் உலகிலில்லை
என்பதே திடமானது!

புனிதமாய் நோக்கிவிடின்
புறக் கணிப்புகள் ஒதுங்கிவிடும்
அநுபவமுடையோ ரெல்லாம்
அவசியம் அவருணர்வை
இனிதுடன் ஏற்றுநின்று
எதிர்வரும் சந்ததியை
நல்லவராக்கி நின்று
நாட்டினில் உயர்த்த வேண்டும்!
தனித்துவக் குறிக்கோளிது
தவறுதல் சுயநலமே!
கணித்திதைக் கருத்தில்கொண்டு
காட்டுதல் புனிதந்தானே!

ஏ.இக்பால், தர்கா நகர்.



## மனசெல்லாம் பார்த்தேன்

உன்னைக் கண்ட போது
கண்ணெதிரே தோன்றினாய்
பார்த்தேன்

நீ என்னைப் பார்த்த போது
பார்வை ஒன்றே போதுமே
பார்த்தேன்

உன் நட்புக் கிடைத்த போது
பாண்டவர் பூமி
பார்த்தேன்

உன்னைப் பிரிந்த போது
பிரியாத வரம் வேண்டும்
பார்த்தேன்

நான் உன்னைக் காதலித்து
என் காதலைச் சொல்ல
நினைத்த போது
காதல் சுகமானது
பார்த்தேன்

நீ என்னை வெறுத்த போது
மனசெல்லாம்
பார்த்தேன் - அதே போன்று
நீ எப்போதும் என்
மனசெல்லாம்.

எஸ்.ரூபன், மன்னார்.

## துவாரகையான தென்னிலங்கை

சில நேரம் சிரித்து
சில நேரம் கோபம் கொண்டு
விஸ்வரூபமெடுக்கிறது
இயற்கை வாழ்விலே

எது எப்போதென்று கூற
தீர்க்கதரிசி இல்லையே.....?

பூமித் தாய்க்கு
தாகம் ஏற்பட்டால்
நிலமேனியில் வியர்த்தால்
மண்ணில் பயிர் வாடினால்
பூஜைகளும் யாகங்களும் செய்தாவது
பாவபூமிக்கு மழையை கேட்போம்.

மாணிக்கபுரி தொடங்கி - வறண்ட
அம்பாந்தோட்டை வரையும்
இடையே காலியும் களுத்துறையும்
மாத்தறையும் மடிந்தது
மலையகமும் மண்சரிந்துவிட்டது
மழை வெள்ளப் பெருக்கால்

வீடுகளும் தாழ்ந்தன
நகரங்கள் துவாரகையாகின
ஜீவன்கள் அழிந்தொழிய.....
காவிரியின் ஓரம் போல
தென் இலங்கையானது

மாணிக்க வணிகனின் சதியாலும்
மணல் வியாபாரியினாலும்
கங்கை படையெடுத்து தாக்க
உயிர்கள் மடிந்தன

கல்விக் கூடம் மூடுபட
காரியாலயம் செயலிழக்க
அன்றாடக் கருமம் நின்றுவிட
அனாதைகள் உருவாக
சடலங்கள் மிதந்தன

பிஞ்சுகள் மடிந்துவிட
முதுமைகள் முகவரி தொலைய
வஞ்சிகள் தடுமாற
காளைகளும் கோழையாக
குடும்பங்கள் குலைய
கஞ்சிகூட இல்லாமல்
வெள்ளமது கொள்ளையிட்டது....

உயிர்கள் மடிந்துவிழ
ஒப்பாரிகள் மழையோசையில்
மறைந்து விட்டன.

நிவாரணம் வந்தாலும்
நிர்க்கதியான சனங்கள்
நிம்மதியிழந்தன......

ம்.........
மடிந்தவைகள் சாந்தியடையட்டும்
மற்றவைகள் நிமிரட்டும்

சாதி மத பேதமின்றி
சனங்களுக்கு
கை கொடுப்போம்......

எஸ்.பி.பாலமுருகன், பதுளை.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

(பயிற்சிக் களம்)

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

### கவிஞர் நீலாவணன்



கவிஞர் நீலாவணன் ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் முக்கியமானவர். ஈழத்து நவீன தமிழ்க் கவிதை பற்றிக் குறிப்பிடும்போது மகாகவி, முருகையன், நீலாவணன் பற்றி யாரும் குறிப்பிடாமல் இருக்க முடியாது!

நீலாவணனின் கவிதைகளைப் படிப்போர் அவரிடம் மரபு வழிச் சிந்தனையும் புதுமை நாட்டமும் ஒருமித்து இருப்பதை அவதானிக்கலாம். சமூக மாற்றத்தை வேண்டி நிற்கும் புத்துலக நோக்கு பெருமளவில் வெளிப்படுகிறது.

கவிதை பழைமையில் காலூன்றி நிற்க வேண்டும் என்பதே நீலாவணனின் கருத்தாக இருந்தது. பழைமையின் வழியிலேயே புதுமை முகிழ்க்க வேண்டும் என்று அவர் நினைத்தார். கவிதை பற்றிய நீலாவணனின் கவிதை ஒன்று பின்வருமாறு உள்ளது.

பழமை கிடந்த மனதுள் விழுந்து பயிராகி
செழுமை நிறைந்து புதுமை புழைந்து விளைவாகி
அழகும் பொலிந்து அறமும் புதைந்து கலையாகி
இளமைக் கயிற்றில் கனவைத் தொடுத்தல் கவியாகும்.

என கவிதையின் ஊற்றை அடையாளம் காட்டுகிறார். நமது இளம் கவிஞர்கள் கட்டாயம் படிக்க வேண்டிய நமது முக்கிய கவிஞர் நீலாவணன். 44 வயதில் காலமானார்- அவரது இரண்டு கவிதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. வழி, ஒத்திகை என்பனவே அக் கவிதைத் தொகுதிகளாகும்.

### ஓ.... என் வண்டிக்காரா!


ஓ என் அருமை வண்டிக்காரா,
ஓட்டு வண்டியை ஓட்டு!
போவோம் புதிய நகரம் நோக்கிப்
பொழுது போமுன் ஓட்டு!

காவில், பூவில், கழனிகளெங்கும்
காதல் தோயும் பாட்டு!
நாமும் நமது பயணந் தொலையக்
கலந்து கொள்வோம் கூட்டு! - ஓட்டு

ஓ...! என் அருமை வண்டிக்காரா...

பனியின் விழிநீர் துயரத் திரையில்
பாதை மறையும் முன்னே
பிணியில் தேயும் பிறையின் நிழல் நம்
பின்னால் தொடரும் முன்னே... - ஓட்டு

ஓ...! என் அருமை வண்டிக்காரா...
ஓட்டு வண்டியை ஓட்டு!
போவோம் புதிய நகரம் நோக்கிப்
பொழுது போமுன் ஓட்டு!



## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி –



பெயர்: என். சசி
வயது: 21
முகவரி:
P.O.BOX- 31691
DOHA - QATAR.
பொழுது போக்கு:
நண்பர் தொடர்பு,
பத்திரிகை வாசித்தல்.



பெயர்:
செய்னுல்லாப்தீன்
பஸ்மினா
வயது: 24
முகவரி:
மா தோட்டம், கற்பிட்டி.
பொழுது போக்கு:
ரி.வி., தினமுரசு,
பேனா நண்பர் தொடர்பு



பெயர்: ரி. கௌரி
வயது: 20
முகவரி: 13, ERIC
MENTELSON, STREET 3075,
LIMASSOL, CYPRUS,
பொழுது போக்கு:
ரி.வி. பார்த்தல்,
சமைத்தல்.



பெயர்: எம். மயூரதன்
வயது: 23
முகவரி:
K.B.C. ENGINEERING, CO.,
P.O.BOX - 40896,
DOHA - QATAR. (A.G.F.)
பொழுது போக்கு:
ரி.வி. பத்திரிகை வாசித்தல்.

# முதலில் குழந்தை உணரும் மொழி

## தாயின் சிரிப்பே!

தங்கள் குழந்தைகள் ஆரோக்கியமாக வளர வேண்டும் என்றுதான் எல்லா அம்மாக்களும் ஆசைப்படுகிறார்கள். விளம்பரங்களில் வரும் கொழு கொழு குழந்தைகளைப் போல புஷ்டியாக வளர்ப்பதற்கு ஆர்வம் காட்டுகிறார்கள்.

சத்துள்ள உணவு, சுத்தம், சுகாதாரம், அன்பு, அரவணைப்பு, அள



வான கண்டிப்பு, முறையான நோய்த் தடுப்பு இத்தனையும் நல்ல விதமாக அமையும்போதுதான் குழந்தைகள் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் ஆரோக்கியமாக வளர்கிறார்கள்.

அதே சமயம் என்னதான் மருத்துவ அறிவியல் வேகமாக முன்னேறினாலும் குழந்தைகளின் ஆரோக்கியத்தைக் கெடுக்கும் நோய்களின் படையெடுப்பு இன்னமும் தீவிரமாகவே உள்ளது.

ஆகவே, அவற்றின் தாக்குதல்களைச் சமாளிக்க குழந்தை வளர்ப்பு முறைகளில் புதிய அணுகுமுறைகளைக் கையாள வேண்டும் என்று மருத்துவ அறிவியலாளர்கள் அறிவுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் குழந்தை வளர்ப்பு, குழந்தை ஆரோக்கியம், நோய்த்தடுப்பு மருத்துவம், பிறவிக் குறைபாடுகளைத் தவிர்க்கும் முறைகள் ஆகியவை பற்றி பெண்கள் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

பிறந்த குழந்தையைக் கையில் எடுத்து வைத்துக் கொஞ்சுவதும், நெஞ்சோடு நெஞ்சாக அணைத்துக் கொள்வதும் ஓர் இளம் தாய்க்கு ஆனந்தம் தரும் அநுபவம்.

அதற்காக சில அம்மாக்கள் எந்த நேரமும் குழந்தையை மடியில் வைத்துக்கொள்வார்கள். இது அவசியமில்லை. பால் தருவதற்கு, உடை மாற்றுவதற்கு, குளிப்பாட்டுவதற்கு இப்படிச் சில முக்கியமான தேவைகளுக்கு மட்டும் குழந்தையைத் தூக்கினால் போதும்!

சிலர் குழந்தை இலேசாக அழுத உடனேயே அந்தத் தூக்கி வைத்துக் கொள்வார்கள். இதுவும் தேவையில்லை. குழந்தை அழ, அழ அதன் சுவாசப்பைகள் விரிவடைகின்றன. நிறைய காற்று சுவாசப்பைகளுக்குள் செல்கிறது. அதிகமான பிராணவாயு குழந்தைக்குக் கிடைக்கிறது. இதனால் இரத்த ஓட்டம் சுறுசுறுப்பாக நடக்கிறது. குழந்தைக்கு இது நன்மைதானே! ஆகவே குழந்தை சிறிது நேரம் அழுதால் தவறில்லை. உடனே அதைத் தூக்கி வைத்துக்கொள்ள வேண்டாம்.

அதே சமயம் பிறந்த குழந்தைகளைத் தூக்குவதற்கே பயப்படும் அம்மாக்களும் நிறைய பேர் இருக்கிறார்கள்.

குழந்தையைத் தூக்கும்போது தவறு ஏற்பட்டுவிடுமோ... கீழே போட்டுவிடுவோமோ என்ற பயம் அவர்களுக்கு தலைகாட்டுகிறது. குழந்தையின் மிருதுத்தன்மை அவர்களை அறியாமலேயே ஒரு பத்திர உணர்வை ஏற்படுத்திவிடுகிறது.

பிஞ்சுக் குழந்தையைக் கையாள்வதில் அதிக கவனம் தேவைதான். அதற்காகப் பயம் தேவையில்லை. தைரியமாகக் குழந்தையைத் தூக்கலாம்.

தாயின் ஒரு கையில் குழந்தையின் முதுகையும், தலையையும் சேர்த்துப் பிடித்துக்கொண்டு கையில் இடுப்பையும் கால்களையும் சேர்த்துப் பிடித்தவாறு குழந்தையைத் தூக்க வேண்டும். ஒரு கையால் மட்டும் குழந்தையைத் தூக்குவது ஆபத்து.

குழந்தையைத் தூக்கும்போது குழந்தையின் தலை, நீங்கள் எதிர்பாராமல் பின்பக்கமாகச் சாய்ந்துவிட்டாலும் பரவாயில்லை. அதனால் ஒன்றும் கெடுதல் ஏற்படாது. அதற்காக அடிக்கடி அப்படி ஆகக் கூடாது.

பிறந்த குழந்தைகள் மென்மையான, வெதுவெதுப்பான அரவணைப்பை விரும்புகின்றன. தாய்மைப் பரிவுடன் கூடிய நெருக்கமான அணைப்பை எதிர்பார்க்கின்றன.

கன்னத்தில் முத்தமிடுவது, முகத்தோடு முகம் வைத்துக்கொள்வது போன்றவற்றைக் குழந்தைகள் பெரிதும் விரும்பும். அதற்காக அம்மாக்கள் குழந்தையின் உதட்டில் மட்டும் முத்தமிட வேண்டாம். அப்படிச் செய்தால் குழந்தைக்கு நோய்கள் பரவ வழி உண்டாகும்.

தன்னை கைகளில் வைத்துக் கொண்டு மெதுவாக ஊஞ்சலாடுவதைப் போல ஆட்டுவதை நன்கு இரசிக்கிறது குழந்தை! அதே போல முதல் மூன்று மாதங்களுக்கு அம்மாவின் கொஞ்சுதலில் அது சுகம் காண்கிறது.

அம்மா பேசுவது குழந்தைக்குப் புரியாவிட்டாலும் பரவாயில்லை. தாராளமாக அதனுடன் பேச வேண்டும். சிரிக்க வேண்டும். குழந்தைக்குச் சிரிப்பு ஊட்ட வேண்டும். இந்தச் சீராட்டலைப் போகப் போக குழந்தை புரிந்துகொள்ளும். ●

## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* –ஷோபா–

### அன்னாசிப்பழ ஜாம்

**தேவையான பொருட்கள் :-**

அன்னாசிப்பழத் துண்டுகள் - 500 கிராம்
சீனி - 375 கிராம்
எலுமிச்சம்பழச்சாறு - 2 தே.க.
(அல்லது சிற்றிக் அமிலம் - 1 தே.க.)

**செய்முறை:**

அன்னாசிப்பழத் துண்டுகளை மிச்சியிலிட்டு அரைத்துக்கொள்ளவும். அல்லது உராய்கருவியில் உரோஞ்சிக்கொள்ளவும்.

அரைத்த அன்னாசிப்பழக் கலவையுடன் சீனியைச் சேர்த்துக் கரைத்துக் காய்ச்சவும். (அடி பிடிக்க விடாது தொடர்ந்து துளாவவும்)

கலவை இறுகும் பருவத்தில் இறக்கி வேறொரு பாத்திரத்தில் மாற்றிக்கொள்ளவும்.

கலவை சிறிது ஆறியதும் எலுமிச்சம்பழச்சாறு, அல்லது சிற்றிக் அமிலத்தைச் சேர்த்துக் கலந்து கொள்ளவும்.

பின் ஓரளவு சூட்டுடன் போத்தலில் இட்டுப் பாவிக்கவும்.

**குறிப்பு:-**

**ஜாமின் பதத்தை அறிந்துகொள்ளும் முறை :- கலவை இறுகும் பருவத்தில் ஒரு துளியை தண்ணீர் உள்ள சோசரில் விடும்போது துளி கரையாமல் இருத்தல் வேண்டும்.**

**இம் முறையைப் பின்பற்றித் தக்காளிப்பழம், மாம்பழம், விளாம்பழம், நெல்லிக்காய் போன்ற பழங்களில் ஜாம் தயாரித்துக்கொள்ளலாம்.**

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ்

## சமையல் அறை சமாச்சாரங்கள்

● பஜ்ஜி பக்கோடா போன்றவைகளை எண்ணெயில் போடும்போது அதன் மேல் பகுதி எண்ணெய் மேலே இருக்கும்படி தயாரித்தால் அதிக சுவை கிடைக்கும்.

● சீனிப் பாகு தயாரிக்கும்போது அதில் ஒரு சில சொட்டு எலுமிச்சம் பழச்சாறு சேர்த்தால் பாகில் இருக்கும் அழுக்கு தனியாக ஓரிடத்தில் ஒதுங்கிவிடும்.

● லட்டு தயாரிக்கும்போது அதில் ஏதாவது ஒரு வகை பழ எசன்ஸ் சேருங்கள். சுவையும் மணமும் கூடும்.

● தக்காளி மலிவாகக் கிடைக்கும் போது அதனை அதிகமாக வாங்கி, இரண்டாகப் பிளந்து வெள்ளைத் துணியில் வைத்து காயவைக்கவும். அதில் இருக்கும் தண்ணீர்த் தன்மை போனதும், போத்தலில் எடுத்து பாதுகாப்பாய் வைத்திருங்கள். பின்பு அதனை தேவைப்படும்போது சமையலுக்குச் சேருங்கள். தக்காளியின் சுவை முழுமையாகக் கிடைக்கும்.

● கடுகைத் தண்ணீரில் ஊற வைத்து அரைத்து பூச்சி கடித்த இடத்தில் தேய்த்தால் குணமாகும்.

● நன்றாகச் சூடான எண்ணெயில் கட்லெட் போட்டு பொரித்தால் கட்லட் பொடிந்து போகாது.

● வெந்நீரில் அப்பிளைப் போட்டு எடுத்தால், தோலை எளிதாக நீக்கிவிடலாம்.

● எரியும் பல்பின் அருகில் ஒரு துண்டு பெரியவெங்காயத்தைக் கட்டித் தொங்கவிட்டால் நுளம்புத் தொல்லை ஏற்படாது.

● துவரைப் பருப்பை வேகவைக்கும்போது அதில் சிறிதாக சில துண்டு தேங்காய்களையும் நறுக்கிப் போடுங்கள். பருப்பு விரைவாக வெந்துவிடும்.

● மாவை சலிக்க பயன்படுத்தும் சல்லடை அரிப்புகளை, உபயோகம் முடிந்ததும் ஒரு பொலிதீன் கவரில் போட்டு வைத்திருங்கள், அழுக்காகாமல் தவிர்க்கலாம்.

● சாலட்டில் சிறிதளவு எள்ளை வறுத்துச் சேர்த்தால், சுவை அதிகரிக்கும்.

● மீனைச் சுத்தப்படுத்தி, வெட்டி அதில் சிறிதளவு வினிகர் தேய்த்து வைத்தால் வேகும்போது மீன் பொடிந்து போகாது.

● மீன் பொரிக்க சேர்க்கும் மசாலாவில் சிறிதளவு புளி பிழிந்து சாறு விடுங்கள். சுவை அதிகரிக்கும்.



● மீனில் சிறிதளவு உப்பு, மஞ்சள் தூள் கலந்து பிரிஜ்ஜில் வைத்தால், அதிக நாட்கள் கெட்டுப் போகாமல் இருக்கும்.

● கருவாட்டில் அதிக அளவு உப்பு இருந்தால், அதனை 1/2 மணி நேரம் கஞ்சித் தண்ணீரில் போட்டு வையுங்கள் உப்புத்தன்மை பெருமளவு அகன்றுவிடும்.

● மீனில் காரம் நன்றாகச் சேர வேண்டுமானால் மீன் மசாலாவில் சிறிதளவு எலுமிச்சம் பழச்சாறு சேர்த்திடுங்கள்.

● எலுமிச்சம் பழச்சாறு கலந்த நீரில் மீனை ஒரு மணி நேரம் போட்டு வைத்துவிட்டு பொரித்தால், வாடை வீசாது, சுவை கூடும்.

## பழம் சாப்பிட ரெடியா?

பழம் சாப்பிடுவது நல்லதா? பழச்சாறு குடிப்பது நல்லதா?

பழச்சாறை விட பழங்கள் சாப்பிடுவதே சிறந்தது. பழச்சாற்றில் நார்ச் சத்து இருக்காது. பழமாக சாப்பிடும்போது அந்தச் சத்துக் கிடைக்கும்.



பழத்தை பழச்சாறு ஆக்கும்போது, நார்ச் சத்து நட்டமாகிவிடுகிறது. உடல் எடையைக் குறைக்க விரும்புபவர்கள் பழச்சாறை விட பழத்தையே சாப்பிட வேண்டும். ஏன் என்றால் பைபரில் கலோரி குறைவாக இருக்கும். பழம் சாப்பிட்டால், பசியும் தீரும்.

தோடம்பழத்தை அப்படியே சாப்பிடாமல், ஜூஸ் ஆக்கிக் குடித்தால் பழத்தில் இருக்கும் கலோரி மூன்றரை மடங்காக உயர்ந்துவிடுகிறது.

நோயாளிகள் பழச்சாறு குடித்தால் மலச்சிக்கல் உருவாகும். பழமாக சாப்பிட்டால் மலச்சிக்கல் தோன்றாது.


ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லா விதமான ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

RATHAA TEXTILE

377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 364792

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



01

பெயர்:.............................
முகவரி:.............................
.............................
தொழில்: .............................
கையொப்பம்: ...............

உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந் தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 26- 07-2003

அனுப்ப வேண்டிய முகவரி-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.

## அங்கம் 05

எனக்கு இந்த நாட்களில் குழப்பமாக இருந்தது. சுஷ்மாவெல்லாம் கல்யாணத்தைப் பற்றித் தெளிவாக இருந்தாள். "இந்த ஏப்ரலில் குட்டுவைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன்" அவ்வளவே!

என் கிளாஸில் எல்லாருக்கும் இந்த சம்மரில் கல்யாணம் அடுத்து அடுத்து வந்தது.

பாரத தேசத்தில் பெண்களுக்குக் கல்யாணத்தில் அதிகம் விருப்பு, வெறுப்பு, செலக்ஷன், ரிஜெக்ஷன் இவற்றுக்கு இடம் இல்லை என்பதை உணர்ந்தேன். அப்பா மற்றொரு பையன் என்னைப் பார்க்க வர ஏற்பாடு செய்து, பல திசைகளில் போன் போட்டுக்கொண்டிருந்தார். என்றைக்காவது யாரையாவது கல்யாணம் செய்துகொள்ளத்தான் வேண்டும் என்கிற அடிப்படையை அசைக்க முடியாது. அப்பா, அம்மா, ஜெயந்தியைப் பிரிய வேண்டும் என்று தோன்றும்போதெல்லாம் தலையணையில் கண்ணீர் வடியும் எனக்கு.

அர்ஜுன் மறுபடி என்னைப் பார்க்க வந்தபோது, எனக்கு ஒரு அருமையான புத்தகமும் அம்மாவுக்கு டெரிசில்க்கில் புடைவையும் அப்பாவுக்கு ரீடிங் கிளாஸும் வாங்கி வந்து, எங்கள் குடும்பத்தையே ஒரே வீச்சில் வீழ்த்திவிட்டார். அந்தப் புத்தகம்தான் என்னை வீழ்த்தியது!

"எப்படித் தெரியும் எனக்கு ப்ராட்பரி பிடிக்கும் என்று?"

"அன்று வந்தபோது உன் அலுமாரியில் பார்த்தேன்."

ப்ராட்பரியின் அத்தனை சிறுகதைகளும் இரண்டு பாகங்களில் அழகான தோல் நிற அட்டை போட்டு, தங்க எழுத்துக்கள் எழுதிய லைப்ரரி எடிஷன். இருக்கும் ஒரு அறுநூறு ரூபாயாவது.

"உங்களுக்கு எப்படித் தாங்ஸ்



சொல்வது! ரொம்ப விலையிருக்குமே!" என்றேன்.

"தாங்க்ஸாவது? நான் உங்கள் குடும்பத்தில் நுழையப் போகிறேனே."

"அம்மா, உங்களுக்கு மஸ்டர்ட் கலர் பிடிக்கும் என்று என் அம்மாவிடம் சொன்னீர்கள்."


"அப்படியா! எப்போது" என்று பூரித்துப் போன அம்மாவுக்கு எல்லா கலரும் பிடிக்கும்.

"இப்ப எல்லாம் அதான் ஃபேஷன். பட்டு போலவே இருக்கு பாருங்கோ."

அப்பா ரீடிங் கிளாஸைப் போட்டுப் பார்த்து, "இவ்வளவு பளிச்சென்றுகூட கண் தெரியுமா?" என்று வியந்தார். பின் சம்மதம் சொல்லவில்லையென்றால், குற்ற உணர்ச்சியில் ஃபேமிலியே தூக்குப் போட்டுக்கொள்ளும் ஸ்திதி வந்துவிடும்போல இருந்தது.

மறுநாள் அப்பா ஃபோனில் சொல்லிவிட்டார். "அர்ஜுன்! வெல்கம் டு அவர் ஃபெமிலி."

அதன் பின் சம்பவங்கள் விரைந்தன. அம்மாவுடன் கரோல் பாக் போய் காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள் எடுத்தோம். அர்ஜுன் எனக்காக வெல்வெட் பெட்டியில் வைர மோதிரம் வாங்கிக் கொடுத்




தார். நான் சுடிதார் அணிவதை நிறுத்திவிட்டு, தினப்படி ஸாரி கட்டிக்கொண்டேன். ஜெயந்திக்குப் பட்டுப் பாவாடை. வெள்ளிப் பாத்திரங்களை கஃபார் மார்க்கெட்டில் பாலீஷ் பண்ணக் கொடுத்து, என் நகைகள் லாக்கரிலிருந்து எடுத்து, அழைப்பிதழுக்கு ப்ரூஃப் பார்த்து, நய்வாலா கல்வியில் இருந்த ஒரே தமிழ் பிரஸ்ஸில் அச்சடித்து, அப்பா தன் சகோதர சகோதரிகளுக்கெல்லாம் மஞ்சள் தடவி கார்டு எழுதிப் போட்டு, என்னை அர்ஜுன் இரண்டு

## எழுதுவது - சுஜாதா

மூன்று தடவை சினிமாவுக்கு அனுமதி கேட்டு அழைத்துச் சென்றார். பட்டும் படாமலும் உட்கார்ந்தாலும் தகாத இடங்களில் தொட முயற்சிக்கவும் இல்லை. நான் அனுமதிக்கவும் இல்லை. சினிமாவைக் கிண்டல் பண்ணிக்கொண்ட, அவருடன் பாப்கார்ன் சாப்பிட்டது தமாஷாக இருந்தது. நிருலாவில் ஐஸ் க்ரீம், ஸோனா ரூபாவில் மசால் தோசை சாப்பிட்டதும் தமாஷ்காத்தான் இருந்தது. அவருடன் பேசப் பேச எனக்கு அர்ஜுனைப் பற்றிய அபிப்ரயம் கொஞ்சம் கொஞ்சமாகத் திருந்தி, அவரிடத்தில் பற்று வந்தது. இவரிடம் நிறைய விஷய ஞானம் இருப்பதைக் கவனித்தேன். கொரிய பொருளாதரம். டங்கல் ட்ராப்ட், ஜெனட்டிக் இன்ஜினியரிங் என்று பெரிய விஷயங்களையெல்லாம் எனக்கு எளிதாக விளக்க முயற்சி செய்தார். நான் அவரையே பார்த்துக்கொண்டிருந்தேனே தவிர, அவரைக் கவனிக்கவில்லை. கிட்டத்தில் பார்த்தபோது ஆரோக்கியமான குழந்தைத் தைலம் தடவினாற் போல முகம். வாரம் ஒருமுறை ஷேவ் செய்தாற் போதும் போல இருந்தது. உள்ளுக்குள் எப்படி இருப்பார் என்று யோசிக்க வைத்தது. சட்டைக்குள் தெரிந்த தங்கச் சங்கிலிகூட கிறக்கம் தந்தது. அதை விடுவித்து விரலால் நிரட வேண்டும் போல இருந்தது. என் ஹார்மோன்கள் அந்த வாரம் ஓவர் டைம் வாங்கிக்கொண்டு இருந்தன. ஒரே ஒரு தடவைதான், பிளாஸாவில் கூட்டமில்லாமல் இருக்க, என்னைக் கலைத்துவிட்டார்.

நான் அவரிடம் சத்யம் வாங்கிக்கொண்டேன். எனக்கு அது பிடித்தமாக இருந்தாலும் எச்சரிக்கை ஓரத்தில் ஒலித்துக்கொண்டே இருக்க, "அர்ஜுன் எனக்கு சத்தியம் பண்ணிக் கொடுங்க" என்று கையைக் காட்டினேன்.

"என்ன சத்யம் ரேகா?"

"நிச்சயம் என்னைக் கல்யாணம் பண்ணிப்பீங்கதானே?"

"என்ன பைத்தியமாட்டம் பேசறே?"

"ருசி கண்டுவிட்டு விட்ற மாட்டீங்களே..."

"சத்ருகன் சின்ஹா படம் நிறைய பார்த்திருக்கியா என்ன? மேலும் இப்ப என்ன ஆயிடுத்து உன்னைத் தொட்டதில? யாரும் யாரையும் தொட்டுக் கர்ப்பமாக்க முடியாது. தெரியுதில்லை."

"அதுக்கில்ல. நான் இதுவரை.. இந்த மாதிரி யாரும் என்னை..."

"எனக்கும் ரேகா."

"பொய் பொய்" என்று அவரை மார்பில் குத்தினேன்.

"நிஜம்மா, சாமி சாட்சியா இதுவரைக்கும் பெண்களைப் பற்றியே நினைக்கலை."

"பின்னே எதைப் பத்தி?"

"சொன்னேனே, முப்பத்தைந்து லட்சம் முப்பத்தைந்து வயசில."

"இப்ப எத்தனை லட்சம் பண்ணியிருக்கிங்க?"

"லட்சமா இப்பதான் லுபின் ஐந்நூறு ஷேருக்கு அப்ளை பண்ணியிருக்கேன். ஐ ஹாப் லாங் வே டு கோ." நடக்கும்போது எதிரே வந்த டாக்ஸியின் எண்ணைக் கூட்டச் சொன்னார். பதினெட்டு வந்தது. "ஒண்ணையும் எட்டையும் கூட்டு."

"ஒன்பது. ஏன்?"

"என் லக்கி நம்பர்!" என்றார்.

"ஒன்பது ஒரு ஸ்பெஷல் நம்பர். அதைப் பத்தி அப்புறம் சொல்றேன். ஒன்பது, ஆறு, மூணு... உனக்கு என்ன நம்பர் பிடிக்கும்?"

"எனக்கு எல்லா நம்பரும் ஒண்ணுதான்!" என்றேன்.

(வண்ணத்துப்பூச்சி சிறகடிக்கும்...)


# செக்ஸ் மாத்திரை விளம்பரத்தில் புத்தரின் உருவப்படம்

கலவரம் வராமலிருக்குமா.... என்ன செக்ஸ் உணர்வைத் தூண்டும் மாத்திரை விளம்பரத்தில் புத்தரின் படத்தைப் பிரசுரித்தால் கொதிப்படையாமல் இருப்பார்களா....?

இந்த அநியாயம் இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தின் பூனே நகரில் இடம்பெற்றிருக்கிறது.

செக்ஸின் நீண்டநேர இன்பம் பெற.... என்று வெளியான விளம்பரத்தில் புன்சிரிப்புடன் புத்த பெருமானைப் புகுத்தியிருக்கிறது ஒரு உற்பத்தி நிறுவனம்.

மிருதுவானது.... உங்கள் செக்ஸ் உணர்வின் இனிமையான நேரங்களை நீடிக்கச் செய்கிறது.... என்று ஏகப்பட்ட கவர்ச்சி வாசகங்களுடன் பளிச்சென்று இருக்கிறது புத்தபெருமானின் உருவப் படம்.



இந்த விளம்பரம் தொடர்பான தகவல் மராத்திமொழி செய்தித்தாள் ஒன்றில் வெளியானதையடுத்து சனிக்கிழமையன்று பூனே நகரில் வன்முறை வெடித்தது.

கொதித்தெழுந்த மக்கள் சிலர் வீதிகளில் கல்வீச்சில் ஈடுபட்டனர். பல வாகனங்கள் சேதமடைந்தன.

இந்த நகரில் குறைந்தளவிலான பௌத்தர்களே வாழ்கின்றபோதிலும் இந்துக்களும், முஸ்லிம்களும் இணைந்து எதிர்ப்புத் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட விளம்பர நிறுவனம் முன்னதாக தனது வடிவமும், வாசகமும் சரியானது என வாதாடியது. ஆனால் பின்னர் அவற்றை வாபஸ் பெறுவதாக அறிவித்தது.

# 'இனிமேல் முடியாது'

கடந்த வாரம் முழுவதும் எங்கு பார்த்தாலும் லாடன், லாலே பிஜ்லானி இரட்டைச் சகோதரிகளின் செய்திகள் தான். இப்போது இவர்கள் மரணித்து அடக்கம் செய்யப்பட்டுவிட்டனர்.



இந்தச் சகோதரிகளின் மண்டை ஓடுகளை வெட்டிப் பிரிக்கும் முயற்சியில் ஈடுபட்ட பிரதான மருத்துவ நிபுணர் பெஞ்சமின் காரன், தான் இனிமேல் இவ்வாறான சத்திர சிகிச்சைகளில் பங்குகொள்ளப் போவதில்லை எனக் கூறியிருக்கிறார்.

அமெரிக்காவின் உலகப் புகழ் பெற்ற ஜோன்ஸன் ஹொப்கின் மருத்துவமனையின் நரம்பியல் நிபுணரான இவர், ஈரானிய சகோதரிகளின் சத்திர சிகிச்சைக்காக மிகுந்த உற்சாகத்தோடு சிங்கப்பூர் வந்தவர். வளர்ச்சியடைந்த மனிதர்களின் தலைகளை வெட்டிப் பிரிக்கும் இந்த வகை சத்திரசிகிச்சைகளில் இனிமேல் தாம் ஆர்வம் காட்டப் போவதில்லை என்று டாக்டர் பெஞ்சமின் கூறினார்.

52 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக நடந்த சத்திரசிகிச்சையின் இறுதிக் கட்டம் நெருங்கும்போது லாடன், லாலே சகோதரிகளின் உடலில் இருந்து அதிக அளவு இரத்தம் வெளியேறியதால் 90 நிமிட இடைவெளியில் ஒருவர் பின் ஒருவராக உயிரிழந்தனர்.

படத்தில் இருப்பது இந்தோனேசியாவின் மேற்கு ஜாவாவில் எஸ்டானா அன்யா மருத்துவமனையில் கடந்த 12ம் திகதி வயிற்றில் ஒட்டிப் பிறந்துள்ள குழந்தைகள்.

# போதை.....போதை



போதையில் இப்படியுமா செய்வார்கள்... கொஞ்சம்..... ஒரு மாதிரியான சம்பவம்தான்.....

போதைப் பொருள் சாப்பிட்டு அளவுக்கு அதிகமாகப் போதை ஏறிய இளைஞர் ஒருவர் தனது ஆணுறுப்பை வெட்டி எறிந்துவிட்டார்.... என்றா நினைக்கிறீர்கள்.... இல்லை அவர் அதனை வறுத்துச் சாப்பிட்டுவிட்டார்! அடக் கடவுளே என்கிறீர்களா..... போதை! போதை!!

இந்த விநோதமான சம்பவம் மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூருக்கு 300 கி.மீ தொலைவில் உள்ள சித்தியவான் என்ற இடத்தில் நடந்துள்ளது.

34 வயதான இந்த வாலிபர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு அளவுக்கதிகமான போதை மாத்திரைகளை உட்கொண்டார். போதை மயக்கத்தில் தனது மர்ம உறுப்பைக் கத்தியால் வெட்டி எடுத்து வறுவல் செய்து சாப்பிட்டார்.

வெட்டி எடுக்கப்பட்ட இடத்திலிருந்து இரத்தம் பெருக்கெடுத்து கடும் வலி ஏற்பட்ட பின்பே நிலைமையை அவர் உணர்ந்தார். உடனடியாக இவரை மருத்துவமனையில் அனுமதித்தனர். உயிருக்கு ஆபத்து இல்லை என்று கூறப்படுகிறது. ஆனால் ரொம்பவும் சிரமப்பட்டுத்தான் பிழைப்பார் என்கிறார்கள்.

இப்போது இவரை போதை மறுவாழ்வு மையம் ஒன்றில் சேர்த்திருக்கிறார்கள்.

**இவ்வார சிறுகதை**

# பெண் குழந்தை

வீட்டு முற்றத்தில் கிளை பரப்பி நிமிர்ந்து நின்ற மாமரத்தின் உச்சிக் கொப்பினிலிருந்த காக்கைக் கூட்டில் காக்கை குஞ்சுகள் மழை கண்டு கீச்சிடவும், தாய்க் காகம் தான் நனைந்துகொண்டு தன் இறக்கையினால் குஞ்சுகளை மூடியிருந்த காட்சியினை வெறித்துப் பார்த்தபடி வாயிற் கதவருகே குந்தியிருந்த ரிஸ்மியாவின் உடலினில் மழைத்துளி தெறிக்கவும், ஒரு வித ஏக்கத்துடன் எழுந்து சென்று பலத்த காற்றினால் ஜன்னலினூடாக வரும் நீரினைக் கட்டுப்படுத்த ஜன்னலை இழுத்து மூடிவிட்டு மீண்டும் பழைய இடத்தில் அமர்ந்துகொள்கிறாள். இப்போது அக் காக்கைக் குடும்பத்தை அவதானிக்க முடியாதவாறு மழையும் இருளும் அதிகரித்திருந்தது.

நசீரிடம் எவ்வாறு விடயத்தைக் கூறுவது என்ற ஏக்கம் அவளை ஆட்கொள்ளத் தொடங்கியது.

“சொல்லாமல் எத்தனை நாளைக்குத்தான் மறைக்க முடியும். முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைக்க முடியாதே. அதுவாகவே காட்டிக் கொடுத்துவிடுமே, என்ன வந்தாலும் பரவாயில்லை எப்படியாவது அவரு வந்தவுடன் சொல்லித்தான் ஆகனும்” என்று தனக்குத்தானே ஆறுதல் சொல்லிக் கொண்டாலும் நசீர் அன்று கூறிய வார்த்தைகள் இன்னும் காதுகுள் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

“இஞ்ச பாரு ரிஸ்மியா, முதல் குழந்தையே நமக்கு பொம்பிளைப் பிள்ளைதான் பிறந்திருக்கு. எனக்கு கிடைக்கிற சம்பளம் நம்ம ரெண்டு பேருக்குமே போதாது. இனி மூணு பேருக்கும் சேர்த்து உழைக்கனும். இதோட நாம குழந்தை பெறுகிறதை நிப்பாட்டிக்குவம். மருந்து மாத்திரையெல்லாம் வாங்கி வந்திருக்கன் கவனமா பாவிச்சிக்க. மீறி ஏது சரி நடந்தா நீதான் விளைவுகளை சந்திக்கனும்.”

இப்போது ரிஸ்மியாவின் கண்கள் பனித்திருந்தன.

ரிஸ்மியாவிற்கு சிறு வயதிலிருந்தே குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியம். திருமணத்திற்கு முன்னதாக அவள் பல விதமான கற்பனைகளைத் தன்னகத்தே கொண்டிருந்தாள். திருமணம் என்றால் முற்று முழுதாகக் கணவனின் சிந்தனைகளுக்குள்ளேயே முடங்கிவிடுவதென்று அவள் எண்ணியிருக்கவில்லை. அவளுடைய வாழ்க்கையில் கலந்தாலோசித்தல் என்பது இல்லாமல் ஒரு அடிமைத்தனம் இருப்பதை அவள் உணர்ந்துகொண்டாலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அதை அவள் வெளிப்படுத்தியதில்லை. திருமணத்தின் பின் அடுக்கடுக்காய் ஐந்தாறு பிள்ளைகள் பெற்று கொஞ்சி விளையாட வேண்டுமென்ற அவளுடைய ஆசையெல்லாம் நசீர் போட்ட கட்டளையினால் உடைந்து போயிருந்தது. ‘எத்தனையோ தம்பதிகள் குழந்தைப் பாக்கியம் இல்லா திருக்கின்றபோது, இறைவன் நமக்கு குழந்தை பெத்துக்குற சந்தர்ப்பத்த தந்தும் நாம வீணாக்கிட்டோமே’ என்ற கவலை அவளை வாட்டிக்கொண்டுதான் இருந்தது. கணவனின் கட்டளையை மீறக் கூடாது என்ற ஒரே காரணத்தினால்தான் அவள் மருந்து மாத்திரையெல்லாம் பாவித்து வந்தாள். இருந்தாலும் கொடுக்கும் தெய்வம் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுக்கும் என்பது போல மருந்து மாத்திரைகளையும் மீறி அவளின் வயிற்றில் இந்த இரண்டு மாதக் கரு வளர்ந்திருப்பதை இன்று காய்ச்சலுக்காக வைத்தியசாலைக்குச் சென்றபோது தான் அறிந்துகொண்டாள். அவளுக்கு அளவில்லா மகிழ்ச்சி. தனக்கு இன்னுமொரு வாரிசு வரப்போவதில் மட்டற்ற சந்தோசம். அந்த சந்தோசத்தை நசீருடன் எவ்வாறு பகிர்ந்துகொள்வதென்பதுதான் அவளைப் பெரிதும் கவலைக்குள்ளாக்கியிருந்தது. இந்தக் குழந்தை தரித்ததை நசீர் ஏற்றுக்கொள்வானா என்ற ஏக்கத்துடன் வாயிலில் குந்தியிருந்தவளை தொட்டிலில் இருந்து அழும் மகிஸாவின் அழுகை எழுப்பி விட்டது. தன் அன்புச் செல்வத்தை அள்ளியெடுத்துப் பாலூட்டும்போது மழையில் நனைந்தபடி நசீர் வந்து கொண்டிருந்தான். மகிஸாவைத் தொட்டிலில் கிடத்திவிட்டு மழையில் நனைந்து வந்த நசீரின் தலையினை தன் முந்தானையினால் துடைத்துவிட்டு சோற்றினைப் பரிமாறினாள். நசீரிடம் எவ்வாறு சொல்வதென்றுதான் அவளுக்கு விளங்கவில்லை. அமைதி நிலவியது.

“என்ன ரிஸ்மியா ஒரு மாதிரி இருக்க.”

“ஒன்றுமில்லைங்க.”

ஒற்றைச் சொல்லில் முடித்துக் கொண்டாள்

சாப்பிட்டு முடியும் வரை காத்திருந்தாள். சாப்பிட்ட கையோடு நசீர் பாயை விரித்துச் சாய்ந்துகொள்கிறான்.



“என்னங்க.”

“என்ன ரிஸ்மியா.”

“அது வந்து, வந்து...”

“எனக்கு ரொம்ப களைப்பாயிருக்கு. எதுவெண்டாலும் சீக்கிரம் சொல்லு.”

“நான் உண்டாயிருக்கன்”

அவள் பட்டென்று சொல்லிவிட்டாள். மறுகணம் நசீரின் கை அவளின் கன்னங்களைப் பதம் பார்த்தது.

“நாயே! எத்தனை தடவ சொன்னன். பக்குவமா மருந்தெல்லாம் பாவி, கவனமா நடந்துக்கென்னு! நீ வேணுமெண்டே உண்டாகியிருக்க. நாளைக்கே ஆஸ்பத்திரிக்குப் போய் கருவ கலைச்சிடு.”

அவன் இறுதியாகச் சொன்ன வார்த்தையை அவளால் ஜீரணிக்க முடியவில்லை அழுதுகொண்டிருந்த அவள் முகம் இப்போது கோபக் கணையால் சிவந்து போகிறது. இதுவரையும் நசீரை ஒரு வார்த்தையேனும் எதிர்த்துப் பேசாத அவள், இப்போது துணிந்து விட்டாள்.

“என்னால் கருவ கலைக்க முடியாது”

“ஏண்டி சொல்ல மாட்ட. எல்லாருக்கும் உழைச்சி நான் கஞ்சி ஊத்துறனில்ல, அந்த திமிர்ல பேசுற. ஏற்கனவே ஒரு பொட்ட சனியன பெத்து வெச்சிருக்க, இனியும் என்ன ஆண் சிங்கமா பொறக்கப் போகுது.”

“ஏங்க, குழந்தை ஆணா, பெண்ணான்னு தீர்மானிக்கிறது அல்லாஹ் தாங்க. என்ன குழந்தை பொறந்தாலும் அதை படைச்சவனால காப்பாத்த முடியும். உங்க காலைப் பிடிச்சிக் கேட்டுக்குறன். இந்தக் குழந்தையை மாத்திரம் பெத்துக்க அனுமதிங்க.”

“என்ன பேயெண்டாலும் பெத்துத் தொலைடி” என்று பேச்சை முடித்துவிட்டு நசீர் மறுபுறம் திரும்பிப் படுத்துக்கொள்கிறான்.

அன்றிலிருந்து ரிஸ்மியா நசீருக்கு வேண்டாப் பொருளாகவே மாறிப்போகிறாள். என்ன செய்தாலும் எரிந்து விழுந்தான். சிறிய பிழையென்றாலும் அடித்து நொறுக்கினான். எல்லாத் துயரங்களையும் ரிஸ்மியா தன் வயிற்றிலிருக்கும் செல்வத்திற்காகப் பொறுத்துக் கொள்கிறாள்.

கஸ்டத்துடனும் காயங்களுடனும், துன்பத்துடன், அழுகையுடனும் ரிஸ்மியாவின் அந்த சந்தோசத்தையெல்லாம் சொல்ல அவளுக்கு யார் இருக்கிறார். அனாதையான அவளின் உணர்வுகள் நசீருடன் மாத்திரம்தானே அடங்கியிருந்தது. அவள் உயிராக நம்பியிருந்த நசீரே அவளை உதாசீனம் பண்ணியபோது அவள் சந்தோசங்களையும், துன்பங்களையும் தனக்குள்ளேயே புதைத்துக் கொண்டாள். ‘தன்னைப் பெறுவதற்கும், தன் சுகத்திற்கும் பெண் தேவைப்படும் ஆண்களுக்கு குழந்தையாய் மட்டுமேன் பெண் பிறக்கக் கூடாது’ என்ற கேள்வி அவளில் அடிக்கடி எழும்.

**காத்தநகர் முகைதீன் சாலி**

அன்று வீட்டு வேலைகளை முடித்துவிட்டு பாயில் சாய்கிறாள் ரிஸ்மியா. இலேசாக இடுப்பு வலிக்க ஆரம்பிக்கிறது அது பிரசவ வலிதான் என்பதை உணர்ந்துகொள்கிறாள். வலி தாங்க முடியாது போகவே சத்தமிட்டு அழுகிறாள். கூடவே மகிஸாவும் அழுகிறாள். அப்போது நசீர் குடித்துவிட்டு தள்ளாடியபடியே வருகிறான்.

“ஏண்டி ஏன் அழுவுற.”

“எனக்கு ரொம்ப வலியா இருக்கு, என்ன ஆஸ்பத்திரிக்கு கொண்டு போங்க.”

“ஏண்டி இந்த பொட்ட சனியன பெற்றதுக்கு ஆஸ்பத்திரிக்கு போகனுமா? இங்கேயே பெத்து தொலையேண்டி.”

ரிஸ்மியா நசீரின் காலைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

“என்னால தாங்க முடியல. என்ன கொண்டு போங்க.”

“ஏய் நானும் சொல்றன் ஏண்டி அழுதுகிட்டிருக்க.” என்று சொல்லி ரிஸ்மியாவின் வயிற்றில் ஓங்கி உதைக்கிறான்.

ரிஸ்மியாவின் அவலக் குரல் கூரையையும் பிய்த்துக்கெண்டு அயலவர்களின் காதுகளை எட்டுகிறது. அவர்களே ரிஸ்மியாவை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகிறார்கள். அங்கே. ரிஸ்மியா அழகியதொரு ஆண்குழந்தையைப் பிரசவிக்கிறாள். கொஞ்ச நேரத்தில் மயக்கத்திலிருந்து தெளிந்தவள் தன் குழந்தையை அள்ளியணைத்து முத்தமிடக் கைகளினால் தடவியபோதுதான் அந்த அவலச் செய்தியினைத் தாதி சொல்கிறாள்.

“உங்களுக்கு ஆண் குழந்தை பிறந்திச்சி. ஆனா பிறக்கும் போதே இறந்துதான் பிறந்திச்சி.”

இந்தச் செய்தி ரிஸ்மியாவின் இதயத்தைச் சுக்கு நூறாய் உடைக்கிறது. நசீர் தன் வயிற்றில் உதைத்தபோது குழந்தையின் துடிப்புகள் எல்லாம் அடங்கியது ஞாபகத்திற்கு வரவே கோவென்ற அழுகையுடன் அவள் மூச்சும் அடங்கிப் போகிறது.

செய்தி கேட்ட நசீரின் கால்கள் தாமாகவே வைத்தியசாலையை நோக்கி ஓடுகின்றன. அங்கே தாயையும் தன் சகோதரனையும் இழந்த செய்தி தெரியாமலே நின்றிருந்த மகிஸா, நசீரைக் கண்டதும் மிரண்டு ஓடுகிறாள். இப்போது நசீருக்கு உறவென்று சொல்ல யாருமில்லை. அந்தப் பெண் குழந்தையைத் தவிர. முதன் முறையாக தன் குழந்தையை அள்ளி அணைக்க நசீர் அதன் பின்னே ஓடுகிறான்! ●

அண்டை மண்டலத்திலிருந்து

காணகன்

# இனித் தமிழ் நாட்டில் ஸ்ரைக்கா? மூச்...

தமிழக அரச ஊழியர்களின் வேலை நிறுத்தம் பத்தே நாட்களுக்குள் முடிவுக்கு வந்துவிட்டது.

முதல்வர் ஜெயலலிதாவின் அதிரடி நடவடிக்கைகளினால் நிலை குலைந்துபோன ஊழியர்கள் வேறு வழியின்றி வேலைக்குத் திரும்பக்கூடும் என்று நாம் கடந்த வாரம் முரசில் தெரிவித்திருந்தோம்.

தற்போது உச்ச நீதி மன்றமும் அரசின் பக்கமே சேர்ந்துகொண்டு விட்டது.

வேலை நிறுத்தம் சரியா அல்லது அவர்களது 'ஸ்ரைக்கை'த் தடை செய்யும் அரசு ஆணைகளும் அவசரச் சட்டங்களும் சரியா என்ற வினாவுக்கு விடையளிக்கவில்லை நீதிமன்றம். மாறாக அரச ஊழியர்களைப் பணி நீக்கம் செய்தது குறித்து இந்தக் கட்டத்தில் தான் பரிசீலனை செய்ய வேண்டியதில்லை; முதலில் ஸ்டேட் அட்மினிஸ்ரேடிவ் ட்ரைப்யூனல் எனப்படும் மாநில தீர்ப்பாயம்தான் இப்பிரச்சினை குறித்து முடிவு செய்ய வேண்டும் என்று கூறிவிட்டது உச்ச நீதிமன்றம்.

கைது செய்யப்பட்ட ஊழியர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என அது தீர்ப்பளித்திருந்தாலும் கூட அதனால் அவர்களுக்குப் பெரிதாக இலாபம் எதுவும் இல்லை. தீர்ப்பின் காரணமாக 4 இலட்சம் ஊழியர்களின் எதிர்காலம் இருண்டுவிட்டது என்பதில் ஐயமில்லை.

ஏறத்தாழ 4 இலட்சம் ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தொழிற்சங்கங்கள் கூறுகின்றன. அரசோ 1.69 இலட்சம் பேர் மீதுதான் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறது.

எப்படியோ வேறு தொழில் தெரியாத ஆயிரக்கணக்கான ஊழியர்கள் நடுத்தெருவில்.

முதலில் அரசாங்கத்திடம் மனுச் செய்ய வேண்டுமாம். சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மனுவினை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டால் தீர்ப்பாயத்துக்குச் செல்ல வேண்டுமாம். அங்கும் பலிக்காவிட்டால் நீதிமன்றத்தின் முன் வரலாம். உயர் நீதிமன்றம் கூறுகிறது.

எப்போது அதிகாரிகள் முடிவெடுப்பார்கள், ஒரே ஒரு உறுப்பினரைக் கொண்ட தீர்ப்பாயம் எப்போது ஊழியர்களின் மனுக்கள் மீது தனது முடிவினைக் கூறும். அந்தக் கால கட்டத்தில் ஊழியர்களின் குடும்பங்களைக் கவனிக்கப்போவது யார்? இதற்கெல்லாம் பதிலே இல்லை.

மருத்துவத்துறை, குடிநீர், போக்குவரத்து போன்ற உண்மையிலேயே அத்தியாவசியப் பணிகள் போல சாதாரண அரச அலுவலகங்களிலெல்லாம் அத்தியாவசியப் பணியாக அறிவிப்பது நியாயந்தானா, எவ்வித விசாரணையும் இன்றி எந்த ஊழியரையும் வேலை நீக்கம் செய்வது முறையானதா? என்பன போன்ற கேள்விகளுக்கும் விடையளிக்கவில்லை நீதிபதிகள்.

இனி என்ன செய்வார்கள் ஊழியர்கள். ஒன்று உச்ச நீதிமன்றத்தின் முன் மனுச்செய்ய வேண்டும். அல்லது ஜெயலலிதாவிடம் கெஞ்ச வேண்டும்.

ஊழியர்கள் வேலைக்குத் திரும்புகிறோம் என்ற வாக்குறுதியின் பேரில் பணி நீக்க உத்தரவுகளுக்குத் தடைவிதித்து பேச்சு வார்த்தைகளைத் தொடருங்கள் என்று மட்டும் ஆணையிட்டு உயர் நீதிமன்ற நீதிபதி தினகரன் என்பவர் முதலில் ஒரு தீர்ப்பளித்தார்.

அந்தத் தீர்ப்பு வெளியான இரண்டு மணி நேரத்திலேயே



தமிழக அரசு மேல் முறையீடு செய்தது. அதனை ஏற்றுக்கொண்டு தலைமை நீதிபதி சுபாஷன் ரெட்டி மற்றும் நீதிபதி கோவிந்தராஜ் அடங்கிய டிவிஷன் பெஞ்ச் தினகரனின் தீர்ப்பிற்கு இடைக்காலத் தடை விதித்தது. பிறகு மூன்று நாட்கள் பல மணி நேரங்கள் ஊழியர்கள் சார்பாகவும் அரசு சார்பாகவும் வழக்கறிஞர்கள் வாதிட்ட பிறகு தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. பிறகு காலையில் தீர்ப்பு, மாலையில் தீர்ப்பு என்று இழுத்தடித்து இறுதியில் வெள்ளியிரவு 7 மணிக்கு சுபாஷன் ரெட்டி தீர்ப்பின் முக்கிய பகுதிகளைப் படித்தார்.

கைதானவர்களை விடுதலை செய்கிறோம். ஆனால் பணி நீக்கம் சம்பந்தமாக எங்களிடம் ஏன் வந்தீர்கள். முதலில் முதல்வரிடம் போங்கள் என்று கறாராகக் கூறிவிட்டனர் நீதிபதிகள். இதற்கேன் மூன்று நாட்கள் விசாரணை? இது நீதிமன்றம், சட்டத்தை மட்டுமல்ல நீதியையும் நிலைநாட்ட வேண்டும். இரக்கம் காட்டவில்லையென்றால் நீதியை நிலைநாட்ட முடியாது என்றெல்லாம் ஏன் முழங்க வேண்டும் என்று புலம்பினர் ஊழியர்கள்.

விசாரணை இன்றி ஒருவரை வேலை நீக்கம் செய்வது அரசியலமைப்புச் சட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு முரணானது என்ற வாதத்தினையே நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந் நிலையில் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றால் நியாயம் கிடைக்கும் என்று நம்புகின்றனர் ஊழியர்கள். ஆனால் இனிமேலும் அவர்கள் அரசுடன் மோதுவார்களா என்பது கேள்விக்குரியது.

தீர்ப்பு வெளியான பிறகு செய்தியாளரிடம் பேசிய போராட்டக் குழுவின் முக்கிய தலைவர் ஒருவர் அரசு மனமிரங்கி நீக்கப்பட்டவர்கள் அனைவரையும் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளும் எனத் தாம் நம்புவதாகக் கூறினார். அப்படியானால் வேலை நிறுத்தம், கைது, தடியடி, அடிப்படைக் கோரிக்கைகள் எல்லாம் என்ன ஆயிற்று. அரசு மனது வைத்தால் எல்லாம் நடக்கும் என்று சொல்லி தொழிற்சங்கத் தலைவர்கள் இறங்கிக்கொள்ளப் போகின்றனர். இனி தமிழகத்தில் எந்த அரசு துறையிலும் ஸ்ரைக் செய்வதை நினைத்தே பார்க்க முடியாது என்ற நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது.

உலக மயமாக்கலின் ஒரு பகுதியே இந்த விளைவுகள் எல்லாம் என்றால் அது மிகையாகாது. ▫

---

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

(அரசியல் தொடர்)

## 21 தேனீர்க் கோப்பைக்குள் இரத்தம்!

### தமிழரசுக் கட்சியின் சிபாரிசு

தமிழரசுக் கட்சியினால் முன் வைக்கப்பட்ட இந்த நகல் அரசியல் அமைப்பு வரைபின் ஏனைய அங்கங்கள் பற்றிப் பார்க்குமுன் சில விடயங்களைச் சமகால சூழலுடன் பொருத்திப் பார்க்க வேண்டியது அவசியமாகும். அவ் வகையில் இலங்கையின் மாகாணப் பிரிப்பு குறித்த பார்வை மற்றும் முஸ்லிம்களுக்கென ஒரு தனியலகு என்பவை முக்கியம் பெறுகின்றன.

**மாகாணப் பிரிப்பு**

1. பொருளாதார ரீதியில் முன்னேறிய மாகாணங்களாக மேற்கு மற்றும் தென் மாகாணங்கள் அடையாளப்படுத்தப்பட்டன.
2. நெல் மற்றும் தென்னை என்பன பெருமளவில் விளையும் பிரதேசமாக வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்கள் குறிக்கப்பட்டன.
3. தேயிலை மற்றும் ரப்பர் பெருமளவில் வளரும் பிரதேசம் என்ற வகையில் ஊவா, சப்பிரகமுவ, மத்திய மாகாணங்கள் இணைக்கப்படலாமெனக் கூறப்பட்டது.
4. வட மாகாணத்தையும் கிழக்கின் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களையும் இணைத்து தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசம் வரையறுக்கப்பட்டது.
5. தென் கிழக்கு மாவட்டமான அம்பாறையை முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டது.

தமிழரசுக் கட்சியினால் முன் வைக்கப்பட்ட இந்த மாகாண எல்லை மீள் வரைவுகள் குறித்துக் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். ஏனெனில் முதலாவதாக 1948 முதல் தமிழரசுக் கட்சி "தாயகத்தைப் பிரிக்காதே" என்னும் சுலோகத்தையே முன்வைத்து வந்தது. ஆனால் அரசியலமைப் பின் நகல் வரைபின் போது அதிலிருந்து மாறுபட்டு வடக்கு–கிழக்கு இணைக்கப்படுவதற்காக அம்பாறையை விட்டுக் கொடுக்கலாமெனச் சிபாரிசு செய்துள்ளது என்பதாகும். இரண்டாவதாக வடக்கு–கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா முன் வைத்த 1986 டிசம்பர் 19ம் திகதி யோசனைகளும் ஏறத்தாழ இதனை ஒத்ததாகவே இருந்துள்ளது. மூன்றாவதாக, இந்த அரசியலமைப்பு நகல் வரைபு முன்வைக்கப்பட்ட போது சட்டத்தரணியான அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் தமிழரசுக் கட்சியின் செயலதிபராக இருந்தார் என்பதோடு, பாராளுமன்றத்தில் பெரும்பாலும் தமிழர் தரப்பில் கல்வியறிவு மிக்க பலரும் அங்கம் வகித்து இருந்தனர். எனவே வலுவான இந்த மூன்று காரணங்களையும் கவனத்தில் கொண்டு பார்க்கும்போது அப்போது பாராளுமன்றப் பிரதிநிதிகளாக இருந்த தமிழ்த் தலைவர்கள் இனப் பிரச்சனையின் உண்மையான வடிவத்தைப் புரிந்து இருந்தனரா? என்ற கேள்வி மேலெழுவதைத் தவிர்க்க முடியாது. உதாரணமாக, தரப்படுத்தல் பிரச்சனை பற்றி மேடைக்கு

**இக் கருதுகோள் முன் வைக்கப்பட்ட எழுபத்தோராம் ஆண்டில் ஆயுதப் போர் முனைப்புப் பெற்றிருக்கவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் என்றொரு கட்சி தோற்றம் பெற்றிருக்கவில்லை. ஏட்டிக்குப் போட்டியான அசம்பாவிதங்கள் இடம் பெற்றிருக்கவில்லை. காத்தான்குடி, ஏறாவூர் பள்ளிவாசல் படுகொலைகளும், வட பகுதியிலிருந்து விரட்டப்பட்டது போன்ற கொடூர அநுபவங்களை முஸ்லிம் மக்கள் சந்தித்து இருக்கவில்லை.**

மேடை விலாவாரியாக அக்குவேறு ஆணி வேறாகப் பேசிய தலைவர்கள் தேசிய கல்விக் கொள்கையை வகுப்பது மத்திய அரசின் பொறுப்பு என்று ஒதுக்கிக் கொடுத்ததைக் குறிப்பிடலாம். மேலும் தென்னிலங்கையில் மாகாணங்களின் எல்லை வரையறைக்கு பொருளாதாரக் காரணிகள் முன் நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால் வடக்கு–கிழக்கு மாகாணத்திற்கு என்று வரும் போது இனம், மதம் போன்ற காரணிகளே முதன்மை பெறுவதையும் கவனிக்கலாம்.

**முஸ்லிம்களுக்கெனத் தனி அலகு**

அடுத்ததாக, முஸ்லிம்களுக்கென ஒரு தனியலகு கோரிக்கை என்பது, எண்பதுகளின் பிற்பகுதியில் முஸ்லிம் காங்கிரஸாலும் அதன் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களாலும் முன்மொழியப்பட்டதொன்று போலவே பலரும் கருதுகின்றனர். தமிழரசுக் கட்சியின் முக்கிய தூண்களாகப் பல முஸ்லிம் பிரமுகர்கள் விளங்கி இருக்கின்றனர். பொத்துவில் முஸ்தபா, கல்முனைக் காரியப்பர், மூதூர் மௌலானா என்போர் முதல், மன்னாரின் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த கே.எஸ்.ஏ.கபூர் வரை பலரை இவ் வகையில் பட்டியலிட முடியும். தமிழ் மக்களைத் தமிழ் பேசும் மக்களென விழித்து முஸ்லிம் மக்களையும் அரவணைத்துச் செல்லவே தந்தை செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக் கட்சி முற்பட்டது. பிட்டுக்குள் தேங்காய்ப்பூ போன்ற உறவென இது வர்ணிக்கப்பட்டது. இவ்வாறெல்லாம் கூறப்பட்டபோதும் கூட முஸ்லிம்களுக்கென ஒரு தனி அலகை அடையாளப்படுத்த வேண்டியது அவசியம் என்று அப்போது கருதப்பட்டிருக்கிறது.


மேலும் இக் கருதுகோள் முன் வைக்கப்பட்ட எழுபத்தோராம் ஆண்டில் ஆயுதப் போர் முனைப்புப் பெற்றிருக்கவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் என்றொரு கட்சி தோற்றம் பெற்றிருக்கவில்லை. ஏட்டிக்குப் போட்டியான அசம்பாவிதங்கள் இடம் பெற்றிருக்கவில்லை. காத்தான்குடி, ஏறாவூர் பள்ளிவாசல் படுகொலைகளும், வட பகுதியிலிருந்து விரட்டப்பட்டது போன்ற கொடூர அநுபவங்களை முஸ்லிம் மக்கள் சந்தித்து இருக்கவில்லை. எனவே இத்தனைக்கும் பின்னர் முஸ்லிம்கள் தரப்பில் தற்போது தனியலகுக் கோரிக்கை முன்வைக்கப்படுவது அதிசயப்படத் தக்கது அல்ல. அச்சம் கொள்ள வேண்டியதும் அல்ல. ஆனால் அன்று முஸ்லிம்களுக்கென ஒரு தனியலகைச் சிபார்சு செய்த தலைவர்களின் வாரிசுகளாகத் தம்மைச் சொல்லிக் கொள்பவர்களும் அந்தத் தலைவர்கள் முன்பு சொன்னவைகளையும், செய்தவைகளையும் இப்போது ஒரு தடவை திரும்பிப் பார்த்துக்கொள்வது நல்லது.

இணைந்து எழுதுவது
த. சபாரத்தினம்
+
அம்பி மகன்

(தொடர்ந்து வரும்....)

இரகசியம் காத்தல் அவசியம் என்பதால் பெயர்கள், இடங்கள் யாவும் கற்பனையில்...

# நெஞ்சினில் என்ன காயமோ...?



உடல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை விட உள நோயினால் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாகக் காணப்படும் இன்றைய கால கட்டத்தில், உள நலம், உளப் பாதிப்புகள், உள நோய்கள் பற்றி அறிந்துகொள்வதும் இவற்றிற்கான வைத்திய முறைகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகிறது. எனவே மேற்படி உள மருத்துவத் துறையில் அநுபவம் பெற்றவர்களும், நிபுணர்களுமான வைத்திய கலாநிதி திரு. த.கடம்பநாதன் (எம்.பி.பி.எஸ். எம்.டி. உள மருத்துவம்) அவர்களும் உளவியலாளர் திரு.தி.சுவீந்திரன் (எம்.ஏ.எம்,ஏ., எம்.பில்., உள மருத்துவம்) அவர்களும் இணைந்து தமது அநுபவங்களைப் பகிர்வதுடன் உளவியல் சம்பந்தமான வாசகர்களின் கேள்விகளுக்கும் பதிலளிக்க முன் வந்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக்கொள்கிறோம்.

## உள மருத்துவம்

### பொதுவான பதற்ற நோய்

**வ**சந்தி 25 வயதுடைய பிரபலமான பத்திரிகை நிருபர். பல்வேறுபட்ட பிரச்சினைக்குரிய நிகழ்வுகளை மக்களுக்கு வெளிக்கொணர்ந்த துணிச்சல் மிக்க நபர். கடந்த 6 மாதங்களாக இவர் தனது தொழில், தகமை மற்றும் செயற்றிறன் தொடர்பாகத் திருப்தியற்றிருந்தமை இவருடன் நடந்த உரையாடலில் இருந்து அறியப்பட்டது. மிகவும் சிறந்த எழுத்தாற்றல் வல்லமையைக் கொண்டிருந்த இவர் இந்த 6 மாதங்களாகத் தனக்குக் கொடுக்கப்படும் புதிய பொறுப்புக்களைத் தன்னால் சரியாகப் பூர்த்தி செய்ய முடியுமோ என்ற பயத்தைக் கொண்டிருந்ததாகக் கூறினார். இந்தப் பயத்திற்கான எந்த விதமான காரணங்களையும் அவரினால் கூற முடியவில்லை. மேலும் தனது உடல் நிலை மோசமாகிக்கொண்டிருப்பதான ஒரு எண்ணமும் சில மாதங்களாக அவரைப் பாதித்துக்கொண்டிருந்தது. ஆனால் அவரின் குடும்ப வைத்தியர் வசந்திக்கு எந்த விதமான உடல் பாதிப்புகளும் இல்லையென்று எடுத்துரைத்தார். அடிக்கடி ஏற்படுகின்ற தலைவலி, நெஞ்சுவலி, களைப்புத் தன்மை என்பவற்றைத் தனது உடல் நிலை பாதிப்பின் விளைவுகளாக வசந்தி கருதியபோதிலும் அவரின் குடும்ப வைத்தியர் மாறுபட்ட எண்ணத்தையே கொண்டிருந்தார். வசந்தி எந்த நேரமும் ஒரு அழுத்தத்துக்குள் இருப்பதாக உணர்ந்தார். இந்தப் பதற்ற உணர்வு அவர் வீட்டில் இருக்கின்றபோதும், பஸ்ஸில் பயணிக்கும்போதும் வேலைத் தலத்திலும் தொடர்ந்தது. தனக்கு முன்னாலுள்ள வேலைப்பழுவைச் சமாளிக்க முடியுமோ என்ற அச்சம் காரணமாக அவரின் மன அமைதி குலைந்தது. அடிக்கடி கோபப்படவும், வாக்குவாதப்படவும் ஆரம்பித்தார். இது அவருக்குப் புதிய அநுபவமாகையால் தனது மனநிலை குறித்து மேலும் மேலும் கவலைகொள்ள ஆரம்பித்தார். நித்திரைக்குப் போக முயற்சி செய்தபோதிலும் தூக்கம் வருவதற்கு சில வேளைகளில் இரவு 12 மணி வரை அவர் இருக்க வேண்டி வந்தது. இந்தப் பதற்ற நிலையும், உடல் உபாதைகளும் சிறிது சிறிதாக அதிகரித்துச் செல்வதை உணர்ந்த வசந்தி உளமருத்துவத் துறையின் உதவியை நாடினார். வசந்தி பொதுவான பதற்ற நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்.

#### பொதுவான பதற்ற நோய் என்றால் என்ன?

இவர்களில் பதற்ற நிலைக்கான அறிகுறிகள் 6 மாதங்களோ அல்லது அதற்கும் மேலாகவோ காணப்படும். இவர்கள் தாங்கள் பாரிய கவலையையோ, பிரச்சினையையோ கொண்டிருப்பதாக உணர்வார்கள். இவர்கள் தங்கள் நிதிநிலைமை, சுகநலம், குடும்பம், உத்தியோகம் தொடர்பான பாரிய மன உளைச்சலைச் கொண்டிருப்பார்கள். எந்த ஒரு பிரச்சினையும் அற்ற சந்தர்ப்பத்திலும் கூட மோசமான நிகழ்வு ஒன்று நடந்துவிடுமோ என்ற அச்சம் இவர்களை ஆட்டுவிக்கும்.

#### பொதுவான பதற்ற நோய் எந்தளவுக்குப் பொதுவாகக் காணப்படுகின்றது?

உலக சனத்தொகையின் ஏறத்தாழ 2-3 வீதமான மக்கள் இந் நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த எண்ணிக்கை நாட்டுக்கு நாடு வேறுபடக் கூடும்.

#### பொதுவான பதற்ற நோய் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?

உடலியல் காரணிகள், குறிப்பாக மூளையில் ஏற்படும் இரசாயன மாற்றங்கள் இந்த நோய்க்குக் காரணமாக அமைகின்றன. ஆனால் இந்த மாற்றங்களை ஏற்படுத்துவதில் ஒரு தனி மனிதனின் குணாதிசயமும், அவர் எதிர்கொள்ளும் வாழ்க்கைச் சம்பவங்களும் சமமான பங்கை வகிக்கின்றன.

பொதுவாக இந்த நோய் தனியாகக் காணப்படுவதில்லை. இந்த நோயால் பீடிக்கப்பட்டிருப்பவர்களில் மற்றைய பதற்ற நோய்களுக்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. இவர்களில் சிலர் போதைவஸ்துப் பாவனைக்கு உள்ளாகும் அவலமும் ஏற்படுகின்றது.

*அவரின் மன அமைதி குலைந்தது. அடிக்கடி கோபப்படவும், வாக்குவாதப்படவும் ஆரம்பித்தார். இது அவருக்குப் புதிய அநுபவமாகையால் தனது மனநிலை குறித்து மேலும் மேலும் கவலைகொள்ள ஆரம்பித்தார்.*

#### பொதுவான பதற்ற நோய் யாரை இலகுவில் பாதிக்கின்றது?

**(1) பெண்கள்**

ஆண்களை விடப் பெண்களே பெரும்பாலும் பொதுவான பதற்ற நோய்க்கு உள்ளாகுகின்றார்கள். இதற்கான காரணங்களாக ஓமோன்களில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது கலாசார எதிர்ப்புகளும் அதனாலான அழுத்தங்களும் காரணமாகின்றன.

**(2) குடும்ப நோய் சரிதம்**

குடும்பத்தில் வேறு யாருக்காவது பதற்ற நோய் இருக்கின்றபொழுது இந் நோய் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு அதிகரிக்கின்றது. இதற்கு குடும்ப உறவு நிலைகளோ, சமாளிக்கும் திறனைக் கற்றுக்கொள்ள முடியாத நிலைமையோ, குடும்பத்தில் நிலவுகின்ற துஷ்பிரயோகம், வன்முறை என்பனவோ காரணமாக அமைந்துவிடுகின்றன. ஒரு சிலரில் இந்த நோய் பரம்பரை பரம்பரையாக ஏற்படும் வாய்ப்பும் உள்ளது.

**(3) சமூக அந்தஸ்தும், இனத்துவமும்**

சிறுபான்மை இன மக்களிடையேயும், புதிதாக நாடொன்றில் குடிபுகுந்தவர்களிடமும் இந் நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமுள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**(4) மனச் சோர்வு**

விடலைப் பருவத்தில் மனச்சோர்வு நோய்க்கு உள்ளாகியவர்களில், பின்பு பொதுவான பதற்ற நோய் ஏற்படுவதாக அறியப்பட்டுள்ளது.

**(5) தனிமனித குணாதிசயமும் நெருக்கீடும்**

முதன் முதலில் பதற்ற நோய்க்கான அறிகுறிகள் பாரிய நெருக்கீடு ஒன்றுக்கு முகங்கொடுக்கும்போதே ஏற்படுகின்றன. ஆனால் பின்பு இந்த பதற்ற நிலை தொடருகின்றது.

#### பொதுவான பதற்ற நோய்க்கான சிகிச்சை முறைகள் யாவை?

சிகிச்சை முறைகளின் மூலம் பெரும்பாலான நோயாளிகளைக் குணப்படுத்த முடியும். சில நோயாளிகள் தாம் குணமாகுவதை ஒரு சில வாரங்களில் உணர்வார்கள். வேறு சிலரோ குணமாகுதவற்கு வருடங்கள் வரை செல்லக் கூடும். விசேடமாக போதைவஸ்துப் பாவனை, வேறு நோய்களோடு ஒருங்கே சேர்ந்திருக்கும் சந்தர்ப்பத்தில், சிகிச்சை சிக்கல் மிக்கதாக மாறிவிடுகின்றது.

சிகிச்சை முறைகள் பின்வரும் ஒரு வகையையோ ஒன்றிற்கு மேற்பட்ட வகைகளாகவோ அமைந்துவிடலாம்.

**(1) மருந்துகள்**

பதற்ற தணிப்பு Anxiolytic மருந்துகளும், மனச்சோர்வுக் கான மருந்துகளும் Anti Depressant இந்த நோயைத் தணிப்பதற்குப் பாவிக்கப்படுகின்றன.

உதாரணம்
Diazepam
Lorazepam
Fluoxeting

(2) நடத்தை மாற்றுச் சிகிச்சை முறை

நோயாளியின் நடத்தையை மாற்றியமைக்கவும், கட்டுப்படுத்தவும் இந்தச் சிகிச்சை முறை உதவு கின்றது.

(3) அறிவாற்றல் சிகிச்சை முறை

பிரயோசனமற்ற, தீங்கு விளை விக்கக் கூடிய எண்ணங்களை மாற்றியமைக்க இச் சிகிச்சை முறையால் முடியும்.

(4) சாந்த வழிமுறைகள் Relaxation Techniques.

(தொடர்ந்து வரும்)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்கு கொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 25க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

திருமதி. லில்லி சின்னத்தம்பி, 84/10, பாரதி வீதி, திருகோணமலை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. கே.அரசேஸ்வரன், நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
02. எம்.எம்.கலீல், பிரதேச செயலகம், கல்முனை.
03. க.தங்கராஜா, தபாலக வீதி, திருகோணமலை.
04. கேக்கே - டீன், பழைய சந்தை, ஏறாவூர்.
05. திரு.செ.சீவரட்னம், திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை.
06. ஜெ.சண்முகராஜா, அழுத்மாவத்தை வீதி, கொழும்பு - 15.
07. எம்.சி.கலீல், ஹனிபா வீதி, கல்முனை - 05.
08. எத்.கே.முஸ்னா, மத்திய வீதி, மருதமுனை - 03.
09. செ.ஜெயச்சந்திரராசா, இராசேந்திரம் குளம், வவுனியா.
10. ஹுமைறா முஸம்மில், கொலனி, திவுரும்பொல.

## குறுக்கெழத்துப் போட்டி 27

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ |
| 5 | ■ | 6 | ■ | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | ■ | ■ | 14 | ■ |
| ■ | ■ | 15 | ■ | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 |

**இடமிருந்து வலம்**

1. இந்த அதிசய மிருகம் அவுஸ்திரேலியாவுக்கே சொந்தம்.
8. தன்மானம் உள்ளவர்களை இம் மிருகத்திற்கு ஒப்பிடுவார்கள் (குழம்பியுள்ளது)
17. ஔவையார் வழங்கிய பொக்கிசத்தில் ஒன்று.

**மேலிருந்து கீழ்**

1. கொல்லனுக்கும் பொருந்தும் பன்றிக்கும் பொருந்தும்.
3. பெண் (குழம்பியுள்ளது)
7. போதை தரும் (தலைகீழாக உள்ளது)
11. காற்று
15. அரச மரம்
16. மேல் வீடு.

**குறுக்கெழுத்துப் போட்டி 25 விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 தொ | 2 லை | 3 ம | 4 ட | 5 ல் |
| 6 டு | ■ | 7 ம் | ■ | 8 ன |
| 9 வா | ■ | 10 ன | 11 வ | 12 க |
| 13 ய் | 14 ர் | 15 யா | 16 செ | ■ |
| ■ | 17 லூ | ■ | 18 றி | 19 பொ |
| 20 வி | 21 வே | 22 க் | ■ | 23 டி |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி **23.07.2003**க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி;

**குறுக்கெழுத்துப் போட்டி இல-27**
**தினமுரசு வாரமலர், த.பெ. இல. - 1772, கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக்கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250/= ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் தினமுரசில் பிரசுரமாகும்.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

### எந்தையும் தாயும்

அவர்தான் இன்று திரையுலகத்தில் 'ஆனாருனா' என்று செல்லமாக அழைக்கப்படும் புகழ் வாய்ந்த புகைப்படக் கலைஞர் திரு.அருணாசலம். அன்றே எனக்கிருந்த தமிழார்வத்திற்கு இன்றளவும் இவர்தான் சாட்சியாக நிற்கிறார்.



"ஆடையிலே எனை மணந்த மணவாளா" என்று வள்ளலார் பாடுகிறார். 'ஆடையிலே' என்றால் விளையாடையிலே, விளையாட்டுப் பருவத்திலே என்று பொருள். அந்தப் பருவத்திலேயே தன்னை ஆண்டவன் ஆட்கொண்டான் என்று வள்ளலார் வாக்கு மூலம் தருகிறார்.

என் விளையாட்டுப் பருவத்தில் தான் என்னையும் வண்ணத் தமிழ் வசீகரித்தது. உடனிருந்த நண்பர்களும் என்னுடைய இந்தத் தமிழ்க் காதலை ஊக்குவித்தார்கள்.

**ஊக்கவிக்க ஆளிருந்தால்**
**ஊக்கு விற்கும் ஆள் கூடத்**
**தேக்கு விற்பான்....**

என்று பிறிதொரு காலத்தில் நானொரு பாட்டு எழுதியிருக்கிறேன். என் முத்தமிழ் ஆர்வத்தை முளையிலேயே கிள்ளிவிடாமல், அதற்கு நீருற்றி வளர்த்த அந்த நல்ல நண்பர்களை நான் நினைக்காத நாளில்லை.

தமிழார்வத்திற்கு முன்னதாக எனக்கு இன்னொரு ஆர்வம் இருந்தது. அது பற்றி நான் முன்னமேயே சொல்லியிருக்க வேண்டும். விடுபட்டுவிட்டது. எட்டாம் வகுப்பு படிக்கும்போதே, நான் ஓவியங்கள் வரையத் தலைப்பட்டேன். எவரைப் பார்த்தாலும் அவரைப் போலவே படம் வரையும் ஆற்றல் என்னுள் இயல்பாக ஏற்பட்டிருந்தது. புகழ்வாய்ந்த ஓவியர்களான மணியம், சந்திரா இவர்களது படங்களைக் கல்கி பத்திரிகையில் கண்டு, நான் பித்தாகிப் போன நாட்கள் உண்டு. அ∴தே போல், ஆனந்த விகடனில் பணிபுரிந்த மாலி எனும் மகத்தான ஓவியன் மேல் எனக்கு மாளாக் காதல்.

நான் சின்னச் சின்னச் சித்திரங்கள் வரையும்போதெல்லாம், பாபு எனும் என்னுடைய பள்ளித் தோழன் பக்கத்திலிருந்து பரவசப்படுவான். அவன் இப்போது கல்கத்தாவில் இருக்கிறான். இருப்பினும் என்றென்றும் நான் அவனை மறக்க இயலாதவாறு அவன் ஒரு காரியத்தைச் செய்து வைத்தான்.

மாலியைப் போல், நான் ஒரு சிறந்த சித்திரக்காரனாக விளங்க வேண்டும் என்று ஆசைப்பட்டு அவன் தான் எனக்கு வாலி என்று பெயர் சூட்டினான்.

அதன் பிறகு, எங்கள் ஊரில் உள்ள ஆட்டுக்குட்டி கூட என்னை வாலி என்று அழைக்கத் தொடங்கியது. பள்ளிக்கூட மாணவர்கள் இடையேயும் இந்தப் பெயர் பரவிப்போயிற்று.

தேசிகர் என்றொரு தமிழ் வாத்தியார். நான் வரைந்த பாரதியார் படத்தை வாங்கிப் பார்த்தார். அதன் கீழே, நான் வாலி என்று கையொப்பமிட்டிருந்தேன். படத்தைப் பாராட்டிவிட்டு அவர் எகத்தாளமாக இன்னொன்றையும் சொன்னார்.

"டேய்! ரங்கராஜ்!"

என் இயற்பெயர் இதுதான்.

"உனக்கு வால் இல்லையேடா! அப்புறம் எப்படி நீ வாலின்னு பேர் வெச்சுக்கிட்டே?"

அவர் இப்படிக் கேட்டதும் சுற்றி நின்ற மாணவர்கள் 'கொல்' லெனச் சிரித்துவிட்டார்கள்.

மறுநாள் அவரைச் சந்தித்து ஒரு துண்டுக் காகிதத்தை நீட்டினேன். வாங்கிப் படித்தார். அதில் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தேன் :

**"வாலில்லை என்பதனால்**
**வாலியாகக் கூடாதா?**
**காலில்லை என்பதனால்**
**கடிகாரம் ஓடாதா?"**

எழுதியதைப் படித்துவிட்டு என் தலையில் குட்டு வைப்பார் என்று எதிர்பார்த்தேன், மாறாக, என் முதுகில் ஒரு ஷொட்டு வைத்தார்!

'வாலி' என்று பெயர் வைத்துக் கொண்டது குறித்து, நான் பல்வேறு நபர்களிடம் தன்னிலை விளக்கம் தர வேண்டியிருந்தது.

### கல்கி வந்தார்

சிரபுஞ்சியில் இருப்பவனுக்கு அடைமழையை யாரும் அடையாளம் காட்ட வேண்டியதில்லை. அது அவனைத் தினமும் தெப்பமாக்கிக்கொண்டிருக்கிறது. அ∴தே போல் ஸ்ரீரங்கத்திலிருப்பவனுக்கு, பசுந்தமிழை யாரும் பரிச்சயப்படுத்தி வைக்க வேண்டிய பிரமேயமே இல்லை. உச்சந்தலையில் பன்னிரண்டு ஆழ்வார்களையும் உட்கார்த்தி வைத்துக்கொண்டு ஊர்வலம் வரும் ஊர் அது.

தாழங்குடையும், தாமிரச் செம்பும் தாங்கி, வீதிக்கு வீதி உஞ்சவிருத்தி எடுத்து வரும் வேதியர் பெருமக்களின் அன்றாட அனுசந்தானமே ஆழ்வார்களின் பாசுரங்கள்தாம். வடமொழிக் கலப்பில்லாத, சுத்தசுயம் பிரகாசமான பச்சைத்தமிழ்.

மரவட்டையாய் சுருண்டு, மாப்பிள்ளைத் திண்ணையில் படுத்திருக்கும் எவனையும் காலை வெயில் கை தொட்டு எழுப்புவதற்கு முன்னதாகவே, உஞ்சவிருத்தி எடுப்போரின் தமிழ் மறை உசுப்பிவிடும். காதுக் குரும்பையைப் பொத்துக்கொண்டு கன்னித் தமிழ் செவி வழியே புகுந்து சிந்தையில் இறங்கி, இரத்த நாளங்களில் நர்த்தனமாடும்.

இது, இன்று நேற்று ஏற்பட்டதல்ல. முந்தைய நூற்றாண்டுகளிலிருந்து இந்த நூற்றாண்டு வரை, சங்கிலித் தொடராக வருகின்ற சமாச்சாரம்.

போன நூற்றாண்டுத் தமிழுக்கு பக்தியை மட்டுமே பாட வந்தது. இந்த நூற்றாண்டில்தான் அது சமூகப் பிரக்ஞையைத் தன் சந்தங்களில் வெளிப்படுத்துகிறது என்றெல்லாம் விதண்டாவாதம் செய்யும் விடாக்கண்டர்களுக்கு, பட்டுக்கோட்டையாரின் படப் பாடலைத்தான் பதிலாகச் சொல்ல வேண்டியிருக்கிறது.

**ஆறறிவில் ஓரறிவு அவுட்டு -**
**இருக்கும்**
**அஞ்சறிவும் மிஞ்சுமான்ன அதுவும்**
**கூட டவுட்டு!**

பக்தி இலக்கியங்கள், மொத்த மனித குலத்தையே மேம்படுத்தப் பாடப்பட்டவை. தனியொருவன் தனக்கு மட்டுமே வைகுந்தமோ, கைலாயமோ வேண்டுமென்று ஆண்டவனுக்கு அனுப்பிய அப்ளிகேஷன்கள் அல்ல.

மனிதர்களை மொத்தமாகக் கட்டி வைத்திருக்கும் மூட்டைக்குப் பெயர் தானே சமூகம். "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்று பாடினானே திருஞானசம்பந்தன், அவன் என்ன தன் மச்சானுக்கும் மாமனுக்குமாகவா அப்படிச் சொன்னான்? உங்களுக்கும் எனக்கும் சேர்த்து ஓதப்பட்ட ஒழுக்க நெறிகள்தாமே அவை? பக்தியினால் இந்தப் பாரினில் எய்தும் மேன்மைகளைப் பட்டியல் போட்டுக் காட்டினானே பாரதி. அவன் சமூகப் பிரக்ஞையுள்ள கவிஞனாக ஏற்கப்படவில்லையா என்ன?

"ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்!" என்று பாரதி பாடியதைக் கேட்கும்போது இந்தப் பகுத்தறிவாளர்களுக்கு வாயெல்லாம் பல்லாகிறது.

"தெய்வம் உண்மையென்று தானறிதல் வேண்டும்." என்று பார்தி சொல்லும் போது மட்டும் பாகற்காயாகக் கசக்கிறது.

கம்பராமாயணத்தைக் கையால் தொடுவதே மலத்தை மிதிப்பதற்குச் சமானம் என்றெல்லாம் மக்களின் ஒரு பிரிவினருக்கு மூளைச் சலவை செய்யப்பட்டிருக்கிறது. அது நம்முடைய தமிழ்ச் செல்வம் என்று இவர்களுக்கெல்லாம் சொல்லிப் புரிய வைக்கத்தான் புண்ணியவான் கம்பன் அடிப்பொடிகள், கம்பன் கழகங்களைத் துவக்கினார். இதற்காகவே நாமெல்லாம் ஒரு முறை காரைக்குடியை நோக்கிக் கையெடுத்துக் கும்பிடலாம்.

கம்பராமாயணம் பக்தி இலக்கியமாக இருந்தாலும், அது தமிழன்னைக்கு அணிவிக்கப்பட்ட தகத்தகாயமான இன்னொரு ஆபரணம் என்கின்ற எண்ணம் பாவேந்தர் பாரதிதாசனாருக்கு இருந்ததால்தான், கம்பனின் பாடல்களில் சிலவற்றை இடைச்செருகல் என்று ரசிகமணி டி.கே.சி. உருவியபொழுது புதுவைக்கவிஞருக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. பொன்னாடியானைக் கேளுங்கள் இன்னமும் சொல்லுவார்.

ஸ்ரீரங்கத்தில் நடந்த ஒரு வைணவ




மகாநாட்டில், மிகச் சிறந்த வைணவரும், முத்தமிழ் வித்தகருமான ஆசிரியர் பெருந்தகை அமரர் திரு.அய்யம் பெருமாள் கோனார் அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா?

"நூலாயிரம் கற்றவனும், அதற்கு மேலாயிரம் கற்றவனும், நாலாயிரம் கற்றவன் போல் ஆவானோ?"


மேற்கண்ட சொற்பொழிவைத் திரு.கோனார் அவர்கள் பேசக் கேட்டுத்தான், நான் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்று திவ்வியப் பிரபந்தத்தை மனப் பாடம் செய்ய ஆரம்பித்தேன். அப்போது எனக்கு வயது பதினாறு.

உமறுப் புலவரையும் வீரமாமுனிவரையும், கிறித்துவக் கம்பர் என்று வணங்கப்பெறும் கிருஷ்ணப்பிள்ளையையும் நான் ஆழ்வார்களுக்கு இணையாகவே என் நெஞ்சில் வைத்து ஆராதிக்கிறேன். மதங்களைத் தாண்டி நெறிப்படுத்தும் வலிமை தமிழுக்கு உண்டு என்பதை அவர்களால்தான் இந்த உலகம் கற்க இயலும்.

எனக்கு என்னுடைய தமிழ்தான் முக்கியம். அது எந்த சமயச் சட்டையை அணிந்து வருகிறது என்பதையெல்லாம் நான் கவனத்தில் கொள்வதில்லை. ஒரு மராட்டிய எழுத்தாளன், தமிழ் நாட்டு மக்களின் நெஞ்சங்களை நாற்பதாண்டுகளுக்கு முன்னதாகவே திருடிக்கொண்டுவிட்டான். 'இருமன'மும் 'வெறுங்கோயி'லும் இன்னமும் எத்தனையோ பேர்களின் இதயத்தில் பச்சை குத்தப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். ஆம், காண்டேகரைத்தான் சொல்லுகிறேன்.

தொடர்ந்து வரும்....

## Sick Jokes



சிரிக்க வைப்பதுடன் சற்று பயமுறுத்தும் அதிர்ச்சியூட்டும் இரகசியங்கள் இப்போது மேற்கு நாடுகளின் சிறுவர் ப்த்திரிகைகளில் வெளிவரத் தொடங்கி உள்ளன. இவைகளுக்கு Sick Jokes என்று பெயர். இதற்கு ஓர் உதாரணம்..

**ஓர் அறிவிப்பு**

எலிகளுக்கு விட்டமின் இன்ஜெக்ஸன் கொடுக்கும் பரிசோதனையை இத்துடன் நிறுத்தி விடத் தீர்மானித்துள்ளோம்.

## உங்களிடம் ஒரு கேள்வி

ஒரு கணவன் மனைவியின் விருப்பத்திற்கு மாறாக அவருடன் கூடினால் அது பாலியல் வல்லுறவாகுமா?

கடந்த ஆண்டு இக் கேள்வி உலகையே அதிகம் ஆக்கிரமித்தது. இதற்கு இன்னமும் விடைதான் இல்லை. நீதிமன்றம் வரை சென்ற இவ் விடயத்தை நீங்களும் வாசித்துப் பாருங்கள்.

பாபிட் என்ற ஒரு இளம் பெண், அவள் கணவன் நன்றாகக் குடித்திருந்த நிலையில் அவளைப் பலவந்தப்படுத்தி தன் இச்சைக்குள்ளாக்கினான் என்ற காரணத்திற்காக அவனுடைய பாலியல் வல்லுறவு ஆயுதத்தை துணிந்து வெட்டியெறிந்துவிட்டாள். பாதிக்கப்பட்ட கணவன் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்துள்ளான். அவள் கோர்ட்டில் சொன்ன பதில் இதுதான். "அவன் என்னை Rape செய்ய முயன்றான். என்னை அவனிடமிருந்து பாதுகாப்பதற்கு எனக்கு வேறு ஒரு வழியும் இருக்கவில்லை" என்பதே அது.

இச் சம்பவம் அமெரிக்காவில் நடந்தபோது அமெரிக்க ஊடகங்கள்




சுறுசுறுப்படைந்தன. அப்போது அமெரிக்க லாஸ்ஏஞ்சலில் பெரும் பூகம்பமே நடந்தது. பூகம்பச் செய்தியை பின்னுக்குத் தள்ளிய முதல் செய்தியாக Rape செய்தி பரபரப்பாக இருந்தது. பல தொலைக்காட்சிகள் இது தொடர்பாக பல்வேறு விவாதங்களை நடாத்தியது. பெருபான்மையான அமெரிக்கர்களின் முடிவு என்ன தெரியுமா? "ஒரு பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக ஒரு ஆண் அவருடன் கூடினால் அது Rape தான்" கருத்துச் சொன்னவர்களில் ஆண்களும் அடங்கும்.

**எம்.ஜி.ஆர்.**

ஒரு நடிகர், ஒரு அரசியல்வாதி என்றுதான் நாம் நம்பிக்கொண்டிருக்கிறோம். அத்துடன் அவர் ஒரு இயக்குநரும் கூட.

அவர் ஒரு சுப்பர் ஸ்டார் நடிகரானதன் பின் தான் நடிக்கும் அனைத்துப் படங்களிலும் தானே நிழல் இயக்குநராக இருக்க ஒத்துக்கொண்டால்தான்



படத்திலேயே நடிப்பேன் என்பாராம்.

48ஆம் ஆண்டு 'ராஜகுமாரியில்' கதாநாயகனாக அறிமுகமான எம்.ஜி.ஆர். 'மருதநாட்டு இளவரசியில்' துவங்கி தன்னையொரு சாகச நாயகனாக நிலைநிறுத்த முயன்றார். இந்த சாகச நாயகன் புகழ்தான் 1977இல் இருந்து மரணிக்கும் வரை எம்.ஜி.ஆரை தோற்கடிக்கவே முடியாத முதலமைச்சராக்கியது.

எம்.ஜி.ஆருக்கு முன் இருந்தவர்களோ, பின் வந்தவர்களோ சினிமாவை இப்படிப் பயன்படுத்தவில்லை. இப்போது ரஜினி அம் முயற்சியில் இறங்கி இருக்கிறார். இந்த முயற்சியில் ரஜினி தோற்றுப்போய்விடுவார் என்பதே பலரது அபிப்பிராயமாக உள்ளது. ஏனெனில் அது மக்கள் திலகம் எம்.ஜி.ஆரால் மட்டுமே சாதிக்க முடிந்தது, முடியும் என்பதே உண்மையாகும். ரஜினிக்கு ஏனிந்த முயற்சி?

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

# சிந்தித்துப் பார்க்க...

## என் வாழ்விலேயே மிக அதிர்ச்சியான விஷயத்தை இங்கேதான் சந்தித்தேன்

மருத்துவமனையிலேயே சுவர்களில் எங்கே பார்த்தாலும் ஒரு எச்சரிக்கை வாசகம் எழுதப்பட்டிருந்தது : இங்கே குழந்தை திருடர்கள் நடமாடுகிறார்கள். குழந்தைகளை தெரியாத நபர்களிடம் தர வேண்டாம். கவனமாக இருங்கள். திரும்பின இடமெல்லாம் இதே வாசகங்கள். ஆச்சரியமும், அதிர்ச்சியுமாக நண்பரிடம் கேட்டேன். "இவ்வளவு சின்னஞ் சிறிய சிசுக்களை திருடிக் கொண்டு போய் என்ன செய்வார்கள்? தொப்புள் கொடி அறுக்கப்பட்ட காயம் கூட ஆறாத நிலையில் இந்தச் சிசுக்களைத் தூக்கிக் கொண்டு போய் என்னதான் செய்வார்கள்?"

"பிச்சையெடுப்பார்கள்" என்றார் நண்பர். தெருக்களிலும், சிக்னல்களிலும் நீங்கள் பார்த்திருக்கலாம். மிகச் சமீபத்தில் பிறந்த குழந்தையைக் கைகளில் வைத்துக்கொண்டு பரிதாபமான முகத்துடன் பிச்சையெடுக்கும் பெண்களை. அவர்கள் கையிலுள்ள குழந்தைகள் இப்படி மருத்துவமனைகளில் திருடப்பட்டவைதான். இந்தத் திருட்டு அதிக அளவில் நடந்துகொண்டிருக்கிறது. சென்ற வாரம் கூட ஒரு குழந்தை திருட்டுப்போய்விட்டதாகச் சொன்னார் நண்பர்.

மூன்று வயது வரை கைகளில் ஏந்தி, தோளில் போட்டு பிச்சையெடுத்தால் போதும், அதற்குப் பிறகு அந்தக் குழந்தையே தெருவில் இறங்கிவிடும், மிகத் தேர்ந்த தொழில் நேர்த்தியுடன்.

'இந் நாட்டில் வாழக் கூடாது. ஃபிரான்ஸில் செட்டில் ஆகிவிட வேண்டும்' என்று நான் நினைப்பதன் காரணம் இது போன்ற சம்பவங்கள்தான்.

குரூரத்திற்கும் ஒரு எல்லை இல்லையா? ஒரு பெண்ணின் வயிற்றிலிருந்து இறங்கி பூமியில் விழும் குழந்தைக்கு இவ்வளவு குரூரமான தண்டனையா? ஏன்? எதற்கு? நாம் மனிதர்கள்தானா? மிருகங்களிடம் கூட இவ்வளவு குரூரத்தைக் காண முடியாதே? இதை நாம் எப்படி சகித்துக்கொண்டிருக்கிறோம்? நாம் கும்பிடும் கடவுள்கள் இதை எப்படி சகித்துக் கொண்டிருக்கின்றார்கள்? நாம் படிக்கும் தத்துவங்கள் எதற்காக?

எதற்குமே எனக்குப் பதில் தெரியவில்லை. இரத்தக் காட்டேரியிடம் அறை வாங்கியது போல் அந்த மருத்துவமனையை விட்டு வெளியேறினேன்.

சாருநிவேதிதாவின் 'கோணல் பக்கங்கள்' நூலிலிருந்து :

# இலக்கிய நயம்

### தருவது முழடில்யன்

வீட்டில் எல்லோரும் நித்திரையான பிறகு மெல்ல வெளியே வந்தாள் சேந்தினி.

குளிர்ந்த மலைக்காற்று கூர்மையான உடலை ஊடுருவியது. வெளியே இரவு முற்றாக சில்லிட்டுப் பரவியிருந்தது. நிலவும் நட்சத்திரங்களும் அற்ற பனிக்காலத்து இரவு எல்லையற்ற இரகசியம் போல் சூழ்ந்து கிடந்தது. இருளைத் தவிர வேறொன்றும் தெரியவில்லை.

கைகளை நெஞ்சுக்குக் குறுக்காகக் கட்டிக்கொண்டு ஆழமாக மூச்சை உள்ளிழுத்தாள் சேந்தினி. பனிக்குளிரை நெஞ்சின் அடிவரை உணர்ந்தாள்.

பின்புற படலையைக் கடந்து வெளியே வந்தாள். கண்கள் இருட்டுக்குப் பழகி விட்டிருந்தன. சுற்றுப்புறம் துலங்க ஆரம்பித்தது.

தூரத்தே கருங்குன்றின் அசைவாக அவன் வருகை தெரிந்தது. சற்று அண்மித்ததும் பருத்த அவன் உடல், சிறிய தலையுடைய யானை ஒன்று வருவதைப் போல உணர்த்தியது. மேலே பாகனோ, அருகிலே சங்கிலியில் பிணைத்துப் பிடித்து வருபவனோ இல்லாமல் தனித்து வரும் பெருங் களிறைப் போல அசைந்து வந்தான் வாதுலன்.

அவன் ஏமாற்றிவிடவில்லை என்று கண்டதும், சேந்தினி உள்ளம் மட்டற்ற மகிழ்ச்சியில் துள்ளியது. காணாமற் தொலைத்துவிட்ட தங்க ஆபரணமொன்றை மீண்டும் கண்டெடுத்தால். எத்தகைய மகிழ்ச்சி உண்டாகுமோ அவ்வாறான உவகையுடன் அவன் வரவு கண்டு பொங்கினாள் சேந்தினி.

வாதுலன் வரும்போதே அவள் காத்து நிற்பதைக் கண்டுகொண்டான். அந்தக் குறையிருட்டில் அவள் முகத்தைத் தெளிவாகப் பார்க்க முடியாதுவிட்டாலும், அந்தத் தெளிவற்ற தன்மையில் தெரிந்த அவள் அழகமைப்பில் லயித்தான். இருட்டில் மங்கலாகத் தெரிந்ததாலேயே மர்மம் கலந்திருந்ததும், அந்த மர்மங்களே தன்னைப் பெரிதும் அலைக்கழிக்கப் போதுமானதாக இருந்ததையும் உணர்ந்தான் வாதுலன். மெல்லிய ஒளித்திரைக்குப் பின்னால் தெரியும் மங்கலான அழகுப் பெண்ணுருவாய்த் தெரிந்தாள் சேந்தினி. மர்மம்தான் அதிக ஆசையைத் தூண்டுகிறது. இது இயற்கையின் விசித்திரம்தான் என்று நினைத்துக்கொண்டான் வாதுலன். பனியில் நடுங்கிய அவனுடல் அவளை நோக்கி விரைந்து பாய்ந்தது. அவளை மார்புற அணைத்து உயரத் தூக்கினான். அப்படியே அவளைச் சுமந்தபடி இருளில் நடந்தான்.

அவனது மார்புடன் ஒட்டிக்கொண்ட பறவைக் குஞ்சு போல மனம் படபடவென அடித்துக்கொள்ள அந்தரத்தில் அவனுடன் மிதந்து சென்றாள் சேந்தினி.

வாதுலனுடைய எந்த இஷ்டத்துக்கும் வளையக் கூடிய நிலைமையில் அவள் உடல் உணர்ச்சிகளை உருவாக்கி வைத்திருந்தது. உள்ளூர அவள் உணர்ச்சிகள் இரைந்து சத்தமிட்டன.

சற்றுத் தொலைவிலிருந்த மரக்குற்றியொன்றில் சென்று அமர்ந்தான் வாதுலன். சேந்தினியை மடியில் வாகாகச் சாய்த்துக்கொண்டான்.

அவன் முரட்டுக் கால்களில் மீது விழிமூடிக் கிடந்தாள் சேந்தினி.

அவள் கழுத்து வழியாக நிலம் நோக்கிச் சரிந்துவிட்ட மணி ஆரத்தை வலது கையால் எடுத்துப் பழைய இடத்தில் வைக்க அவன் முயன்றபோது, உண்மையில் அவன் தொட்டுச் சரிசெய்ய முயன்றது ஆரத்தைத்தானா என்ற சம்சயமும், அந்த சம்சயத்தால் ஏற்பட்ட இன்ப வேதனையும் அவளைத் திணற

## அவள் பூவுடலில் எத்தனை இடங்கள் இம்சைப்பட்டன



அடித்துக்கொண்டிருந்தன. அந்தத் திணறலிலிருந்து சமாளித்துக்கொள்ள அவள் செவ்விய இதழ்கள் சிறிது குவிந்து திறந்து, "அங்கே எதற்கு ஆராய்ச்சி?" என்று மெல்லச் சொற்களை உதிர்த்தன. "சரி சரி" என்று பணிவுடன் ஒப்புக்கொண்ட வாதுலன் கைகளை அங்கிருந்து எடுத்து, அவள் காலைப் பிடித்துவிட ஆரம்பித்தான்.

திகைப்படைந்த சேந்தினி வெடுக்கென்று காலை இழுத்துவிட முயல, அவனோ அவள் காலை இறுக்கிப் பிடித்துக்கொண்டான்.

"அழகாயிருக்கிறது!"

"ஆமாம்."

"என்ன ஆமாம்?" அவள் கேள்வியில் கோபம் வெடித்தது.

"உன் கால்கள் அழகாய்த்தானிருக்கின்றன."

"அடிமைகள்தான் காலைப் பிடிப்பார்கள்"

"சரியாகச் சொன்னாய் சேந்தா!"

"என்ன சரியாகச் சொன்னேன்?"

"அடிமைகள்தான் காலைப் பிடிப்பார்கள் என்று சொன்னாயல்லவா?"

"ம்"

"அடிமைதான் இப்பொழுதும் காலைப் பிடிக்கிறான்."

"ச்சீ... விடுங்கள்...." மேல் ஸ்தாயியில் மிக மிருதுவாகச் சுண்டப்பட்ட வீணையின் நாதம் போல வெளிவந்தது அவள் மறுப்பு.

அந்தத் தேன் குரலால் போதையேறிய வாதுலன், தனது மடியில் புரண்டுகிடந்த அவள் பூவுடல் மீது தலைசாய்த்துப் படுத்தான். அவள் தலையில் சூடியிருந்த பெருமுல்லைச் சரம், அவள் முதுகுப்புறம் முகத்தை வைத்திருந்த அவனுள் நறுமணத்தை ஏற்றியது. நாசி முகர்ந்த அந்த நறுமணம் அவனது மற்ற அவயவங்களையும் இயக்கியது. அவன் தலை மேலிருந்து கீழும் கீழிலிருந்து மேலும் பயணம் செய்து எழில்களில் புரண்டு புரண்டு நீங்கியது.

அவள் பூவுடலில் எத்தனை இடங்கள் இம்சைப்பட்டன என்று அவளுக்கும் கணக்குத் தெரியவில்லை! எத்தனை நேரம் அப் பூவுடலில் புதைந்து கிடந்தோம் என்ற நினைவு வாதுலனுக்கும் இருக்கவில்லை! அவர்கள் இருவருக்குமிடையில் நசுங்கி வெளியேறிய காற்றுடன் தயக்கங்களும், பண்பாடு சுமத்திய தடைகளும், வெட்கமும் சேர்ந்து வெளியேறியது.

கெடுத்துப்படு நன்கலம்
எடுத்துக் கொண் டாங்கு
நன்மார்பு அடைய முயங்கி
மென்மெலக் கண்டனம்
வருகம் சென்மோ தோழி
கீழும் மேலும் காப்போர் நீத்த
வறுந்தலைப் பெருங்களிறு
போலத் தமியன் வந்தோன்
பனியலை நிலையே!

(நற்றிணை : 182 : 5-10)

# சிந்தியா

பதில்கள்

யாரைப் பார்த்தாவது நீங்கள் பொறாமைப்பட்டதுண்டா?

ஆர்.அழகராஜ், பலாங்கொடை.

தேடி நிறைய வாசிப்பவர்களைப் பார்த்துத்தான் எனக்கு எப்போதுமே பொறாமை! சமீபத்தில் சாருநிவேதிதாவின் "கோணல் பக்கங்கள்" படித்தேன். ஓஷோவைப் போலவே கொஞ்சம் தப்பாக தமிழில் புரிந்துகொள்ளப்பட்ட நபர் சாரு. அவரது குழப்படிகளுக்கு அப்பால் அசுர வாசிப்பும், பார்த்துத் தள்ளும், பன்னாட்டுத் திரைப்படங்களும், அவை பற்றியெல்லாம் அவர் சுவாரஷ்யமாய்ச் சொல்லும் விதமும் பொறாமைகொள்ளும்படி உள்ளன. இன்று, அசோகமித்திரனுக்கு அடுத்தபடியாக நான் வாய்விட்டுச் சிரித்துக் கொண்டே வாசிக்கும்படியாகவும், யோசிக்கும்படியாகவும் எழுதும் கட்டுரையாளர் இவர்!

*●*

தான் இரக்கமே அற்ற கொடியவனாக நடந்துகொண்டிருப்பதாகவும், பிறருக்குத் துன்பம் தருவதாகவே அமைந்துவிட்ட தனது வாழ்க்கையை முடித்துக்கொண்டு சாகவே விரும்புவதாகவும் உலக அதிபார குத்துச்சண்டை வீரர் மைக் டைசன் தெரிவித்திருக்கிறாரே, பார்த்தீர்களா?

எம்.வினோஜா, கொழும்பு - 13.

தன்னை உணர்ந்துகொண்டால் திருந்துவது சிரமமில்லை. டைசன் விரக்தியை விட்டுவிடலாம். பிறர் காதுகளும் பத்திரமாக இருக்கும்!

*●*

இன்றைய நம் நாட்டுக் கவிஞர்கள், எழுத்தாளர்களில் உங்களுக்குப் பிடித்தவர்கள் பற்றி?

ஏ.எல்.மொஹமட் நவாஸ், மீராவோடை-04.

ஹிட்லர் காலத்திய பெரும்பாலான ஜெர்மன் எழுத்தாளர்களைப் போலவே இவர்களும் நம் எதிர்காலச் சந்ததியினரால் மிகுந்த வெட்கத்தோடு நினைவிலிருந்து ஒதுக்கப்படுவார்கள்.

*●*

நீங்கள் யாருக்காவது அறிவுரை சொல்லி, அதனால் அவர் பயனடைந்த உதாரணம் ஏதும் உண்டா?

மூ.புனிதன், கோணக்கலை.

எங்கு வருகிறீர்கள் என்று புரிகிறது. இப்போது ஒரு அறிவுரை சொல்லப் போகிறேன் என்று நினைத்துக்கொண்டு நானும் எதையும் சொல்வதில்லை. அறிவுரை என்பதே மற்றவர்களை ஆக்கிரமிப்பதற்கும், அவர்களை நமக்கு அடங்குவதற்குமாகச் சொல்லப்படுபவைதான் என்பதே என் எண்ணம். ஆனால், சுருளி ராஜன் ஒரு வில்லுப்பாட்டிலே சொல்வாரே, "நமக்குத் தெரியாதது எதுவொ அதில தான் நாம முன்னுக்கு வர முடியும்...." அது போல நம்மால முடியாத விஷயங்களை மற்றவர்களுக்கு அறிவுரையாகச் சொல்ல உண்டாகும் உந்துதலை பல சமயங்களிலும் அடக்க முடிவதில்லை.

*●*

நம்முடைய பாவங்களை எல்லாம் கடவுள் மன்னிக்க வேண்டுமானால், நாம் என்ன செய்ய வேண்டும்?

கே.வசந்தன், அக்கரைப்பற்று-07.

முதலில் பாவங்களைச் செய்ய வேண்டும்... அப்போதுதானே அவரால் மன்னிக்க முடியும்! (இதையெல்லாம் அறிவுரையாக எடுத்துக் கொண்டுவிடாதீர்கள்)

*●*

தங்களுக்குப் பிடித்த நகைச்சுவை நடிகர்?

காத்தான்குடி றஊப், மூதூர்.

சமீபத்தில் தொலைக்காட்சியில் 'மாறன்' படம் பார்த்தேன். சி.பி.ஐ அதிகாரியாக கலக்கிய வி.எம்.சி.ஹனீபாவின் சிறுசிறு அசைவுகளிலும் உதிர்ந்த நகைச்சுவை அற்புதம்! கதையோடு ஒட்டிய இயல்பான நகைச்சுவைக்கு மலையாளிகள்தான்.... என்பதற்கு மற்றொரு உதாரணம்.

*●*

வாரம் தோறும் முரசையே காத்திருப்பேன். இசைஞானி இளைய ராஜாவின் முகவரியைத் தாருங்கள்?

பி.விஜி, மூதூர்.

இல 38, முருகேசன் சாலை, சென்னை 600 017. (மாஸ்ட்ரோ இளையராஜா, சென்னை என்றால் கூட அவருக்கே கடிதம் போய்விடுமே!)

*●*

இன்று வெற்றி நடிகையாகக் கலக்கிக்கொண்டிருக்கும் எங்கள் கிரண் பற்றி சிந்தியா எதுவும் சொல்லவில்லையே?

பிறின்ஸ், கியுடெக்.

ஆமாம், சென்ற வார முரசில் நடுப் பக்கப் படத்தைப் பார்த்துப் பயந்து போயிருக்கிறேன்!



மருமகள் தொ.நாடகத்தைப் பற்றிய சிறப்பு நிகழ்ச்சி பார்த்தீர்களா, எப்படி?

எம்.நளீம், முறுத்தலாவை.

வேறெங்கோ ஒரு சந்தர்ப்பத்தில் யாரோ ஒருத்தர் பயன்படுத்திய ஒரு வார்த்தையை இங்கு பதிலாய்த் தருவதற்கு மன்னியுங்கள். சட்டென்று இதுதான் ஞாபகத்தில் வந்தது :

"தோசையின்ர திறத்தில ஆட்டுக்கல், அதுக்கொரு மாலை."

*●*

நாட்டின் மீதோ, இனத்தின் மீதோ, மக்களின் மீதோ அன்பு கொண்டு இயங்குவதாகச் சொல்பவர்களால் எப்படி குரூரமாகக் கொலைகள் செய்ய முடிகிறது?

யாழ்ப்பாணத்து ராஜன், ஜெர்மனி.

ஆச்சரியம்தான். ஆனால் புதிதல்ல. (அதுவும் உங்களுக்கு!) ஒரு நாஸி அதிகாரி இருந்தான். அவனுடைய இரண்டு கண்களில் ஒன்று செயற்கைக் கண். ஒரு கண்தான் இயற்கைக் கண். அவன் யூதக் கைதியிடம் கேட்டான். "என் இரண்டு கண்களில் எது செயற்கைக் கண்?" என்று. கைதி யோசிக்கவில்லை. சட்டென்று சொன்னான் "இடது கண்". "எப்படி சரியாகக் கண்டுபிடித்தாய்?" "அந்த இடது கண்ணில்தான் கொஞ்சமாவது உணர்ச்சி ஒட்டிக்கொண்டிருந்தது."

நாஸிகள் தீவிரமான இனப்பற்றும், நாட்டுப்பற்றும் உடையவர்கள்.

*●*

'லேசா லேசா' வில் திரிஷா எப்படி?

எம்.றிஸ்வான், கொழும்பு - 12.

பிரியதர்ஷன் போன்ற பிரபலமான இயக்குநர் கூட தமிழ்ப்படம் என்று வந்துவிட்டால், இப்படி செயற்கையான முடிவைத்தான் அமைத்தாக வேண்டும் என்று நெருக்கியவர்கள் யார்? இதுதான் படம் முடிவில் எனக்குத் தோன்றியது. இனி உங்கள் கேள்விக்கு வருகிறேன். திரிஷா என்ற இந்தப் பெண் ஒன்றும் பிரமாதமான அழகியில்லை. உடம்பு கூட மேலிருந்து கீழ் வரை ஒரேயளவாய்ச் செய்யப்பட்ட ஒரு ஒல்லித் தூண் போல கவர்ச்சியெதுவுமில்லாதது. ஆனாலும், சாமி மற்றும் இந்தப் படத்தின் பாடல்களை வானொலியில் கேட்கும் போதெல்லாம் ஞாபகத்தில் இந்தப் பெண் வந்து குதிப்பதைத் தவிர்க்க முடியவில்லை.

*●*

உயிரை விடப்போகும் மனிதன் இறுதி நேரத்தில் என்ன நினைப்பான்?


என்.பிரியா, வெலிமடை.

(இந்த வாரம் ஹிட்லர் வாரம்!) ஹிட்லர் தன் முன்னால் விறைப்பாக சல்யூட் அடித்தபடி நின்ற படைவீரர்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டான்.

"போர்க்களத்தில் உன்னருகே குண்டு வீழ்ந்து வெடிக்கும்போது நீ என்ன நினைத்துக் கொள்வாய்?

ஒரு படை வீரனின் பதில் : மகா தளபதியவர்களே, தாங்களும் என்னருகில் நிற்க வேண்டும்!"

# ‘நாங்களும் சினிமாவில் ஹீரோவாகிப் பார்க்கலாம்...’



பாலா-லைலா



கதிர்-ஸ்ரீதேவி



மணிரத்னம்-சிம்ரன்



சங்கர்-த்ரிஷா


சேரன் சூர்யா என்று இயக்குநர்கள் ஹீரோவாகும் சீசன் இது. படத்தில் இருக்கும் இந்தப் பிரபல டைரக்டர்களுக்கும் ஹீரோ ஆசை வந்தால் எப்படியிருக்கும்.

## இசை அல்பத்தில் பிரிட்னிக்கு வசை

இணையத்தளங்களிலும் மேற்குலக ஊடகங்களிலும் பிரிட்னி குறித்த செய்திகளுக்குப் பஞ்சமேயில்லை. கொஞ்ச நாட்களாகவே காதலரைப் பிரிந்த பிரிட்னி அனுபவித்த சோகங்களின் பதிவுகள் வெளியாகிக்கொண்டிருந்தன. பின்னர் பிரிட்னியின் முன்னாள் காதலரான ஜெஸ்டின் டிம்பர் லேக்யுடன் அவர் மீண்டும் ராசியாகிவிட்டதாக பேசப்பட்டது. ஆனால் அதனை எல்லாம் மறுத்துவிட்டார் பிரிட்னி.

“நான் எப்பொழுதும் அவர் மீது அன்பு வைத்திருக்கிறேன். அவர் என் முதல் காதலர். ஆனால் தொடர்ந்தும் ஜெஸ்டினின் பெயரைக் கேட்டதும் எனது உள்ளம் ஒரு கணம் அதிரும் நிலையில் நான் இருக்கப்போவதில்லை.” இப்படி அமைதியாகக் கூறுகிறார் பிரிட்னி.

“என்றோ ஒரு நாள் பிரிட்னியும் அவரது முன்னாள் காதலரும் இணைவார்கள்” என்று பிரிட்னியின் நெருங்கிய நண்பியான கிரிஸ்டினா எகியுல்லேரா கூறுகிறார்.



“அது ஒருபோதும் நடக்காது” என்பது பிரிட்னியின் பதில்.

இப்போது பிரிட்னி இன்னொரு புதிய கவலையில் இருக்கிறார். அவரது முன்னாள் காதலன் ஜெஸ்டின் புதிதாக வெளியிட்டிருக்கும் இசை அல்பம் ஒன்றில் பிரிட்னியைச் சாடுவது போல் பாடல் அமையப்பெற்றுள்ளது. தனது காதலி இன்னொருவனைக் காதலிப்பதால் மனமுடைந்து போன ஒருவரின் உணர்வாக ஜெஸ்டினின் பாடல் வரிகள் ஒலிக்கின்றன. இந்த அல்பத்தில் நடித்திருக்கும் பெண்ணும் கிட்டத்தட்ட பிரிட்னியைப் போலவே இருப்பது பிரிட்னியின் எரிச்சலை மேலும் கூட்டியிருக்கிறது.

இதற்கிடையில் பிரிட்னியும் தனது புதிய இசை அல்பம் ஒன்றை வெளியிடத் தயாராகி வருகிறார். ஆனால் தான் இப்படிச் செய்யப்போவதில்லை என்று அவர் கூறியிருக்கிறார்.

“புதிய அல்பத்தில் ஒரு பாடலையாவது நான் ஜெஸ்டினை நினைத்துப் பாடவில்லை. எனது தனிப்பட்ட பிரச்சினை மற்றவர்களுக்கு எதற்கு” என்கிறார்.

எப்படியென்றாலும் தனது காதலன் தான் வேறொருவரைக் காதலித்ததாக இசை அல்பம் மூலம் குற்றஞ்சாட்டியிருப்பது குறித்து பிரிட்னி வேதனையடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சில பெண்கள் ஏன் கல்யாணம் செய்துகொள்ளாமல் தனியாக வாழ்கிறார்கள்......?

1. நல்ல ஆண்கள், பார்க்கக் கண்றாவியாக இருக்கிறார்கள்.

2. கம்பீரமான ஆண்கள், நல்லவர்களாக இருப்பதில்லை.

3. கம்பீரமான, நல்ல ஆண்களுக்குப் பெண்களின் மேல் ஈர்ப்பு இருப்பதில்லை.

4. பெண்களின் மேல் ஈர்ப்பு உள்ள, நல்ல, கம்பீரமான ஆண்களுக்கு ஏற்கனவே திருமணமாகி இருக்கிறது.

5. கம்பீரமாக இல்லாவிட்டாலும் நல்ல மனிதனாக இருப்பவனிடம் பணம் இல்லை.



6. கம்பீரமாக இல்லாவிட்டாலும் நல்ல மனிதனாகவும் காசுள்ளவனாகவும் இருப்பவன், பெண்கள் பணத்துக்கு அலைகிறார்கள் என்று நினைக்கிறான்.


7. கம்பீரமாக இருந்து காசு இல்லாமல் இருப்பவனோ பெண்களிடம் பணத்தை மட்டுமே எதிர்பார்க்கிறான்.

8. கம்பீரமான, நல்லவன் அல்லாத, பெண்கள் பால் ஈர்ப்புள்ள ஆணுக்கு எவளைப் பார்த்தாலும் அழகாகத் தெரிவதில்லை.

9.பெண்களின் அழகை ஒப்புக்கொள்கிற, பெண்களின் மேல் ஈர்ப்புள்ள, நல்ல குணமுள்ள, காசு வைத்திருக்கிற ஆண்கள் கோழைகளாக இருக்கிறார்கள்.

10. கம்பீரமாக இருக்கிற, நல்ல குணம் படைத்த, காசு வைத்திருக்கிற, பெண்களின் மேல் ஈர்ப்பு உள்ள ஆண்கள் ஏற்கனவே ஒருவரைக் காதலித்துக்கொண்டிருப்பார்கள்.

## பாலியல் வல்லுறவுக்கு ஒரு ‘ஊக்கமாத்திரை’



அமெரிக்காவின் கோடீஸ்வரரான அன்ரூ லஸ்டர் மிகவும் உல்லாசமான வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டவர். பணத்தை அள்ளி இறைத்து சுகம் அநுபவிக்கும் சொகுசு வாழ்க்கை. பல வீடுகளுக்குச் சொந்தக்காரர். ஒவ்வொரு வீட்டிலும் தினம் தோறும் புதுப்புதுப் பெண்களோடு கொண்டாட்டம்.

இவரை சாதாரண சொகுசுப் பிரியராக மட்டுமே தெரிந்து வைத்திருந்த பொலிஸாருக்குக் கிடைத்த ஓர் தகவலின் அடிப்படையில் இவரது வீடு சோதனையிடப்பட்ட போது, இவர் பெண்களுடன் உல்லாசமாக இருந்த காட்சிகளைப் படம் பிடித்து சேகரித்து வைத்திருந்த வீடியோ நாடாக்கள் ஏராளமாகப் பொலிஸாரிடம் சிக்கின. இது வழமையானதுதானே என்று விட்டுவிட்ட பொலிஸாருக்கு பின்னர் அந்த வீடியோ கேசட்டுக்களில் ஒரு வித்தியாசம் இருப்பது கிளிக்கானது.

அன்ரூ ல்ஸ்டர் பெண்களுடன் உறவு கொண்ட காட்சிகள் அடங்கிய வீடியோக்களை பொலிஸார் மிகக் கவனமாக அவதானித்தபோது அவர்களுக்கு ஒரு விடயம் தெளிவாகப் புலப்பட்டது.

உறவில் ஈடுபடும் பெண் அதிக மயக்கத்திலோ அல்லது தூக்கத்திலோ இருக்கும் நிலையில்தான் எல்லாம் நடந்து முடிகின்றன.

இது குறித்து மேலும் துப்புத் துலக்கிய பொலிஸாருக்கு அதிர்ச்சி தரும் தகவல்கள் கிடைத்தன. இந்த நபர் தான் அழைத்து வரும் பெண்களுக்கு ஜீ.எச்.பி.என்ற ஒரு வகை மருந்தை கொடுத்து அதன் பின்னர் அவர்களுடன் உறவு கொண்டிருப்பது தெரிய வந்தது.

Date rape Drug என்று அழைக்கப்படும் இந்த வகை மருந்துகளை பல நாடுகளிலும் காமுகர்கள் பாலியல் வல்லுறவுகளின்போது பயன்படுத்துவதாக அறியப்பட்டது.


மருத்துவ விஞ்ஞானத்தில் ஜி.எச்.பி. என்றழைக்கப்படும் இந்த மருந்தின் இரண்டு துளிகளை மதுபானத்திலோ அல்லது ஏதேனும் குடிபானத்திலோ கலந்து ஒருவர் உட்கொண்டால் அவரின் உணர்வுகள் ஆழ்ந்த மயக்கத்திற்குச் சென்றுவிடும். ஆனால் உடற்பகுதிகள் மயக்கமடைந்தவரைப் போன்று இல்லாமல் சற்றுத் துடிப்புடன் இருக்கும். இரண்டு துளிகளுக்கு மேல் இந்த மருந்தை உட்கொண்டால் ஆழ்ந்த உறக்க (கோமா) நிலைக்குச் சென்றுவிடுவார்கள்.

அன்ரூ லஸ்டர் இந்த மருந்தைக் கொடுத்து பல பெண்களுடன் வித்தியாசமான முறையில் உடல் உறவு கொண்டிருப்பது தெரிய வந்திருக்கிறது.

2000ம் ஆண்டில் மிகுந்த பரபரப்புக்கு மத்தியில் ஆரம்பமான இது குறித்த விசாரணையின் இடைநடுவில் இவர் எப்படியோ அமெரிக்காவிலிருந்து தப்பிச் சென்றுவிட்டார். பின்னர் இவர் இல்லாமலேயே விசாரணை நடைபெற்று 124 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அமெரிக்காவிலிருந்து தப்பிச் சென்ற இவரைக் கடந்த வாரம் மெக்சிக்கோவில் கைது செய்தார்கள். இப்பொழுது கம்பி எண்ணுகிறார். இவர் கொடுத்த வாக்குமூலங்களை அடுத்து இந்த வகையான மருந்தைத் தடை செய்யப் பல நாடுகள் தீர்மானித்துள்ளன.

## நன்றி நவிலல்

மலர்வு : 22 - 07 - 1940



உதிர்வு : 11 - 06 - 2003

கலாபூசணம் அமரர்

**திரு.சதாசிவம் தம்பிஜயா**

(அகில இலங்கை சமாதான நீதவான்)

11.06.2003 அன்று எமது இல்லத்தில் நடைபெற்ற அன்னாரின் மரணச் சடங்கில் நேரில் கலந்து கொண்டும் தொலைபேசி, தந்தி மூலமாகவும் அனுதாபங்களைத் தெரிவித்து எமது துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் மற்றும் 11.07.2003 அன்று எமது இல்லத்தில் நடைபெற்ற அந்தியேட்டிக் கிரிகையில் கலந்து கொண்டவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி

இவ்வண்ணம்
எம்.லோகநாதன் (மருமகன்)
004407961592430, (U.K.London)


## ஹோமியோபதி சிகிச்சை

தமிழ்நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணரும் தமிழக அரசின் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினருமான,

Dr. R. தியாகராஜன் D.H.M.S,AMRSH (LON)

நீரிழிவு, ஆஸ்மா, மூட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மைக் குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கிறார்.

காலம் : 20.07.2003 முதல் 24.07.2003 வரை

இடம் : ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ், பம்பலப்பிட்டி.

தொலைபேசி : 585592, 581986.HOTLINE : 0777-602513.

# என்றோ எழுதிவைக்கப்பட்ட உலகின் தலைவிதி

## 21

**இஸ்ரேல் அரை நூற்றாண்டுக்கு முன்னர்தான் பிரகடனப்படுத்தப்பட்டது. யூதர்கள் இந்த நாட்டை உருவாக்கப் பெரும் பாடுபட்டனர். இந்த நாடு உருவான காலம் தொடக்கம் ஆரம்பித்த மோதல்கள் இனிமேல்தான் ஓய ஆரம்பிக்கப்போகிறது.**



இஸ்ரேல்- பலஸ்தீன் பிரச்சினையில் இன்னும் பல சம்பவங்களை இங்கு தருகிறோம்.

உலகின் பல பாகங்களிலும் பரந்து வாழ்ந்த யூதர்கள் 19ம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் தங்களுக்கென ஒரு தனி நாட்டை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று அவாக் கொண்டனர். எங்கெங்கு வாழ்ந்தாலும் அங்கெல்லாம் சிறப்பான தொழில்களை மேற்கொண்டு அவர்கள் அனைவரும் பெரும் செல்வத்தைச் சேர்த்தனர்.

குறிப்பாக அமெரிக்காவில் குடியேறிய யூதர்கள் வட்டிக்குப் பணம் கொடுப்பதிலேயே பெரும் செல்வத்தைத் திரட்டிக் கொண்டனர். 'ஸியோனிஸ்ட் இயக்கம்' என்ற இயக்கத்தை ஆரம்பித்து உலகிலுள்ள சகல யூத மக்களையும் ஒன்று திரட்டினர்.

எப்படியாவது, தாங்கள் ஏற்கனவே வாழ்ந்த இஸ்ரேல் பிரதேசத்தைச் சென்றடைந்துவிட வேண்டும் என்று துடித்தனர். அமெரிக்காவில் வாழ்ந்த செல்வந்தர்களான யூதர்களின் பண பலத்தை ஆதாரமாகக் கொண்டு சிறிது சிறிதாக இஸ்ரேல் பிரதேசத்தில் நுழைந்து அப் பிரதேசத்தில் குடியேற ஆரம்பித்தனர்.

சிரியா, ஜோர்தான், பலஸ்தீன் ஆகிய மக்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பணம் கொடுத்து வாங்கியும், தந்திரமாக அபகரித்தும் இருப்பிடங்களை யூதர்கள் அமைத்துக்கொண்டனர்.

ஹிட்லர் ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்து வந்த யூதர்களை இன ஒழிப்பின் மூலம் அழிக்கத் தலைப்பட்டமையினால் யூதர்களின் தனி நாட்டுக்கான வேட்கையும் அதிகரிக்க ஆரம்பித்தது. இரண்டாவது உலகப் போரின்போது அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகளின் நேசப் படைகளுக்கு யூத மக்கள் பேருதவியாக இருந்தனர். நேசப் படைகளுக்கு உதவியமையினால் யுத்தம் முடிந்ததும் தங்களுக்குரிய நாட்டை மீட்டுத் தர வேண்டும் என்று யூதர்கள் நிபந்தனை விதித்தனர். இதற்கு ஒப்புக் கொண்ட பிரிட்டிஷார், யுத்தத்தில் வெற்றி கண்டு ஹிட்லரை முறியடித்ததும் யூதர்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாயினர்.

பெருவாரியான யூதர்களைக் கப்பல்களில் ஏற்றி மத்தியதரைக் கடலினூடாக அழைத்து வரலாயினர். இந்த நடவடிக்கையை அராபியர்கள் வன்மையாக எதிர்த்தனர். இருப்பினும் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரத்துடன் இஸ்ரேல் தனி நாடாக 1948ம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது.

## நொஸ்ரடாமஸின் அதிசய ஆரூடங்கள்

இஸ்ரேல் உருவாக்கப்பட்ட காலம் தொடக்கம் பலஸ்தீன மக்களுக்கும் யூதர்களுக்குமிடையே தொடர்ந்து மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. ஏறத்தாழ அரை நூற்றாண்டுக்கு முன்னர் இரு சாராருக்குமிடையில் ஏற்பட்ட முறுகல் நிலையால் அவ்வப்போது வன்முறைகள் வெடிக்கத் தொடங்கின.

இத்தகைய வன்செயல்கள் கடந்த

### பிரமிக்க வைப்பது
### ராஜகுமாரன்


சில வருடங்களாக உச்சக் கட்டத்தை அடைந்துவிட்டன. தற்கொலைக் குண்டுதாரிகளின் தாக்கங்கள், யுத்த தாங்கிகளின் தாக்குதல்கள், விமானங்களிலிருந்து குண்டு வீசுதல் போன்ற மோதல்கள் அதிகரித்தமையினால் ஏராளமான உயிர்கள் பலியாகிவிட்டன. இந்த மோதல்களுக்கு முடிவு கட்டுவதற்காகப் பல தடவைகள் அமைதிப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன. இருப்பினும் சமாதானம் நிலைபெற வழி கிடைக்கவில்லை.

இன்றுள்ள நிலையில் அமெரிக்கா போன்ற நாடுகளின் தலையீட்டினால் அமைதிப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

பலஸ்தீன மக்களுக்காக ஒரு பிரதேசத்தை அமைத்து அதனை அவர்களுடைய சொநத நாடாக அமைத்துக் கொள்வதற்கு இஸ்ரேல் நாடும் ஒப்புதல் அளித்துவிட்டது. இருப்பினும் அவ்வப்போது மோதல் ஏற்படுவதும் நின்றபாடாகத் தெரியவில்லை.

நொஸ்ரடாமஸின் எதிர்வு கூறலின்படி, அமைதிப் பேச்சுவார்த்தைகள் மூலம் இரு தரப்பினரும் சமாதானமாக வாழும் காலம் வரும் என்றே கருத வேண்டியுள்ளது. யூதர்கள் இஸ்ரேலை மேலும் மேம்படுத்துவார்கள் என்றும் பலஸ்தீன மக்கள் தங்களுக்கு வழங்கப்படும் நாட்டில் மகிழ்ச்சியாக வசிப்பார்கள் என்றும் நொஸ்ரடாமஸ் தெரிவிக்கிறார்.

கிறிஸ்துவுக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த சொலமன் மன்னரால் ஜெரூசலம் நகரில் பெத்லஹேம் தேவாலயம் நிர்மாணிக்கப்பட்டது. இத்தனை காலம் கடந்த பின்னரும் இன்றும் அத் தேவாலயத்தின் மேன்மை குன்றவில்லை.



யூதர்களுக்கும் பலஸ்தீனர்களுக்குமிடையில் தோன்றிய சிக்கல்களினால் பெத்லஹேம் தேவாலயத்தில் உரிமை யாருக்கு என்ற சர்ச்சைகளும் பூதாகாரமாக எழுந்தன. மிகப் புராதனமான பெத்லஹேம் தேவாலயத்துக்கு பலஸ்தீனப் போராளிக் குழுக்களால் ஆபத்து நேர்ந்துவிடக் கூடாது என்ற நோக்கில் இஸ்ரேல் தனது இராணுவத்தை அனுப்பி அத் தேவாலயத்தை முற்றுகையிட்டிருந்தது.

இரு தரப்பினருக்குமிடையில் அமைதிப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதனால் பெத்லஹேம் தேவாலயத்திலிருந்து இஸ்ரேல் படைகளை இஸ்ரேல் அண்மையில் விலக்கிக்கொண்டுள்ளது.

பலஸ்தீன மக்கள் தமக்கென ஒரு நாட்டை உருவாக்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட கிளர்ச்சிகள் பற்றி எண்ணும்போது பலஸ்தீன விடுதலை இயக்கத்தை ஏற்படுத்தி வழிநடத்திய தலைவர் யசீர் அரபாத் பற்றி அறிந்துகொள்வது அவசியமாகிறது. யசீர் அரபாத் அவர்களைப் பற்றி நொஸ்ரடாமஸ் நானூறு வருடங்களுக்கு முன்னர் தெரிவித்த ஆரூடங்களை அடுத்துப் பார்ப்போம்.

(பிரமிப்புகள் தொடரும்)

# காதிலை பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



**நான் சொல்வ தெல்லாம் மெய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை**
***-காதில பூ கந்தசாமி-***

வணக்கம், வணக்கம். இண்டைக்கு நான் உங்களுக்கு ஒரு புதுச் சமாச்சாரம் சொல்லித்தாறன். கவனமாக் கேட்டுக் குறிப்பெடுத்து வையுங்கோ. பத்திரிகைக்காறர் றேடியோக்காறருக்கு அசல்ச் சாமான். மற்ற வைக்கும் பல காரியங்களுக்குக் கைக்குதவி.

அதாவது நான் சொல்ல வந்த சமாச்சாரம் என்னவெண்டால், அவியல் எண்டு கேள்விப்பட்டிருக்கிறியளோ?

பெண்புரசுகள் உடன ஓமெண்டுவியள். எது? உங்கட அடுப்பங்கரையில, கிழங்க விக்கிற அவியலில்ல இது. இப்ப எங்க அடுப்பங்கரை, எல்லாம் காஸ்தானே, இலக்றிக் சமையலுக்கும் போயிருப்பியள். இது சமையல்ச் சமாச்சாரமில்லையுங்கோ. இது இலக்கியம்!

என்னடா, ஒருத்தருக்கும் தெரியாத புது இலக்கியமொண்டத் தூக்கிப் போடுது இந்தாளெண்டு முழுசாதேங்கோ. இப்பதான் மொடேர்ன் மொடேர்னா பின்னவீனத்துவம் முன்னவீனத்துவமெண்டெல்லாம் இலக்கியச் சமாச்சாரங்கள் றிலீசாகிக் கொண்டிருக்கு. அதில்லை கண்டியளோ இது. இது அதையும் தாண்டிப் புனிதமா... னது!

அதாவது, இதை இலக்கியமெண்டும் சொல்லலாம் கலையெண்டும் சொல்லலாம். ரெண்டையும் சேர்த்துக் கலையிலக்கியமெண்டும் சொல்லலாம். அவியல்! பெயர் கொஞ்சம் தினுசாத்தான் இருக்கும். ஆனால் விஷயமெண்டால் சங்குதான்!

இனியும் நான் விஷயத்தைச் சொல்லாட்டால் சங்கால எறிஞ்சும் மண்டையுடைப்பமெண்டுதான் நிப்பியள். ஓ.கே. இறங்கிறன்.

அவர் நல்ல மனிசர். எல்லாருக்கும் பாரபட்சமில்லாமல் உதவிறவர். அவற்றை மரணம் தமிழ் மக்களுக்குப் பேரிழப்பு.

என்ன, முழுசுறியள். இப்பிடி ஒரு செய்தி மரணமடைந்த மிஸ்டர் எக்ஸ்ஸைப் பற்றி வருகுதெண்டு வையுங்கோ.

மிஸ்டர் எக்ஸ் சாதாரணமாய் இறந்திருந்தால் உப்பிடிச் செய்தி வரலாம். பறவாயில்லை. தற்சமயம் அவர் சாதாரணமாய்ச் சாகாமல் அவற்றை சிந்தனை ஒரு துப்பாக்கியால நிறுத்தப்பட்டிருந்தால்...

எப்பிடி அவரை நல்ல மனிசரெண்டு எழுத முடியும்? முடியாதெல்லே! ஆனாலும் நல்ல மனிசரொருவரைத் திடீரெண்டு பழி சொல்லுறதும் கஷ்டம். சனமும் எடுத்தாப்போல எழுதிற எல்லாத்தையும் ஏற்காது.

அப்பதான் அவியல் கலை அவசியப்படுகுது. ஒரு நல்ல மனிசர், இப்பிடிச் சிந்தனை நிறுத்தப்பட்டால் அவருக்கு எப்பிடித் துரோகி எண்ட பட்டத்தை நைசாக் கட்டுறது எண்ட வித்தைதான் அவியல். அவிக்கிற தெண்டால் என்ன எண்டால், கிழங்கைத் தண்ணியில வேக வைக்கேக்க அதின்ர இறுக்கம் தளர்ந்து நொது நொதுத்துப் போகுதெல்லே. அதப்போல, ஒரு நல்ல மனிசர் பற்றிய நல்ல அபிப்பிராயத்தை எப்பிடி நொதுநொதுக்க வைக்கிறதெண்ட கலையை இலக்கியத்தில அப்ளை பண்ணேக்க உருவான செல் நெறிப் போக்குத்தான் இந்த அவியல்! (கம்யூனிஸ்டுகளின்ர பாசையில சொன்னால் டயலட்டிக்கல் மெட்டீரியலிஸம்!)

'அவர் நல்ல மனிசர்...' எண்டு தொடக்கத்தக் கொஞ்சம் மாத்தி 'அவர் நல்ல மனிசர்தான்...' எண்டு ஒரு 'தானை' முதலில சேர்க்க வேணும். (இதுதான் அவியலின் ஆரம்பம். இலக்கியம் முத்திப்போனவை இதைப் பிராரம்பமெண்டும் புரியாத மாதிரி எழுதலாம். -புரியாமல் இருக்கிறதுதான் சிறந்த இலக்கியம்.)

இந்தத் 'தான்' என்ன செய்யுதெண்டால், நல்ல மனிஷர் எண்ட சொல்லை ஒரு சிலாண்டாய்ச் சரிச்சு, 'அவ்வளவு நல்லாளில்லை' எண்ட ஒரு தினிசில மாத்தித் தரும்.

அடுத்த ஸ்ரெப் என்னவெண்டால்.

ஆனால்!

அதாவது ஒரு ஆனாலைச் சேர்க்க வேணும்.

'அவர் நல்ல மனிசர்தான், ஆனால்....'

பிறகு, 'அணங் மணங்' சேர்க்க வேணும். அட சிங்களத்தில சொல்லிப் போட்டன். அதாவது அதை இதைச் சேர்க்க வேணும்.

'அவர் இந்தியாவோட கொஞ்சம் தொடுசலாம். அங்கால, அரசாங்கத்தோட கொஞ்சம் உரசாலம்' அப்பிடியிப்பிடியெண்டு கொஞ்சம் அரசல் புரசலான கதைகளைக் கிள்ளிப் போட்டுட்டு, 'ஆனாலும் ஆள் தனிப்பட்ட முறையில நல்ல மனிஷன்' என்று பிணைக்க வேணும்.

இதால, அவரை நல்ல மனிஷனெண்டு சொல்லுற நீங்கள் அவர் பற்றிப் பொல்லாப்புச் சொல்ல மாட்டீங்கள் எண்ட எண்ணத்தை ஏற்படுத்திறது ஒரு பொயின்ட். அடுத்தது, தனிப்பட்ட முறையில நல்ல மனிஷன் எண்டதப் புரட்டிப் பாத்தால், 'பொது விஷயத்தில கெட்ட மனிஷன்' எண்டு சொல்லாமல் சொல்லிவிடுறதாயும் ஆயிடும்.

இது நேரடி அட்டாக்கை விட நுணுக்கமான நவீன முறை. எங்கட தமிழ்ப் பத்திரிகைக்காறருக்கு வலு உபயோககரமான கலை. நாங்கள் பெருமையா இலக்கிய உலகத்துக்கு அறிமுகப்படுத்த வேண்டிய விஷயம். இன்னும் கொஞ்சம் டெவலப் பண்ணி இதின்ர தப்ப நுட்பங்கள எழுதினால் இலக்கியத்துக்கான அடுத்த நோபல் பிறைஸ் எங்களுக்குத்தான். நல்லாப் பிரக்டிஸ் பண்ணிப் பழகுங்கோ. பேரெடுக்கேக்க என்னையும் கொஞ்சம் மனசில நினைச்சுக் கொண்டால் சரி!

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்தவாரம் உங்கள் பலன்

**20.06.2003 தொடங்கி 26.07.2003 வரை**

### சோதிட மாமணி தில்லை

**கிரக நிலை**

**மிதுனம்**- சூரியன், புதன், வியாழன், **விருட்சிகம்**- கேது,
**கும்பம்** - செவ்வாய், **இடபம்** - இராகு, **மிதுனம்** - சனி, வெள்ளி
சந்திரன் மீனம், மேடம், இடபம், மிதுனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்

**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி, புதிய இலாபம், வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை, உத்தியோகப் பேறு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 05

**இடபம் :** (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் உயர்ச்சி, இனசன விரோதம், கடன்படல், பிரயாண மிகுதி, தேகசுகக் குறைவு, உத்தியோகச் சிக்கல், மறைமுக எதிர்ப்பு, மாணவர் கல்வி குழப்பம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**மிதுனம் :** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) மனக்குறை அதிகம், குடும்பக் கலகம், வீண் பிரயாசம், தொழில் மந்தம், செலவு மிகுதி, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07

**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் உயர்ச்சி, வருமானம் பேறு, புதிய முயற்சி, மனமகிழ்ச்சி, அன்னியர் சகவாசம், பிரயாணக் கஷ்டம், உத்தி யோக முயற்சி, பதவி மாற்றம், மாணவர் கல்வி சிறப்பு, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 04

**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) செய் தொழில் நன்மை, காரியானுகூலம், இனசன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை, தந்தை வழி கவலை, உத்தியோகச் சிக்கல், வீண் குறை கேட்டல், மாணவர் கல்வி மாற்றம், வெளியிடக் கல்வி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 05

**கன்னி :** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் கலக்கம், அன்னியர் சகவாசம், பணச் செலவு, காரியத் தடை, பெரியோர் உதவி, உத்தியோக நன்மை, பதவி சிறப்பு, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 04

**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழில் சிக்கல், செலவு மிகுதி, பணவரவு குன்றும், மறைமுக எதிர்ப்பு, உத்தியோக மாற்றம், மனக் கவலை, மாணவர் கல்வி நன்மை, புதிய கல்வி சேரும், விவசாயிகள், வியாபாரிகள் முதலீட்டு கஷ்டம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 03

**விருட்சிகம் :** (விசாகத்து நாலாங் கால், அனுஷம்,கேட்டை) முயற்சி பலிதம், தொழில் சிறப்பு, உறவினரால் தொல்லை, வீண் விரயம், பயனற்ற செயல், உத்தியோகச் சிறப்பு, புதிய பதவி கிடைத்தல், மாணவர் கல்வி ஏற்றம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி,
அதிர்ஷ்ட இலக்கம்:- 06

**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் நன்மை, பணவரவு, காரியானுகூலம், பெரியோர் உதவி, வெளியிடப் பயணம், உத்தியோகக் கஷ்டம், வீண் பிரயாசம், மாணவர் கல்வி உயர்ச்சி, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 02

**மகரம் :** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் உயர்ச்சி, கௌரவம், பணக் கஷ்டம், குடும்பக் கலகம், மனக்குறையதிகம், உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், கடின உழைப்பு, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 05

**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) தொழில் கஷ்டம், பணச் செலவு, காரியானுகூலம், பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி,
அதிர்ஷ்ட இலக்கம்:- 06

**மீனம் :** (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் நன்மை, பணவரவு, வெளியிட வாழ்க்கை, அன்னியர் சகவாசம், கௌரவக் குறைவு, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி சிறப்பு, பரீட்சைகளில் நற்பேறு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

Regd. as a News Paper at the G.P.O. (QD/81/News/2003)






# குட்டை




"நாம் கண்ணாடிகளில் எங்கள் இருவரையும் பார்த்துக்கொள்வதை விரும்பவில்லை. ஒருவர் முன்னே ஒருவர் நின்று முகம் பார்த்து மகிழ வேண்டும்"

சத்திரசிகிச்சைக்கு சற்று முன்னதாக ஈரானிய சகோதரிகள் இப்படிக் கூறினார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அப்படி ஒருவர் முகத்தை மற்றவரால் பார்க்க முடியவில்லை. அதற்கு முன்னர் அவர்கள் வாழ்வு முடிந்துவிட்டது.

இந்த இருவரும் உலகத்தினரின் அன்பை இந்தளவு பெறுவார்கள் என்று யார்தான் எதிர்பார்த்திருக்க முடியும்...?

சிங்கப்பூரும், ஈரானும் மட்டுமல்ல முழு உலகமும் அழுதது! துணிவு, விட்டுக்கொடுப்பு என்ற சொற்களை இவர்கள் அர்த்தப்படுத்தினார்கள்.

ஓரிரண்டு நாட்களல்ல. 29 ஆண்டுகள் இந்த இருவரும் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியாமல் ஒவ்வொரு உணர்வுத் தேவைகளையும் பங்குபோட்டுக் கொண்டு வாழ்ந்து காட்டினார்கள். ஒருவருக்குத் தூங்க வேண்டும் என்றால் அடுத்தவர் ஒத்துழைத்தாக வேண்டும். இவர்களுக்கிடையில் ஆழமான அழகிய அன்பு இருந்தது.

தெற்கு ஈரானில் ஏழை விவசாயி ஒருவருக்கு லாடனும், லாலேயும் பிறந்தார்கள். ஈரான் புரட்சியின்போது ஏற்பட்ட கலவரங்களில் காணாமல் போன இவர்கள் பின்னர் 'கராஜ்' என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்டு ஈரானிய மருத்துவர் ஒருவரால் வளர்க்கப்பட்டார்கள்.

இவர்களது வாழ்க்கை முழுவதும் சோதனைகள்தான்! இந்த இருவருக்கும் தனித்தனியான பிறப்புச் சான்றிதழ்களை வழங்க ஆரம்பத்தில் ஈரான் அதிகாரிகள் மறுத்துவிட்டனர். ஆனால் வளர்ப்புத் தந்தையின் பலத்த முயற்சியால் இரு வேறு நபர்களாக லாடனும், லாலேயும் பதிவு செய்யப்பட்டனர். எவ்வாறெனினும் இந்த ஆபத்தான சத்திரசிகிச்சைக்கு இந்த சகோதரிகளின் தந்தை இணங்காததினால் அவருடன் முரண்பட்டனர். என்றாலும் சத்திரசிகிச்சைக்கு முன்பாகத் தமது உண்மையான தந்தையை இவர்கள் சென்று பார்வையிட்டதாகக் கூறப்படுகிறது.

லாடனையும், லாலேயையும் சிகிச்சைக்கெனக் கூட்டிச் சென்று கொன்றுவிட்டதாக அவர்களது வளர்ப்புத் தந்தை குற்றஞ்சாட்டினார். மரணச் செய்தி அறிந்ததும் அவர் கதறி அழுததாகத் தெரிவிக்கப் படுகிறது.

---



# வேகமோ வேகமோ...

வட அமெரிக்க காடுகளில் வாழும் ஒரு வகை முதன்னிலைப் புழு இது. (Antheraes Poloyphemus) பின்னர் வளர்ந்து பூச்சியாக மாறும். உலகிலேயே மிகவும் வேகமான ஆரம்பகட்ட வளர்ச்சியைக் கொண்ட உயிரினம் இவைதான்.

இந்தப் புழு, அது பிறந்து முதல் 56 நாட்களில் அதன் பிறப்பு நிலை எடையை விட 86,000 மடங்காக வளருமாம். அதாவது இது வளர்ந்துகொண்டு செல்வதை சாதாரண கண்களால் அவதானிக்கக் கூடியதாக இருக்கும். ஒரு கட்டத்தின் பிறகு இதன் வளர்ச்சி வேகம் சடுதியாக நின்றுவிடும்.

இந்தப் புழு வகையின் வேகத்துக்கு மனிதன் வளர்வானானால்.... ஒரு குழந்தையின் 3.17 கிலோ கிராம் சராசரி பிறப்பு நிறை... 56 நாட்களில் 273 தொன்களாக அதிகரிக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

(இரண்டு மாத வயதுக் குழந்தையைத் தூக்க பாரிய கிரேன் கொண்டுவர வேண்டியிருக்கும்)

---

## 5வது பிறந்தநாள் வாழ்த்து

புத்தூர் கிழக்கை பிறப்பிடமாகவும் சுவிஸ் பாசல் மாநிலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.திருமதி ஜோர்ஜ் சுதா தம்பதிகளின் புத்திரி செல்வி நிதுஷ்கா தனது ஐந்தாவது பிறந்த நாளை 08.07.2003 அன்று தனது இல்லத்தில் வெகு சிறப்பாக கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, தங்கை [illegible], இலங்கை அப்பம்மா, இத்தாலி [illegible] அப்பப்பா, அம்மம்மா, [illegible], [illegible] மாமா, [illegible] sooden பெரியப்பா, இந்தியா பெரியம்மா, [illegible] அண்ணா, [illegible] அண்ணா, இலண்டன் மாமா, அத்தை, [illegible], [illegible], [illegible] பெரியப்பா, [illegible] பெரியம்மா, [illegible] அக்கா, [illegible] அக்கா, [illegible] அண்ணா, இலண்டன் [illegible] அக்கா, [illegible] அண்ணா, [illegible] அண்ணா, கொழும்பு பெரியப்பா, பெரியம்மா, [illegible] அண்ணா இலங்கை ஆசை பெரியப்பா, பெரியம்மா, [illegible] அக்கா, [illegible] அண்ணா, [illegible] அண்ணா, இளைய பெரியப்பா, பெரியம்மா, [illegible] அக்கா [illegible] அக்கா, அம்மிக்க தம்பி Hospital பெரியப்பா, பெரியம்மா, [illegible] அக்கா [illegible] தங்கை, ஆசை தாத்தா மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் சிறப்புற்று வாழவென நிதுஷ்காவை வாழ்த்துகின்றார்கள்.



செல்வி நிதுஷ்கா
08.07.2003

தகவல்: [illegible] மாமா
Mr.&Mrs. M. Yoharajah (Jorsh), Haupt str 126, 4415 Lausen, Switzerland.

---

## 1வது பிறந்தநாள் வாழ்த்து

பிரான்ஸ் திரு.திருமதி [illegible] தம்பதிகளின் [illegible] தனது முதலாவது பிறந்த நாளை 07.07.2003 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினார். [illegible] அப்பா, அம்மா, [illegible] கலட்டியில் இருக்கும் அப்பா, அம்மா, திருநெல்வேலி [illegible] பெரியப்பா - பெரியம்மா, [illegible] பெரியப்பா - விஜயா பெரியம்மா, [illegible] மாமா - பெரியதகை, சந்திரசேகரன் மாமா - [illegible] அத்தை, நல்லூரில் இருக்கும் சிறி பெரியப்பா - சக்தி பெரியம்மா, கலட்டி சிறி பெரியப்பா - கருணா பெரியம்மா, மோகன் பெரியப்பா - ராதா பெரியம்மா, ஆறுகால்மடம் குமார் சித்தப்பா - கிருஷா சித்தி, [illegible] மாமா, [illegible] சித்தி, லண்டன் பெரிய மாமா, ஜேர்மனி [illegible] மாமா - [illegible] அத்தை, இந்தியாவிலிருக்கும் பரஞ்சோதி பெரியப்பா - உமா பெரியம்மா, அக்காமார், அண்ணன்மார், [illegible], மச்சான்மார், மச்சாள்மார் இவர்களுடன் பிரான்ஸில் இருக்கும் மாணிக்கம் மாமா - ராணி அத்தை, அப்பி மாமா - [illegible] அத்தை, மச்சான்மார் - சிந்து, [illegible], பாரதி, [illegible], ஆரதிகா, மச்சாள் [illegible] மற்றும் உற்றார், உறவினர்கள் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.



செல்வன் அலக்ஷன் | 07.07.2003

தகவல்: [illegible] (ராஜன்), கொழும்பு.

---

## 1வது பிறந்தநாள் வாழ்த்து

செல்வன் ஜெனீவன் | 18.07.2003



[illegible] Switzerland [illegible] Fribourg [illegible] 18.07.2003 அன்று [illegible] வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: [illegible], தொலைபேசி: 0041264022198



இப்பத்திரிகை கொழும்பு-[illegible], [illegible] ஜூலை 20ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.